# நீதி கேட்டு நெடியபயணம்

கலைஞர் மு. கருணாநிதி

பாரதி நிலையம்
தியாகராய நகர் :: சென்னை 17

முதற்பதிப்பு ஏப்ரல் 1981

விலை ரூ 4–00

பி. ஆர். வி. பிரஸ் 143 பெரிய தெரு, சென்னை–5.

# முன்னுரை

என் உயிரினும் மேலான

அன்பு உடன்பிறப்பே!

உருவத்தால் அண்ணன் நம்மிடையே
உலவிடவில்லை எனினும் நம் உணர்வுகளோடு
ஒன்றிக் கலந்து நம்மைத் தலைமையேற்று
வழி நடத்துகிறார் என்ற உத்வேகத்தோடு
மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை
இருநூறு கிலோ மீட்டர் தொலைவு
எட்டு நாட்கள்—நீதி கேட்டு
நெடிய பயணத்தை அவரைத் தொழுதேத்தித்
தொடர்ந்திட்டோம்!
இன்று நேற்றல்ல
அறுபது ஆண்டுகளுக்கு மேலாகவே—
ஆயிரங் காலத்துப் பயிராம்
நமது பேரியக்கம் அரசியல் துறையில்—
சமுதாயத் துறையில்—பொருளாதாரத் துறையில்
நீதி கேட்டு நெடிய பயணத்தை;
கொடிய எதிர்ப்புக்களுக்கிடையே
நடத்திக் கொண்டு தானிருக்கிறது!......

இது நமது வரலாற்றில்
மாப்புகழ் படைத்த—மறக்க முடியாத
ஒரு நிகழ்ச்சி!
பார் சிறுத்ததால் படை பெருத்ததோ—
படை பெருத்ததால் பார் சிறுத்ததோ—
என்று வியப்புறும் வண்ணம்
பாண்டியன் தலைநகரில்
உதய சூரியனின் ஒளிக்கதிர்களென

பரவி யெழுந்தது பார்
நமது பாசமிகு
கழகப் பட்டாளம்!
குருடரும் கூறிடார்
இஃதோர் குறைந்த கூட்டமென்று!
வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரங் கொள் கூட்டம்—
உள்ளத்தால் ஒருவரே மற்றுடலினல்
பலராய்க் காண்பார்
என்ருரே கவிஞர் பெருமகன்;
அந்தக் கூட்டம்!
இதற்கு கொள்கை யொன்றே நாட்டம்!
நமது மண்ணில் இருக்கலாமா வாட்டம்
என்று
நடமாடும் பகுத்தறிவுக் கோட்டம்!
பேரன்பு கொண்டவர்கள்—
பெரியோர்கள்—
பெற்ற தாய்மார்கள்—
உற்ற உடன்பிறப்புக்கள்—
இளஞ்சிருர்—சிறுமியர்—மழலைகள்
அனைவருமே அகமகிழ்ந்து
பொழிந்திட்ட அன்பு மழையில்
கரைந்திட்டது துன்ப மெலாம்!
பறந்திட்டது கடும் வலியும் கூட!
அன்னை, அக்காள், தங்கை போன்ருேர்
என்னையா வாழ்த்தினர்?
உடன்பிறப்பே!
உன்னையன்ருே வாழ்த்தினர்?
அவர்கள் எடுத்த
ஆரத்தியெலாம்
நமது கொள்கைக் குடும்பத்தின்
ஆர்வத் தீயன்ருே!
எத்தனை பற்று! எத்துணை பந்தம்!

இத்தரை மீது இப்படியொரு பாசக் குடும்பம்—
பத்தரை மாற்றுப் பொன் போல்
எங்கே உண்டு?

இங்கே தான் உண்டு—அதனாலே
கடும் பயணமும் நமக்குக் கற்கண்டு!
நீ இருக்கும் போது—
உன் நெஞ்சில் நானிருக்கும் போது—
இடர்கள் எத்தனை படர்ந்தால் தான் என்ன?
தொல்லை துயரங்கள்
எத்தனை துளைத்தால் தான் என்ன?
நெருப்பிலிட்ட தங்கம் போல்
ஒளி உமிழும் ஒப்பற்ற இயக்கமன்றோ
நமதியக்கம்!

அறம் தழைக்க—அநீதி அகன்றிட—
பணி புரிவோர் அணி வகுத்தனர்
இலட்சோப லட்சமாய்; ஆகா!
அலைகடலின் கொந்தளிப்போ!
அகண்ட காவேரி தான்
வைகை நதி தீரத்தில் வந்து நுழைந்ததுவோ!
"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங் கயற்கண் விழித் தொல்கி
நடந்தாய் வாழி காவேரி"
என்றான் செங்குட்டுவனின் தம்பி
சிலப்பதிகாரம் தந்த செம்மல் இளங்கோ அடிகள்!
"நடந்தாய் வாழி என் கண்மணியே"
என்று உனைப் பார்த்து,
உடன் பிறப்பே என அழைத்து
என் நா அசைந்திடும் போது
என் நெஞ்சமெலாம்
எப்படி இனிக்கிறது தெரியுமா?
இதோ!

இரு வண்ணக் கொடிகளிடையே
இஸ்லாம் மக்களின்
இளம்பிறைக் கொடிகளும்
சங்கம மாயின!
வாழ்த்து முழக்கங்கள்
புதிய வலுவினை வழங்கின!
வழி நெடுகிலும் வரவேற்ற காட்சிகளோ
வற்றாத உற்சாகத்தை—
வாடாத நினைவுகளை—
நெஞ்சில் நட்டன!
வீதியின் இருபக்கமும்
நின்றோர்—
ஆடவர் பெண்டிர்—நீதியின் பக்கமே
எங்கள் நீள்கரம் அசையும்
என்றனர். அன்பால் வென்றனர்.
பண்பாய் போற்றினர்.
இப்படை தோற்கின்
எப்படை வெல்லும்?
என்று அடிக்கடி கேட்பாரே அண்ணன்;
அப்படையின் எழுச்சி யன்றோ!
என் இதயமெலாம்
மலையருவி போல் மகிழ்ச்சி யன்றோ!
பாதையிலே உணவு—
பந்தலிலே சாப்பாடு—பல லட்சம்
பேருக்குப் போதுமா இந்த ஏற்பாடு?
ஆயினும் என்ன?
அயர்வு சிறிது மின்றி
அடலேறு நடை போட்டாய்!
இடையிடையே கூத்தும் இசையும்
கொட்டும் மேளமும்
களைப்பினை யாற்றும்
மாமருந்து களாயின!
வளம் மலிந்த பகுதியில்

காவேரி நடந்தாள்—நடக்கிறாள்—
நீயோ;
வறண்ட நிலப் பகுதியில் அல்லவோ,
கொளுத்தும் வெயிலில்,
தகிக்கும் சாலையில்
காலூன்றி நடந்திட்டாய்......
ஒரு நாளா? இரு நாளா?
எட்டு நாட்கள்!
ஒன்றா? இரண்டா?
இரு நூறு கிலோ மீட்டர்கள்!
இரண்டு லட்சம் உடன் பிறப்புக்கள்!
ஈரோட்டுத் துணிவையும்
காஞ்சியின் கனிவையும்
கருத்தில் ஏந்தி
நம் கால்கள் நடை போட்டன!
வளமிகு இதயத் தோட்டத்து மலர் எடுத்து
வாழ்த்தியோர்க்கெல்லாம் வாழ்த்துரைப்போம்!
வணக்கம் சொல்வோம்!
நீதி கேட்போம்!
நிமிர்ந்து நடப்போம்!
தேடிச் சென்ற திருச்செந்தூர்!
வண்ண விளக்குகளா?
எண்ணப் பொழிலின் எழிலார் வடிவமா?
உடல் நலிவு
உட்கார வைத்துப் பேசச் செய்தது!
ஆனால்—
உடன் பிறப்புக்கள் வழங்கிய உள்ள வலிவோ,
உறுதியைப் பல மடங்கு பெருக்கியது!
செந்தூர்க் கடற்கரையுடன் நமது பயணம்
முழுமை அடைந்து விடவில்லை!
இது தொடர் பயணம்!
தொல்லைகள் தொகை தொகையாக

வரினும்

"தூ" என்றிகழ்ந்து விட்டுக்
குறிக்கோளை நோக்கி

கால் கொப்பளித்தாலும்—
காட்டாறுகள் குறுக்கிட்டாலும்—
கடும் சோதனைகள் எதிர்ப்பட்டாலும்—
தூக்குமேடையே வரவேற்றாலும்—
அனைத்தையும் ஏற்க
அண்ணா வழியில் அமைதி பூண்டு—

புய'லின் வேகத்தைப்


புன்னகையால் தடுத்திடும் பயணம்!

* * *

இந்தப் பயணத்தையொட்டி நான் ஆற்றிய உரைகளை நூல்வடிவில் தொகுத்திட்ட தமிழ்க்கனி பதிப்பக உரிமையாளர்க்கும் வெளியிட்ட பாரதி நிலையத்தார்க்கும் என் நன்றி

சென்னை, 68
23-4-82

மு. கருணாநிதி



# "அண்ணா உங்கள் தாள்பணிந்து பயணம் தொடங்குகிறேன்"

"இன்றைய தினம், நாட்டிலே அநீதி அகல நாம் நெடிய பயணம் மேற்கொள்கிறோம்!

நேற்றிரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நானும் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டது போல் இந்தப் பயணத்தில் அமைதி காத்திட வேண்டும்! ஒரு சிறு துளி அசம்பாவிதத்திற்கும் இடம் கொடுக்கக் கூடாது.

இப்பயணத்தில் நீங்கள் எழுப்பும் முழக்கங்களில் தனிப்பட்டவர்களைத் தாக்கக் கூடாது,

"எம். ஜி. ஆர். அரசே! நீதி வழங்கு!" என்ற முழக்கம் எழுப்பலாமே தவிர, எம். ஜி. ஆர். அரசு ஒழிக—வீழ்க என்ற முழக்கங்களை எழுப்பக் கூடாது!

நெடிய பயணத்தில் ஆபாச உருவங்களை—யாரையும் கேலி செய்யும் சித்திரங்களை ஏந்தி வரக்கூடாது!

நமது இயக்கத்தில் நீண்ட நெடுங்காலமாகக் கட்டிக் காத்து வருகிற பண்பும் மரபும் மாண்பும் வெற்றியடைகிற வகையில் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும்!

அண்ணா அவர்களே! நீங்கள் இருந்து இந்தப் பயணத்தைத் தொடக்கி வைக்கவில்லை என்றாலும், எங்கள் ஊனோடும் உயிர் மூச்சோடும் கலந்து நிற்கிற உங்கள் தாள்பணிந்து இந்தப் பயணத்தைத் தொடர்கிறோம்!"

*இவ்வாறு 15—2—81 காலை 7—15 மணியளவில் மதுரை யானைக்கல் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு நெடிய பயணத்தைத் துவங்கும் போது தலைவர் கலைஞர் கூறினார்.*

# பால் கமிஷன் அறிக்கை விவாதம்

## சட்டப் பேரவையில் கலைஞர் உரை

## 13—2—82

தமிழகச் சட்டமன்றத்தில் பால் கமிஷன் அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் பங்குகொண்டு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் பேசியதாவது:—

மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள நீதிபதி பால் அவர்களுடைய அறிக்கையை குறித்தும் அதன் தொடர்பாக அல்லது அதற்கு மேலாக என்று எண்ணிக் கொண்டு வைக்கப்பட்டுள்ள தலைமைச்செயலாளர் திரவியம் அவர்களுடைய அறிக்கையை குறித்தும் நடைபெறுகின்ற விவாதத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்துக்களை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள் திருச்செந்தூரில் சுப்பிரமணிய பிள்ளை இறந்தது குறித்த செய்தி வெளிவந்தது. அந்தச் செய்திகளோடு, அது மர்ம மரணம் என்றும், தற்கொலை என்றும், கொலை என்றும், பல்வேறான செய்திகள் வெளிவந்தன.

இங்கே பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல தி. மு. கழகம் மாத்திரம் இதை தங்களுக்குரிய பணியாக எடுத்துக் கொள்ளாமல் அந்தப் பகுதியிலே உள்ள அனைத்துக் கட்சிகளும் இந்த மர்ம மரணம் பற்றி அரசு உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுத்து ஆய்வு செய்து அதனை உலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தன. அதனுடைய தொடர்பாகத்தான் இன்றைக்கு இந்த மாமன்றத்திலே கூட எட்டு அல்லது ஒன்பது கட்சிகள்—ஆளும் கட்சியைத் தவிர என்று கூடச் சொல்லலாம்—அனைத்துக் கட்சிகளும் இந்தக் கோரிக்கையை முன் வைத்து சரியான நீதி, நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதிலே அழுத்தந்திருத்தமாக வாதாடுகின்ற காட்சியை நாம் காண்கிறோம்.

சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் மர்மமாக மரணம் அடைந்திருக்கிறார் என்ற தகவலை உலகத்திற்கு அறிவித்து, அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென

ஆலய ஊழியர்களுடைய சங்கத்தினர் தீர்மானம் நிறை வேற்றி அனுப்பி வைத்தார்கள்.

அந்தப் பகுதியிலே உள்ள எல்லாக் கட்சிகளுமே சேர்ந்து மாவட்ட அளவிலே உள்ள நிர்வாகிகள், தலைவர்கள் கண்டனக் கூட்டங்களை நடத்தினார்கள்; ஊர்வலங்களை நடத்தினார்கள்.

டிசம்பர் இரண்டாம் தேதி அன்று திருச்செந்தூரில் ஒரு முழு கடையடைப்பு-வேலை நிறுத்தம் என்ற அளவிற்கு நடைபெற்றது.

இவ்வளவும் நடந்து முடிந்து, டிசம்பர் 3-ஆம் தேதி வரையிலே அமைதியாக இருந்த நான்—இப்படி பல்வேறு செய்திகள் வந்த பிறகு, பிரதமருக்கும் மத்திய உள்துறை அமைச்சர் ஜைல்சிங் அவர்களுக்கும் தமிழக ஆளுநர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் பின்வருமாறு ஒரு தந்தியினை அனுப்பினேன்.

3—12—80

## TELEGRAM

To

The Hon'ble Prime Minister,
Zail Sing, Home Minister,
Governor of Tamil Nadu,
Chief Minister of Tamil Nadu.

Subramaniya Pillai—Jewel Verification Officer—Cum—Assis tatCommissioner of Hindu Religious and Charitable Endowment Department of Tirunelveli found dead under mysterious circumstances on 26th November at Subramaniyaswamy Devasthanam, Inspection Bungalow, Tiruchendur. All political parties suspect murder. Trust Board Mambers absconding Harthal by public by 2nd December at Tiruchendur demanding proper investigation and enquiry. Please intervene Cause proper investigation and enquiry by independent C. I. D. Branch.

M. KARUNANIDHI.
President, D. M. K.

என்ற இந்தத் தந்தியை நம்முடைய முதலமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் நான் அனுப்பினேன். எனவே எடுத்த எடுப்

பிலேயே சி. பி. ஐ. விசாரணை வேண்டும் என்ற அளவிற்கு நான் போகாததற்குக் காரணம் அல்லது கழகம் கருதாதற்குக் காரணம் இங்குள்ள நேர்மையான காவல்துறை அதிகாரிகளைக் கொண்டே இந்த விசாரணையை இந்த அரசு நடத்தும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான்.

## வீரப்பன் பேட்டி

ஆனல் 3ம் தேதி இப்படிப்பட்ட ஒரு தந்தியை எதிர்க்கட்சியின் தலைவன் என்ற முறையில் நான் அனுப்பியதற்கு மறுநாள், டிசம்பர் 4-ஆம் தேதி அறநிலையத்துறை அமைச்சர் அருமை நண்பர் ஆர். எம். வீரப்பன் அவர்கள் நிருபர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, அதிலே தன்னுடைய கருத்துக்களையும், அதிகாரிகள் தந்த அறிக்கைகளையும் எடுத்து வைத்தார். அவருடைய கட்சி ஏடான அண்ணா பத்திரிகை 4-12-80ஆம் தேதி ஏட்டிலே, ''திருச்செந்தூரில் நடந்தது என்ன?'' ''இறந்த வரை வைத்து கருணாநிதி நடத்தும் அரசியல் மோசடி'', ''ஆர்.எம் வீ. கடும் கண்டனம்'' என்ற தலைப்போடு ''திருச்செந்தூரில். உண்டியல் எண்ணும்போது நடந்த சம்பவம் பற்றி செய்திகள் வந்துள்ளன நேற்று முதல் எதிர்க்கட்சி தலைவர் அந்த விஷயத்தை. எடுத்துக்கொண்டிருக்கிறார்.

அடிப்படையே இல்லாத ஆதாரம் ஏதும் இல்லாத—முழுப் பொய்யை ஜோடித்து ஒரு கற்பனைக் கதையை எதிர்க்கட்சித் தலைவர் உருவாக்கி இருக்கிறார் அனைத்திந்திய அண்ணா தி. மு. கழக ஆட்சி மீதும், அறங்காவலர்கள் மீதும் பழி போடும் வேலையில் எதிர்க்கட்சித் தலைவர் ஈடுபட்டுள்ளார்.

பெரிய கொலை நடந்திருப்பதாக பிரதமருக்கு அவர் தந்தி கூட அனுப்பியிருக்கிறார்.

(நான் முதலமைச்சருக்கும் தந்தி அனுப்பினேன். ஆனல் அமைச்சர் இப்படிக் குறிப்பிடுகிறார்.)

பொறுப்பற்ற முறையில் இப்படிப்பட்ட செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அங்கே என்ன நடந்தது என்ற உண்மை விவரங்களை அரசின் சார்பில் வெளியிட கடமைப் பட்டுள்ளோம். இந்தச் சம்பவம் நடந்தபோது அங்கே 50, 60 பேர் இருந்திருக்கிறார்கள்.

அங்கே நடந்த சம்பவம் குறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை உயர் அதிகாரியும்

அறிக்கை அனுப்பியுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ள அறிக்கையில் கூறி இருப்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

—என்று கூறிவிட்டு அதற்குப் பிறகுதான் அறிக்கையை அமைச்சர் படிக்கிறார்.

அதுவரைக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குரிய அர்ச்சனை நடைபெறுகிறது.

அந்த அறிக்கையில் சுப்பிரமணிய பிள்ளை உண்டியலைத் திருடினார் என்றும், அதன் காரணமாக ஓடி ஒளிந்தார் என்றும், அவரைத் துரத்திச்சென்று பணத்தைக் கைப்பற்றினார்கள் என்றும், அவமானம் தாங்கமாட்டாமல் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும், கூறப்பட்ட அந்த அறிக்கையை அமைச்சர் படித்து முடித்துவிட்ட பிறகுநிருபர் கேட்கிறார்.

நிருபர்: அந்த அதிகாரி உடலில் இரத்தக்கறை இருந்ததாக கருணாநிதி எழுதி இருக்கிறாரே?]

வீரப்பன்: யார் யாரோ எதையெல்லாமோ எழுதுகிறார்கள். ரத்தக்கறை எதுவும் இல்லை. அந்த அதிகாரி வராமலேயே உண்டியல் உடைக்கப்பட்டதாகக் கூட எழுதுகிறார்கள். ஆனால் அந்த அதிகாரி முதல் நாள் இரவே பியூனுடன் வந்து அறையில் தங்கி இருக்கிறார். அவர் பார்த்த பிறகுதான் உண்டியல் உடைக்கப்பட்டுள்ளது.

ஏழாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தவர், இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் நேற்று முதல் இந்தப் பிரச்சனையை எடுத்துக் கொண்டு பொறுப்பற்ற முறையில் எழுதத் தொடங்கி இருக்கிறார்.

ஒரு மரணம் ஏற்பட்டால் அதை எடுத்து வைத்துக் கொண்டு பொறுப்பற்ற முறையில் மனம் அறிந்து பொய்களைச் சொல்லுகிறார்.

அடித்துக் கொன்றதாக எழுதி இருக்கிறார்.

ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப்பட்ட மோசடியில் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்கது. இந்த மரணத்தை வைத்துக்கொண்டு அரசியலில் மோசடி செய்கிறார்.

திருச்செந்தூரில் இந்த சம்பவம் பற்றி எல்லா விவரமும் தெரிந்திருப்பதால் அங்கு எந்தப் போராட்டமும் நடக்கவில்லை.''

இவ்வாறு அமைச்சர் வீரப்பன் கூறியது அண்ணா பத்திரிகையில் வெளிவந்தது.

திருச்செந்தூரில் எந்தப் பரபரப்பும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் கூறியது எவ்வளவு அப்பட்டமான உண்மைக்கு மாறான தகவல் என்பதை நேற்றைய தினம் இங்கே பேசிய நெடுமாறனும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதைப்போலவே மற்ற கட்சிகளின் தலைவர்களும், திருச் செந்தூர் மக்கள் எந்த அளவிற்கு கொந்தளித்தார்கள், குமுறினார்கள், கடையடைப்பு வரை சென்றார்கள் என்ற செய்திகளை இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

ஆனால் டிசம்பர் 4-ஆம் தேதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையை தந்தபோதிலும், டிசம்பர் 7-ம் தேதி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் சென்றதாக நினைவு- நெல்லைக்குச் சென்றவர்கள் திருச்செந்தூர் சென்று அந்த ஆலயத்தையும் ஆலய வளாகத்தையும், ஆய்வகத்தையும் பார்த்துவிட்டு சென்னை திரும்பிய பிறகு டிசம்பர் 11-ஆம் தேதி இது குறித்து ஒரு நீதி விசாரணை நடக்கும் என்று முதலமைச்சர் சென்னையிலே அறிவித்தார்.

பிறகு டிசம்பர் 19-ஆம் தேதி நீதிபதி பால் அவர்களுடைய பெயர் அறிவிக்கப்பட்டு அரசு ஆணை மூலம் அது தெரிவிக்கப்பட்டது.

பால் அவர்கள் அதை மிக உன்னிப்பாக கவனமாக பல்வேறு விதமான விசாரணைகளைச் செய்து ஆய்ந்து ஒரு அறிக்கையினை இன்றைக்கு இந்த அரசாங்கத்தினிடத்தில் தந்திருக்கிறார்கள்.

பால் அவர்களுடைய விசாரணை கமிஷன் நடைபெற்ற போது—அவர்களே குறிப்பிட்டிருப்பதைப் போல இரண்டு தரப்பினர் அதிலே விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லது விசாரணையிலே கலந்து கொண்டார்கள்.

'அ' தரப்பு என்பது அறங்காவலர் குழுவைச் சேர்ந்தவர்களும், காவல்துறையைச் சேர்ந்தவர்களுமாகும்.

'அ' தரப்பினரின் முக்கியமான வழக்கு எதுவென்றால் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை தூக்கு மாட்டிக்கொண்டு

தற்கொலை செய்து கொண்டார் என்பதை மெய்ப்பிக்கத் தான் அவர்கள் அரும்பாடு பட்டார்கள், அவர்கள் சார்பிலே—அறங்காவலர் குழு சார்பாக வழக்கறிஞர் விருத்தாசலம் ரெட்டியார் அவர்களும்—அரசின் சார்பில் பத்மினிஜேசுதுரை அவர்களும் வழக்காடியிருக்கிறார்கள்.

அடுத்து 'ஆ' தரப்பு: இது தற்கொலை அல்ல என்று வாதாடுகின்ற தரப்பு: இந்தத் தரப்பின் சார்பில் வழக்கறிஞர்கள் எட்மண்ட், இரணியல் ரவி, ஏ.எல். சுப்பிரமணியம் மற்றும் சில வழக்கறிஞர்கள் இந்த விசாரணையில் ஈடுபட்டார்கள்.

## எது விசாரணை வரம்பு?

இந்த நீதி விசாரணைக்கு என்று விசாரணை வரம்பு ஒன்று (டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்) தரப்பட்டது-

இப்போது வைக்கப்பட்டிருக்கின்ற அரசு ஆணையில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டே நீதிபதி அவர்கள் 'டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' அதாவது விசாரணை வரம்பை மீறியிருக்கிறார் என்பதுதான். என்ன அந்த விசாரணை வரம்பு?

(அ) இந்து அறநிலையத்துறையில் சரி பார்க்கும் அதிகாரியாக இருந்த சுப்பிரமணிய பிள்ளை திருச்செந்தூர் தேவஸ்தான ஆய்வாளர் மாளிகையில் 26—11—80 அன்று மரணமடைந்ததற்கான காரணத்தையும் சூழ்நிலைகளையும் பற்றி விசாரணை செய்வதும்;

(ஆ) அத்தகைய சம்பவம் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு தக்க நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்வதும்;

இதுதான் விசாரணை வரம்பு. இதிலே எப்படி விசாரணை வரம்பு மீறப்பட்டது என்பதை அரசு தீர்மானிக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை.

ஒரு சாவுக்கான காரணம்—ஒன்று விபத்தாக இருக்கலாம்; தற்கொலையாக இருக்கலாம்; கொலையாக இருக்கலாம்; அல்லது இயற்கைச் சாவாக இருக்கலாம்; இதிலே இயற்கை சாவு என்பதும், விபத்து என்பதும் வருவதற்கே இடம் இல்லை!

தற்கொலை என்றால் சுப்பிரமணியபிள்ளை உண்டியல் பணத்தைத் திருடினார் என்ற குற்றச்சாட்டோடு இணைகிறது. அந்தக் குற்றச்சாட்டு அடிப்பட்டு போகும்போது 'கொலை' என்பது நிரூபிக்கப்படுகிறது.

கொலைக்கான காரணங்களை ஆராய்வதும்—விசாரணை வரம்புக்கு உட்பட்ட காரியமேயாகும். கொலைக்கான காரணங்களை ஆராயச் சொல்லித்தான் விசாரணை வரம்பு தரப்பட்டிருக்கிறது.

அறங்காவலரும், நிர்வாகிகளும் நடத்திய உண்டியல் திருட்டுக்கு சுப்பிரமணிய பிள்ளை உடந்தையாக இல்லை; மாறாக மறுப்பு தெரிவிக்கிறார்; அதனால் கொல்லப்படுகிறார்.

எனவே சுப்பிரமணிய பிள்ளை மரணத்திற்கான காரணமும்—காரணஸ்தர்களும்—'பால்' அவர்களுடைய விசாரணை வரம்பிற்கு உட்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள்.

அந்தக் காரணஸ்தர்கள் மீது கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்; அவர்கள் அறங்காவலர் குழுவினராகவும், கோவில் நிர்வாகிகளாகவும் இருப்பதால் நீக்கி வைக்கப்பட வேண்டும்; என்பது இந்த அறிக்கையின் முடிவான கருத்து.

காரணஸ்தர்களால்தான் 'காரணம்' ஏற்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது, காரணம் அரூபமானது. அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. காரணஸ்தர்கள் தான் உருவம் உடையவர்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால்—அது எப்படி விசாரணை வரம்பை (டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸை) கடந்ததாக இருக்க முடியும் என்பதை அரசுதான் நமக்கு விளக்கவேண்டும்.

## விசாரணை வரம்பு மீறப்படவில்லை!

விசாரணை வரம்பு எதுவும் மீறப்படவில்லை என்பது நான் தந்த இந்த விளக்கத்தின் மூலம் தெளிவாகிறது.

நீதிபதி பால் தெரிவித்துள்ள முடிவான கருத்துக்கள் யாவை?

(1) "சுப்பிரமணிய பிள்ளை கோயிலுக்கு வந்து சேருவதற்கு முன்பே உண்டியல்கள் திறக்கப்பட்டு விட்டன. அதுகண்ட சுப்பிரமணிய பிள்ளை எதிர்ப்பு தெரிவித்து, எண்ணுவதில் கலந்து கொள்ளாமல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் போவதாகச் சொல்லிவிட்டு ஆய்வகம் சென்று விட்டார். அதன் பேரில் அவர் தாக்கப்பட்டு அவருக்குக் காயங்கள் விளைவிக்கப்பட்டன. அதன் விளைவாக அவர் உணர்விழந்தார். அவரது குரல்வளையை நெறிப்பதற்கான ஒரு முயற்சிகூட செய்யப்பட்டிருக்கலாம். அவர், தற்கொலை

செய்து கொண்டார் என்று தோன்றுமாறு செய்ய அவர் துவலேக்குழாயில் தொங்க விடப்பட்டார் என்று சந்தேகிக்க ஆதாரங்கள் உள்ளன. சுருங்கச் சொன்னுல் மரணம் விளைவிக்கக்கூடிய வன்முறையின் காரணமாக அவர் தனது மரணத்தைச் சந்தித்தார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன.

(2) இச்சம்பவத்தை கோயிலில் உள்ள ஊழியர்கள் மட்டுமே பார்த்திருக்க முடியும். அவர்கள் கமிஷன் முன்னிலேயில் சாட்சியம் தர மாட்டார்கள். அறங்காவலர் குழு இன்னமும் செயல்பட்டுக்கொண்டிருப்பதால் ஊழி யர்கள் அஞ்சுவார்கள் என்ற 'ஆ' தரப்பினர் வாதத்தைத் தள்ளி விடமுடியாது.

(4) இச்சூழ்நிலேயில் அறங்காவலர் குழுவைத் தற்காலி கமாக விலக்கி, அல்லது நீக்கிய பிறகு— குற்றப் புலனுய்வுத் துறையின் குற்றப்பிரிவு போன்றதொரு தனிப்பட்ட காவல் புலனுய்வு அமைப்பினுல் முழு அளவில் தீர ஆய்வு செய்யப் பட வேண்டும். அத்தகைய புலனுய்வுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அறங்காவலர் குழுவை அப்படி விலக்கினுல்தான் தேவஸ்தான ஊழியர்களும், மற்றவர்களும் இதுபற்றி இன்னும் அதிகமாக விளக்கமளிக்க முன்வரலாம்.

## பரிந்துரை தரச் சொல்லிவிட்டு நடவடிக்கை எடுக்கமறுப்பதா?

நீதிபதியின் இந்த அறிக்கையைத்தான் 'விசாரணே வரம்பை மீறியது'' என்று அரசு ஆணே குறிப்பிடுகிறது.

மரணம் அடைந்ததற்கு காரணமான சூழ்நிலே குறித்து விசாரணே நடத்தச் சொன்னீர்கள். நடத்தி அந்த நீதிபதி காரணத்தை அறிவித்திருக்கிருர்.

இத்தகைய நிகழ்ச்சி மீண்டும் நடக்காமல் இருப்பதற் குரிய நடிவடிக்கைகளே பரிந்துரைக்கச் சொல்லியிருக் கிறீர்கள். அதைத்தான் அவர் பரிந்துரைத்துள்ளார்.

நடந்த நிகழ்ச்சிக்கு எடுக்கும் நடவடிக்கைதான் இதைப் போன்ற நிகழ்ச்சிகள் மீண்டும் நடக்காமல் தடுப்பதற்கு ஏற்ற பரிந்துரை அல்லவா? அதை எப்படி தவறு என்கிறீர்கள்?

பால் கமிஷன் குற்றவாளிகள் யார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லே என்பது அரசாங்கத்தின் வாதம். குற்றமே

நடைபெறவில்லை என்றோ, கொலையே நடைபெறவில்லை என்றோ முதலமைச்சர் அவர்கள் இதுவரையில் வாதிடவில்லை. அதுவரையில் அதற்கு நன்றி பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அறநிலையத்துறை அமைச்சரைப்போல் அவர் இந்தக் கொலைக்குள்ளே நுழைந்து, அது கொலையா, தற்கொலையா? என்ற விவாதத்திற்குச் சென்று ஒருமுடிவை அறிவித்திடவில்லை. ஆனால் ஒரு சந்தேகத்தை பல நேரங்களில் முதலமைச்சர் எழுப்பியிருக்கிறார்.

## அரசாணையில் உள்ள கருத்துகள் புதியவை அல்ல !

அரசின் சார்பில் எழுப்பியுள்ள மறுப்புக் கருத்துக்கள் இந்த அவையில் வைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் ஏற்கெனவே விசாரணை கமிஷனிலே வழக்கறிஞர் விருத்தாசலம் ரெட்டியார் அவர்களால் வாதிக்கப்பட்ட—'அ' தரப்பினருக்காக வாதிக்கப்பட்ட-நீதிபதியால் ஏற்றுக் கொள்ளப்படாத அந்தக் கருத்துக்களைத்தான் நீங்கள் மீண்டும் அரசு ஆணையாக இங்கே அச்சடித்து வைத்திருக்கிறீர்கள்.

அதில் முதலாவதாக—'அ' தரப்பு சாட்சிகளை மட்டும் விசாரித்த கமிஷன் 'ஆ' தரப்பை விசாரிக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

'ஆ' தரப்பை விசாரிக்க வேண்டுமென்று 'அ' தரப்பு வழக்கறிஞர்களால் கோரப்படவே இல்லை என்பதுதான் இதற்கு நான் அளிக்கின்ற பதிலாகும்.

பொதுவாக ஒரு வழக்கில் இரண்டு வழிகள் உண்டு. ஒன்று தனது தரப்பில் நேரில் கண்ட சாட்சிகளையும் சூழ்நிலை சாட்சிகளையும் விசாரிப்பது: இது பாசிட்டிவ் மெத்தேடு.

அடுத்தது மாற்றுத் தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்து அவர்களுடைய கூற்றைப் பொய்யாக்குவது; இது நெகட்டிவ் மெத்தேடு.

இந்த இரண்டாவது முறை—நெகட்டிவ் மெத்தேடு இதில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் 'அ' தரப்பினர்—'ஆ' தரப்பு சாட்சியங்களை விசாரிக்க வேண்டுமென்று கோரவே இல்லை.

அது மாத்திரமல்ல—

"சுப்பிரமணியபிள்ளை பணத்தைத் திருடி, அது கண்டு பிடிக்கப்படவே, மானத்துக்கு அஞ்சி தற்கொலை செய்து கொண்டார். இதற்கான நேரடி சாட்சிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள்—அதை உண்மை எனக் கூறும் காவல் துறையினர் ஆகியோர் தான்—சுப்பிரமணியபிள்ளை கொலை செய்யப்படவில்லை; தற்கொலை செய்து கொண்டார்" என்று திட்டவட்டமாக நிரூபிக்க வேண்டியவர்கள்.

மேலும்—

கொலை செய்யப்பட்டார் என்று கூறுபவர்களுக்கு—புலன் விசாரணை செய்ய உரிமை இல்லை; வசதி இல்லை; அவர்கள் எதிர் தரப்பினரை குறுக்கு விசாரணை செய்து—சுப்பிரமணியபிள்ளை தற்கொலை செய்து கொள்ளவில்லை என்று நிரூபித்துக் காட்டினாலே போதும். அதனைத்தான் செய்திருக்கிறார்கள்.

ஆகவே இதில் 'ஆ' தரப்பினர் விசாரிக்கவில்லை என்று கூறுவது அவர்களை விசாரிக்க வேண்டுமென்று. 'அ' தரப்பினர் கோரவே இல்லை என்ற பதிலின் மூலம் அடிபட்டுப் போகிறது என்பதை நான் இந்த அவையில் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

## அர்ச்சுனன் சாட்சியம் !

அரசு ஆணையில் இரண்டாவதாக கூறப்படுவது—"அறநிலையத்துறை கமிஷனரின் உதவியாளர் அர்ச்சுனன் சாட்சியத்திற்கு கமிஷன் முக்கியத்துவம் அளித்துள்ளது; அவர் சுப்பிரமணியபிள்ளை எளியவர் என்றும், அவர்மீது எந்தப் புகாரும் கிடையாது என்றும் கூறியுள்ளார். ஆனால் அதே அதிகாரி அர்ச்சுனன் சுப்பிரமணிய பிள்ளையைப் பற்றி வந்த புகார் குறித்து அவரிடமே விசாரித்த சம்பவங்கள் பற்றிய அறிக்கைகள் அரசிடம் உள்ளது."

இது நீங்கள் வைத்திருக்கின்ற அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நான் கேட்க விரும்புகிறேன். அப்படியானால் அரசிடம் இருக்கின்ற அந்த அர்ச்சுனன் அறிக்கையினை ஏன் விசாரணை நடைபெறுகின்ற நேரத்தில் நீங்கள் கமிஷன் முன்னால் வைக்கவில்லை? சுப்பிரமணியபிள்ளை மீது எந்தப் புகாரும் இல்லை என்று நீதிபதி பால் முன்னால் முதலில் சொன்ன அர்ச்சுனன் பிறகு அப்படிப்பட்ட புகார்கள் அவர்மீது உள்ளன என்று விசாரணை முடிந்தபிறகு சொல்கிறார்

என்ருல்: ''ஆஃப்டர் தாஃட்'' அதாவது அதற்குப் பிறகு அர்ச்சுனனைக் கசக்கி பிழிந்து அரசினிடம் அப்படிப்பட்ட ஒரு மறுப்புஅறிக்கையை வைத்துக் கொள்கின்ற அளவிற்கு தேவையற்ற ஆனுல் முறையற்ற தன்மையில் ஒரு நடவடிக்கை அமைச்சர்கள் மூலமாக நடைபெற்றிருக்கக் கூடும் என்ற ஐயப்பாட்டைத்தான் இது உறுதிப்படுத்துகிறதே அல்லாமல் வேறல்ல.

## கலெக்டரை விசாரிக்காதது ஏன் ?

மூன்ருவதாகச் சொல்கிருர்: அற நிலையத்துறை அரசு செயலாளர், கமிஷனர் ஆகியோரை விசாரித்த கமிஷன் கலெக்டரையும், காவல்துறை அதிகாரிகளையும் ஏன் விசாரிக்கவில்லை என்று அரசு கேட்கிறது.

அறநிலையத்துறை செயலாளரையும் கமிஷனரையும் சாட்சிகளாக அழைக்க வேண்டுமென்று 'அ' தரப்பில் உள்ள யாரும், அல்லது கமிஷனும் விரும்பவில்லை. அதற்கு மாருக 'ஆ' தரப்பினர்—அது தற்கொலை அல்ல என்று வாதாடுகின்ற தரப்பிலே உள்ள இரணியல் ரவி போன்ற வழக்கறிஞர்கள் கமிஷனிடம் கொடுத்த மனுமீதுதான் ஆணை பிறப்பிக்கப்பட்டு செயலாளரும் கமிஷனரும் விசாரிக்கப் பட்டிருக்கிருர்கள்.

கலெக்டரோ காவல்துறை அதிகாரிகளோ விசாரிக்கப் பட வேண்டுமென்று 'அ' தரப்பு வழக்கறிஞரான விருத்தாசலம் ரெட்டியாரோ அரசாங்க வக்கீலான பத்மினி ஜேசுதுரையோ விரும்பியிருந்தால் அவர்கள் கமிஷன் முன்னுல் மனு கொடுத்து கேட்டிருந்திருக்கலாம்; ஆனுல் அவர்கள் கேட்கவில்லை.

எனவே அரசு ஆணையில் எடுத்து வைத்திருக்கின்ற இந்த வாதமும் பொருந்தாத வாதம் ஆகும்.

## மேகநாதன் கருத்துகள்

அடுத்து—மேகநாதன் உறுதிமொழிப் பத்திரத்தையும் குறுக்கு விசாரணையின்போது அவர் அளித்த அபிப்பிராங்களையும் முரண்பாடுகள் உள்ளவை என்று நீதிபதி கூறியதாக அரசு தரப்பு தனக்கு ஆதரவாக எடுத்துக் காட்டுகிறது.

ஆனுல் நீதிபதி பால் மேகநாதன் அவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாமல்தான் தன் முடிவுகளை வழங்கி

யிருக்கிறார். மேகநாதன் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாது நீதிபதி பால் அவர்கள் இப்படிப்பட்ட முடிவை அறிவித் திருப்பதிலிருந்து மேகநாதன் கருத்துக்களைக் கண்ணை மூடிக் கொண்டு அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும், நடுநிலை யுடன் தான் நீதிபதி பால் அவர்கள் அறிக்கை கொடுத்திருக் கிறாரே அல்லாமல் அவர் குறைபாடு உடையவர் அல்ல என்பதை நான் இந்தப் பதிலின்மூலம் அரசுக்கு எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

## தெரிவிக்கப்படாத திருட்டுச் செய்தி !

உண்டியல் திருடப்பட்டதை சுப்பிரமணியபிள்ளை உடனடியாக ஏன் மேலதிகாரிகளுக்கு தந்தி மூலமோ தொலை பேசி மூலமோ தெரியப்படுத்தவில்லை என்பது அரசாங் கத்தின் அடுத்த கேள்வி.

இதற்கு என்னுடைய ஒரே பதில்; உயிரோடு இல்லாத ஒருவர் எப்படித் தெரிவிக்க முடியும் என்பது தான். மேலும் அவர் சாவதற்கு முன்புகூட அவர் தொலைபேசியில் பேச இடம் கொடுத்திருக்க மாட்டார்கள். ஒருவேளை அவர் ஆய்வகத்தில் அமர்ந்து ரிப்போர்ட் எழுதிக்கொண்டிருக்க லாம் கொலை செய்யப்பட்ட பிறகு எப்படி அவருடைய டைரியும் அவருடைய எழுதுகோலும் திருடப்பட்டதோ அதைப்போல அவர் எழுதிய ரிப்போர்ட்டும் திருடப்பட் டிருக்கலாம். எனவே இந்தச் சந்தேகம் இந்த அரசுக்கு உள்ளத்தில் தோன்றவில்லையா? அல்லது வேண்டுமென்றே தொலைபேசியில் ஏன் தெரிவிக்கவில்லை என்று புதிய வாதத்தை எடுத்து வைத்து பால் அவர்கள் அளித்திருக் கின்ற முடிவிற்கு மாறாக ஒரு புதிய தீர்ப்பை வழங்கவேண் டிய அவசியம் இந்த அரசுக்கு ஏன் ஏற்பட்டது,

## ராமன் சாட்சியத்தில் முக்கியப் பகுதியை மறைத்துவிட்டு

அடுத்து மிக முக்கியமான ஒன்றைச் சொல்கிறார்கள். "உதவி இயக்குநர் ராமன் பிரச்சினைக்குரிய அந்த வேட்டி தொங்க விடப்படுவதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்க முடியும் என்று கருத்துரை வழங்கியுள்ளார்" என்று கூறி யிருக்கிறார்கள்.

ராமன் என்ற உதவி இயக்குநர் தந்துள்ள சாட்சியத்தில் முதல் பகுதியில் உள்ள நான்கு வரிகளை மாத்திரம் எடுத்துப் போட்டு ஒரு அரசு மற்ற வரிகளை எல்லாம் மூடி மறைத்து

வாதமீ செய்வது நியாயம்தாஞ? அவர் "தொங்க விட இது பயன்படுத்தப்பட்டிருக்க முடியும்" என்று சொல்கிருர். "தொங்கவிட" என்ற அந்தச் சொல்லே ஆழ்ந்து கவனித்தால் ஒரு பிணத்தைத் தொங்கவிட என்று நாம் ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது? ராமன் சொன்னதில் முதல் வரியை மாத்திரம் எடுத்துக்கொண்டார்கள்; அவர் மேலும் அதே பாராவில் என்ன சொல்கிருர்?

மடிக்கப்பட்டிருந்த வேட்டியின் நீளம் மிகவும் குட்டை என்றும், எந்த முனேயிலும் ஒரு முடிச்சுப் போட மட்டுமே பயன்படுத்தி இருக்க முடியும் என்றும், அவ்வாறு போடுவதற்குக் கூடச்சாமர்த்தியம் வேண்டும் என்றும், 7 அடி 6 அங்குலம் உயரத்தில் உள்ள ஒரு குழாயிலிருந்து ஒருவர் தொங்குவதாக கற்பனே செய்து பார்த்தால் அவர் அநேகமாக குழாயின் உயரத்திற்கு தானே எம்பித்தான் அவர் அவ்வாறு செய்ய வேண்டி இருந்திருக்கும்."

அந்த வேட்டியைக் கொண்டு இறந்த சுப்பிரமணிய பிள்ளேயை போன்ற தடித்த கழுத்தையுடைய பருமனை ஒருவர் முதலில் சுருக்கு வளேயம் போட்டுக்கொண்டு கழுத்தைச் சுற்றிய பின்னர் சுருக்கிட்டுக் கொண்டு தானே தொங்குவது என்பது மிகவும் கடினமானதாகும் என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்." இராமன் அவர்களின் சாட்சியத்தில் பிற்பகுதி முழுவதையும் மறைத்து விட்டு—முற்பகுதியில் "தொங்க விட அது பயன்படுத்தப்பட்டிருக்க முடியும்" என்ற ஒரே வரிகளே மாத்திரம் எடுத்து கையாண்டு ஒரு அரசாணேயின் மூலம் நீதிபதி பால் அவர்கள் தெரிவித்திருக்கின்ற ஒரு நல்ல தீர்ப்பினே மறைக்க முயல்வது தேவைதாஞ ?

"பிணப் பரிசோதனே நடத்திய டாக்டர் ராமமூர்த்தி பிரச்சினேயில் உள்ள வேட்டி, தன்னேத் தூக்கிட்டுக் கொள்ள இறந்து போனவரால் பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்று உறுதியாகக் கூறியுள்ளார்" என்றும் அரசாங்கம் அறிக்கை கூறுகிறது.

டாக்டர் ராமமூர்த்தி பிணப் பரிசோதனே செய்யும் மருத்துவர். வேட்டி பற்றி கருத்துக்கூற அவருக்கு தகுதி இல்லே.

வேட்டியைப் பற்றி ராமமூர்த்தி சொன்னதை பெரிதாக —தங்களுக்கு அனுசரணேயாக அரசு எடுத்துக் கொண்டு அந்த ஆணேயை இங்கே அச்சேற்றிவைத்திருக்கிருர்கள்.

அந்த வேட்டி பற்றி நீதிபதி பால் என்ன கூறுகிருர் என்பதைக் கவனிக்க வேண்டாமா ?

டாக்டர் ராமமூர்த்தி, அவரது சாட்சியத்தில், சுப்பிரமணிய பிள்ளையின் உடலை சவப் பரிசோதனைக்காகத் தன்னிடத்தில் கொண்டு வந்தபோது அதிகாரி தானே தூக்கிட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிற. வேட்டியைக் கொண்டு வரவில்லை என்றும்—அதைப்பற்றி சப்-இன்ஸ்பெக்டரிடம் அவர் கேட்ட போது அந்த வேட்டி ரத்தக்கறை படிந்ததாக இருந்தால் அது கொண்டு வரப்படவில்லை என்று உதவி சப்-இன்ஸ்பெக்டர் அவரிடத்தில் கூறியதாகவும், பின்னர் வேட்டியைக் கொண்டு வருவதாகவும் கூறி இருந்தார். ஆனல் அது கொண்டு வரப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

டாக்டர் ராமமூர்த்தி சம்பவம் நடந்த இடத்தை 27-11-80 அன்று பார்வையிட்டார், அப்போது வேட்டியை அளந்து 330 செ. மீ. நீளம் இருந்ததைத் தனது சவப் பரிசோதனை குறிப்புகளில் எழுதி வைத்ததாகக் கூறுகிருர்.

எனவே மேற்படி சாட்சியத்திலிருந்து இறந்து போனவர் தூக்கிட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிற வேட்டி முதலில் இரத்தக்கறை படிந்திருந்தது என்று கூறப்பட்டிதாகத் தெரிகிறது.

டாக்டர் ராமமூர்த்தி தன்னிடத்தில் காண்பிக்கப்பட்ட வேட்டியில் எந்தவிதமான கறையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

எனவே "கமிஷனிடம் உள்ள வேட்டி வேருெரு வேட்டிக்குப் பதிலாகக் கொண்டு வரப்பட்ட வேட்டி என்று நம்புவதில் நியாயம் இருக்கிறது" என்று நீதிபதி பால் குறிப்பிட்டிருக்கிருர்.

அந்த வாதங்களை எல்லாம் மறைத்துவிட்டு அவர் சொன்னதில் ஒரு பகுதியை மாத்திரம் வெட்டி எடுத்து தங்களுக்கு அனுசரணையாக அரசு ஆக்கிக் கொள்ள முயற்சித்திருப்பதாக நான் மிக வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## டாக்டர் கோபாலகிருஷ்ணு

டாக்டர் கோபாலகிருஷ்ணுவின் சாட்சியம் பற்றியும்—டாக்டர் கோபாலகிருஷ்ணு டாக்டர் ராமமூர்த்தியை விட

கெட்டிக்காரர் அல்ல என்றும் அரசு வாதாடியிருப்பதற்கு மாருக நீதிபதி பால் அவர்கள் டாக்டர் கோபாலகிருஷ்ண அவர்கள் எவ்வளவு திறமை பெற்றவர் என்பதையும் எவ்வளவு காலம் இத்துறையில் அனுபவம் பெற்றவரென்பதையும் டாக்டர் ராமமூர்த்தி இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட சவப் பரிசோதனைகளைச் செய்தவர் என்றும், டாக்டர் கோபாலகிஷ்ண பதினைன்காயிரத்திற்கும் மேற்பட்ட சவப் பரிசோதனைகளையும் செய்து தன்னுடைய முடிவுகளை அறிவித்தவர் என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிருர்கள். அதிலே நான் அதிகமாகச் சென்று விவரிக்க விரும்பவில்லை—நேரம் இல்லாத காரணத்தால்.

அடுத்து அரசு அறிக்கையில் ஒரு முக்கியமான குறிப்பு பக்கம் 7, பாரா 23-ல் கூறப்பட்டிருக்கிறது. அதாவது "டாக்டர் ராமமூர்த்தி, அடிபட்ட காயம் எதுவுமே இல்லை என்று ஆணித்தரமாக சாட்சியம் கூறியுள்ளார்."

இது அப்பட்டமான உண்மைக்கு மாருக எடுத்து வைக்கப்பட்டுள்ள கருத்து. பால் கமிஷன் அறிக்கையில் பக்கம் 54-ல் "சாவு குறித்து பின் ஆய்வு செய்யப்பட்ட போது தலையில் காணப்பட்ட மூன்று காயங்களும் அவர் இறப்பதற்கு முன்பாக ஏற்பட்டிருக்க வேண்டும் என்று ராமமூர்த்தி விளக்கமாகக் கூறியுள்ளார்." என்று நீதிபதி பால் அறிவித்திருக்கிருர்.

இந்த உண்மையை அரசு மறைக்க வேண்டிய அவசியம் என்ன ?

அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டும் என்ருல் அறநிலையத்துறை சட்ட விதிகளின்படிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்; கமிஷன் தீர்ப்பை மட்டும் அடிப்படையாக வைத்து அத்தகைய நடவடிக்கையை எடுக்க முடியாது" என்று வாதாடுகின்ற அரசு அதற்கு சான்ருக இஸ்மாயில் கமிஷன் வழக்கில் மனோகரன் என்ற அதிகாரி மீது கமிஷன் முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு பின்னர் அவர் தன்னுடைய முறையீட்டைக் கேட்காமல் கமிஷன் எடுத்த முடிவின்படி நடவடிக்கை எடுத்தது தவறு என்று வாதாடி, வெற்று பெற்றதை அரசு ஆணையில் சான்ருகக் காட்டியிருக்கிருர்கள்.

நான் இங்கே குறிப்பிட விரும்புவது எல்லாம்—மனோகரன் என்ற அந்த அதிகாரி இஸ்மாயில் கமிஷன் முன்னுல் வந்து தன்னுடைய முறையீட்டைச் சொல்ல

வாய்ப்பில்லை என்று எடுத்துக் கூறி இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டார்; வழக்கு கொடுத்தார்.

ஆனால் இங்கே நிலை என்ன? அறங்காவலர் குழுத் தலைவர் பால கிருஷ்ணன் அவர்களோ, மற்றவர்களோ நீதிபதி பால் கமிஷன் முன்னால் வாய்ப்பு அளிக்கப்படாத வர்களா என்றால் அவர்களுக்கு அதற்கு நிரம்ப வாய்ப்பளிக் கப்பட்டிருக்கிறது.

அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்ற கருத்தைச் சொல்ல அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வில்லை.

எனவே இந்த வேறுபாட்டை உணராமல் அரசு தன்னுடைய ஆணையிலே இப்படி கூறியிருப்பதற்காக நான் என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் கமிஷன் குற்றவாளிகளை யார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லையே என்று கேட்கிறார். அதற்கிடையே குற்றவாளிகளை கைது செய்வது எப்படி என்று எல்லா எதிர்க்கட்சிகளையும் சேர்த்துத்தான் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

பால் கமிஷன் அறிக்கையின் 44,45 வது பக்கங்களில் குற்றவாளிகள் யார் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக் கிறார்கள். நான் சுருக்கமாகப் படிக்கிறேன்.

"சரிபார்ப்பு அதிகாரிக்கு உடனடியாக அவர்கள் முதல் உதவி அளிக்கவோ அவருக்கு மூச்சு வரச் செய்யவோ சிகிச்சை அளிக்கவோ முன்வரவில்லை என்றும்—ஏனென்றால் அவருக்கு மூச்சு வந்து உணர்வு பெற்றால் அவர்களுக்கு எதிராக மரண வாக்குமூலம் கொடுக்கக்கூடும் என்று அவர்கள் அச்சப்பட்டனர் என்றும், 'ஆ' தரப்பினரின் வழக்கறிஞர் கூறிய வாதத்திற்கு இவர்களின் விசித்திரமான போக்கு ஆதரவாகிறது" என்று நீதிபதி பால் குறிப்பிடு கிறார்.

"அவர்களுக்கு எதிராக மரண வாக்குமூலம் தரக் கூடும்" என்று பால் குறிப்பிடுகிறார். அவர்களுக்கு எதிராக என்பதில் "அவர்கள் யார்?" அதையும் பால் தன்னுடைய அறிக்கையின் 44வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்.

அப்போது அந்த ஆய்வகத்தில் இருந்தவர்கள் யார் யார்? அங்கே யார் யார் இருந்தார்கள் என்று சொல்கிறார் ?

டாக்டர் பாலகிருஷ்ணன்;
ஸ்ரீனிவாசபாண்டியன்;
கோவில் சூப்பரின்டெண்ட் மகாதேவன்,
நிர்வாக அதிகாரி ராசாராம்,
கேசவ ஆதித்தன்
ஆகியோர் இருந்திருக்கிறார்கள் என்று நீதிபதி பால் 44ஆம் பக்கத்தில் குறிப்பிட்ட பிறகும்,

## தெரிந்தும் தெரியாததைப் போல்...

குற்றவாளிகள் யார் என்று இன்னமும் அரசாங்கத்திற்கு தெரியவில்லை என்றால் நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். தெரிந்தும் தெரியாததைப்போல் இருக்கிறார்களா என்றுதான் நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

பால் கமிஷன் அறிக்கை அவையிலே வைக்கப்படுவதற்கு முன்பு என்னாலே வெளியிடப்பட்டதை யொட்டி —நீங்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கையில் பாதி நடவடிக்கையையாவது —ஒரு கால் பகுதி நடவடிக்கையாவது — இந்தக் கொலைகாரர்களைக் கண்டுபிடிக்க —கொலைகாரர்களைக் கைது செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க— இந்த அரசு எடுத்துக்கொண்டதா என்றால் இல்லை.

பால் கமிஷன் அறிக்கையை முன்கூட்டி வெளியிட்ட நடவடிக்கையை ஒரு பெரிய குற்றமாகக் கூறி— நான் அதை வெளியிட்டதைப் பற்றிய கருத்துக்களை இங்கே விமர்சிக்க விரும்பவில்லை— அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்கள். சதாசிவம் என்கிற ஒரு அதிகாரி கைது செய்யப்பட்டார். அவர் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

என்னுடைய நேர்முக உதவியாளர் சண்முகநாதன் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டது மாத்திரமல்ல; அந்த இரண்டு அதிகாரிகளும் வேலை நீக்கம் செய்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் எந்த அளவிற்கு இழப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது.

என்னுடைய நேர்முக உதவியாளர் சண்முகநாதனுடைய அடிப்படைச் சம்பளம் 950 ரூபாய். கிராக்கிப்படி 239 ரூபாய்; வீட்டு வாடகைப்படி 165 ரூபாய்; நகர ஈட்டுப்

படி 90 ரூபாய்; ஸ்பெஷல் ஊதியம் 325 ரூபாய்; போக்கு வரத்துப்படி 80 ரூபாய்; ஆக மொத்தம் 1,849 ரூபாய் மாதந்தோறும் பெற வேண்டிய என்னுடைய நேர்முக உதவி யாளர் சன்முகநாதனுக்கு இப்போது கிடைக்கின்ற தொகை எவ்வளவு என்ருல் — இந்த வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, ஸ்பெஷல் ஊதியம், போக்குவரத்துப்படி ஆகிய நான்கும் — அதாவது மாதம் 660 ரூபாய். இனிமேல் வழக்கு நடைபெற்று அந்த வழக்கிலே விடுதலை பெற்ருல் அந்தக் காலம் வரை இந்தத் தொகை மாதந்தோறும் இழக்க நேரிடு கின்ற தொகையாகும். மீதம் உள்ள அடிப்படை சம்பளம் 950 ரூபாயில் பாதிச் சம்பளம் 475, மற்றும் கிராக்கிப்படி ஆக மொத்தம் 714 ரூபாயில் அவர் ஏற்கனவே திருமணத் திற்காக பட்ட கடன்களுக்காக கழித்தது போக இன்றைக்கு அவர் மாதந்தோறும் பெறுகின்ற தொகை ரூபாய் 208.

எனவே இப்படிப்பட்ட நிலையை சென்னையில் குடும்பம் நடத்துகின்ற சன்முகநாதனுக்கோ, சதாசிவம் என்ற அதி காரிக்கோ ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசுக்கு யாராவது ஆலோசனை கூறியிருப்பார்களேயானல் அப்படி ஆலோசனை கூறியவர்களுடைய குடும்பம் உருப்படுமா என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டு கிறேன்.

சண்முகநாதன் மீது வழக்குத் தொடரப்பட்டு கைது செய்யப்பட்டது மாத்திரமல்ல; எதிர்க்கட்சி தலைவர் என்ற முறையில் எனக்குத் தரப்பட்ட இரண்டு டைப்ரைட்டிங் மெஷின்களைக்கூட இந்த அரசு, இந்த அவையின் செயலாளர் மூலமாகக் கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள்; பிடுங்கிக் கொண்டார்கள் என்று சொல்லமாட்டேன்; கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள்!

அவைத் தலைவர் அவர்களே! உங்களுக்குத்தான் சொல் கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் இரண்டு டைப் மெஷினைக் கூடப் பயன்படுத்த முடியாமல் பால் கமிஷன் அறிக்கையை நான் வெளியிட்டதின் விளைவாக அதை இந்த அரசு பறித்துக் கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு கடுமையான நடவடிக்கை.

முரசொலி செல்வத்தை ஏதோ பயங்கரவாதியைப் போல கட்டபொம்மனை அல்லது மருதுபாண்டியர்களைப் போல் — அல்லது கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மிகப்பெரும் தலைவர்கள் அண்டர்கிரவுண்டிற்கு செல்வார்களே அவர் களைப் பிடிப்பதைப்போல— வீட்டிலே வந்து கைது செய் வதற்குப் பதிலாக விமான நிலையத்திற்குச் சென்று எங்கோ

விமானத்தில் ஏறி வெளிநாட்டிற்கு ஓடிவிடுவானோ என்று பயந்தே என்னவோ—அதற்கென டிக்கெட்டை வாங்கியிருக்கிறானென்று தெரியாமல்— விமான நிலையத்தில் போலீஸ் உடுப்பு அணியாதவர்கள் சாதாரண உடுப்பு அணிந்தவர்கள் திடீரென்று சுற்றிக் கொண்டு காரிலே ஏற்ற, பெண்மணிகள்— என்னுடைய வீட்டார்— யாரோ என்று தெரியாமல் தடுத்த நேரத்தில், அவர்களை அடித்து வீழ்த்தி அவர்களுக்கும் காயங்களை உண்டாக்கி கேவலப் படுத்துகின்ற அளவிற்கு சண்முகநாதனை, சதாசிவத்தை, முரசொலி செல்வத்தை இந்த பால் கமிஷன் அறிக்கை வெளியிட்ட காரணத்தையொட்டிய சூழலில் இந்த பாடுபடுத்தியிருக்கின்ற அரசு, பால்கமிஷன் தந்திருக்கின்ற அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க ஏன் தயங்குகிறது என்பதுதான் என்னுடைய கேள்வி.

எப்படிப்பட்ட அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள்? இங்கே நம்முடைய அருமை நண்பர் சங்கரய்யா அவர்களும், மற்றும் அருமை நண்பர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுந்தரராசன் அவர்களும், நெடுமாறன் அவர்களும், குமரி அனந்தன் அவர்களும், ஆண்டித் தேவர் அவர்களும் விஜயராகவன் அவர்களும்—எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

அதிகாரிகள் எந்த அளவிற்கு தவறாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலும் என்னுடைய அருமை நண்பர் நெடுமாறன் நேற்றைக்குப் பேசும்போது—அப்போதே தான் 1980ம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதி திருச்செந்தூர் சென்றதாகவும் உடனடியாக காவல் அதிகாரிகள் வைத்திருக்கின்ற ரெகார்டுகளை—ரெவினியூ அதிகாரிகள். அறநிலையத்துறை அதிகாரிகள், மருத்துவத்துறை அதிகாரிகள் வைத்திருக்கின்ற ரெகார்டுகளை எல்லாம் கமிஷன் கைப்பற்ற வேண்டும் என்று சொன்னதாகவும் சொன்னார்கள். அந்தக் காரியங்கள் நடைபெறவில்லை.

ஜெகநாத ஆள்வார் என்ற தாசில்தார் எந்த அளவிற்கு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதற்கு இந்தக் கொலையை மறைக்க எந்தெந்த அளவிற்கெல்லாம் அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக ஒன்றைச் சொல்கிறேன். அந்த தாசில்தார் எழுதிய கடிதத்தையே அப்படியே படிக்கிறேன்:

From

Thiru C. Jeganathalwar,
Tahsildar and
Executive Magistrate,
Tiruchendur.

To

The Assistant Director of Regional
Forensic Science Laboratory,
Madurai Medical College Building,
Tirunelveli-2.

Roc. No B7/19218/80, dt.2—12—80.

Sub: Criminal Justice Tiruchendur Police Station-Cr. No. 1073/80 under section 174 Cr. P. C — deceased C. Subramaniya Pillai—sending of viscera for Chemical analysis—regarding.

Ref : Requisition ot the Sub-Inspector of Police, dated 1—12—1980.

The Inspector of Police, Tiruchendur has reported that the deceased C. Subramaniya Pillai of Eraniel Village has committed suicide by consuming poison. The body of the deceased was examined by the Medical Officer. Tirunelveli in P. M. C. No. 225/80 date 27—11—1980 and he has preserved the viscera for chemical analysis. The viscera of the deceased is sent through the Police Constable No. 995. I request that the result of the Chemial analysis report may be communi-cated to this office early.

Sd/-2—12—80

அதாவது அவர் விஷம் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்கிற அளவிற்கு கதையை ஜோடிக்க அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்; அதிகாரிகள் அதற்குமுன் வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே எடுத்துக்காட்டுகிறேன்.

நான் அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில்— அதிகாரிகள் மீது நடவடிக்கை

எடுக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில்—கொலைகாரர்கள் மீது கிரிமினல் குற்ற வழக்கு தொடுத்து அவர்கள் கைது செய்யப்பட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிற நேரத்தில், என்னைப் பார்த்து நீங்கள் திரும்பக்கேட்பீர்கள், "நீ ஆட்சியில் இருந்தபோது இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்டா?" என்ற கேள்விகளைக் கேட்பீர்கள்.

நெடுமாறன் பேசுகிற நேரத்தில் அமைச்சர் வீரப்பன் பழைய கால உதாரணங்களை எல்லாம் இன்றைக்கு எடுத்துச் சொல்கிறேன் என்று குறிப்பிட்டார். நான் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்க விரும்புகிறேன்.

பாளையங்கோட்டையில் நடைபெற்ற ஒரு சம்பவத்திற்காக கோதண்டராமராஜு என்ற நீதிபதியின் விசாரணைக் கமிஷனை அமைத்து, நான்கு காவலர்கள், இரண்டு தலைமைக் காவலர்கள், இன்ஸ்பெக்டரின் இரண்டு மகன்கள் ஆகியோர் மீது வழக்கு தொடர்ந்து அவர்கள் தண்டனையும் பெற்று வேலையிலிருந்தும் நீக்கப்படக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான், நம்முடைய முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களைப் பார்த்து இந்த நடவடிக்கையை இப்போது மேற்கொள்ளுங்கள் என்று கேட்கிறேனே அல்லாமல் வேறல்ல!

கிளைவ் ஆஸ்டல் சம்பவத்திற்கு நீதிபதி குப்பண்ணன் தலைமையில் விசாரணைக்குழு அமைத்து—அறிக்கை பெற்று—அந்த அறிக்கையின்படி போலீஸ் அதிகாரிகளான போலீஸ் சூப்பரின்டென்ட் குணசேகரன், ஆர். டி. ஓ. ராமசாமி ஆகியவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க ஆணை பிறப்பித்து இலாகாபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு திரு. கார்த்திகேயன் அவர்களையும், போலீஸ் ஐ. ஜி. அவர்களையும் நியமித்த கருணாநிதிதான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப்பார்த்து இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

இதே அவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட நேரத்தில்—சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற சம்பவம் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம்தான் வந்தது.—கண்டனத் தீர்மானம் கூட அல்ல—அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வந்த நேரத்திலே—அதற்கு முன்பே அதுபற்றி விஜிலன்ஸ் மூலமாக அதிகாரிகள் கைது செய்யப்பட்டு வழக்குகள் நடைபெற்றாலும்கூட, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று குற்றம்

சாட்டப்பட்டபோது அதற்கு சி. பி. ஐ. விசாரணை வேண்டு மென்றுஹண்டே அவர்கள் இங்கே எழுந்து நின்று அப் போது கேட்டபோது—அன்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் விவாதித்த நேரத்தில் — சட்டசபையிலே அன்றைக்கு எழுந்து நின்று சென்னை மாநகராட்சியில் தவறு நடந்ததாக சட்டசபையில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சொல்வதால் இங்கேயே இப்போதே அறிவிக்கிறேன்: மாநகராட்சி மன்றம் கலைக்கப்படும் என்று சட்டசபையில் அறிவித்து, மேயர், முன்னாள் மேயர், துணை மேயர் போன்ற என்னுடைய பழம்பெரும் நண்பர்கள் உட்பட அனைவரையும் கைது செய்து நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சரை நீங்கள் அந்த வழியைப் பின்பற்றக்கூடாதா என்று கேட்கிறேனே அல்லாமல் வேறில்லை.

தஞ்சையில் மத்திய கூட்டுறவு வங்கியில் ஒரு தவறு நடந்ததைச் சுட்டிக்காட்டி. தஞ்சை நகரத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தோழர்களும் ஒரு ஊர்வலம் நடத்த— மாணிக்கவாசகம் என்ற என்னுடைய ஆருயிர் நண்பர்— வழக்கறிஞர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, மறுநாளே நடவடிக்கை எடுத்து கைது செய்து இரண்டு ஆண்டுக்காலம் சிறை தண்டனை பெற்று, அது மாத்திரமல்ல; வக்கீல் தொழிலே இன்று நடத்த முடியாத அளவிற்கு அன் றைக்கு நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களைப் பார்த்து, இந்தக் கோரிக்கை வைக்கிறேனே அல்லாமல் வேறல்ல.

திருத்தணியில் திருவேங்கடம் என்ற அறங்காவலர் குழு உறுப்பினர் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்தார் என்ற செய்தி கேள்விப்பட்டவுடன் அவரை அந்தக் குழுவிலிருந்து நீக்குவதற்கு ஆணை பிறப்பித்த கருணாநிதிதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இந்தக் கோரிக்கை வைக்கிறேனே அல்லாமல் வேறல்ல.

குடந்தையில் ஒரு அறங்காவலர் குழு உறுப்பினர்— நம்முடைய நாவலருக்கு நன்றாக தெரியும்—கழகச் செயலா ளருடைய சகோதரர், அங்கேயுள்ள கோவில் பிரகாரத்தில் கடைகள் கட்ட பிரகாரத்தை உடைத்தார் என்ற செய்தி கேள்விப்பட்டவுடன், அவரை விலக்கி வைத்து நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான் இன்றைக்கு முதலமைச்சரிடமும் அதே நியாயத்தை எதிர்பார்த்து கிடைக்கும் என்ற நம்பிக் கையோடு கோரிக்கை வைக்கிறேனே அல்லாமல் வேறல்ல.

நாம் எல்லாம் ஒன்ருக இருந்தபோது—நான் மாண்புமிகு முதலமைச்சருக்குச் சொல்லிக்கொள்வேன்; அப்போதிருந்த அமைச்சரவையில் இருந்த மூன்று அமைச்சர்கள் மீது—முழுமையாக, திட்டவட்டமாகக்கூட அல்ல; ஜாடையாக சில குற்றச் சாட்டுகள் சொல்லப் பட்டநேரத்தில்—நம்முடைய கழகச்செயற் குழுவைக் கூட்டி தீர்மானம் போட்டு—மூன்று அமைச்சர்களை நீக்க—அந்தப் பொறுப்பில் இருந்த நேரத்தில் எப்படி நாமெல்லாம் சேர்ந்து முடிவெடுத்து நிறைவேற்றினுேமோ—அப்படி நிறைவேற்றிக் காட்டிய கருணுநிதிதான் இப்போது முதலமைச்சரைப் பார்த்து இன்று நியாயம் கேட்கிறேனே அல்லாமல் வேறல்ல.

**நாங்கள் கேட்பது—**

**அறங்காவலர் குழு கலைக்கப்பட வேண்டும்.**

**அந்தக் குழுவில் உள்ள குற்றவாளிகளும், நிர்வாகிகளும், கிரிமினல் வழக்கிற்கு ஆளாக்கப்பட வேண்டும்.**

**கொலைக்கு உடந்தையாக இருந்து ரெக்கார்டுகளை மாற்றி, பொய் ஆவணங்களைப் புனைந்த கோவில் அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், ரெவினியூ அதிகாரிகள், மருத்துவத்துறையினர் இவர்கள் எல்லாம் சஸ்பெண்டு செய்யப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.**

**இவ்வளவையும் மூடிமறைக்கின்ற வகையில் பல காரியங்களை ஆற்றிய அமைச்சர் வீரப்பன் அவர்களை ராஜினுமா செய்ய வேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன் — முதலமைச்சர் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொண்டு—அதாவது**

**"பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்**

**எழுபது கோடி உறும்."**

**என்ற திருக்குறளைப் புரிந்து கொண்டு— எழுபது கோடி பகைவர்களை விட பக்கத்திலே இருந்து பழுது எண்ணிக் கொண்டிருக்கிற மந்திரி ஆபத்தானவர் என்பதை முதலமைச்சர் உணர்ந்து— அமைச்சர் மீது நடவடிக்கை எடுத்து அவரைப் பதவியிலிருந்து விலக்கச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு**

**இந்த அவையில் நீங்கள் வைத்திருக்கின்ற — இந்த அறிக்கை (பால் கமிஷன் அறிக்கையை ஒரு கையில் காட்டி) பால்; (இது அரசாங்கத்தின் மறுப்பு அறிக்கை) விஷம். நல்லவேளையாக இரண்டையும் கலக்காமல் தனித்தனியாக வைத்திருக்கிருர்கள். அதைக் கலக்காமலேயே — சுந்தரராசன் சொன்னதைப் போல அரசு மறுப்பு அறிக்கையைத் திரும்பா**

**பெற்று பால் கமிஷன் மீது நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.**

இவ்வாறு கூறி எதிர்க்கட்சித் தலைவர் தம் உரையை முடித்தார்.

பின்னர் அறநிலையத்துறை அமைச்சர் வீரப்பன் விவாதத்திற்குப் பதிலளித்தார்.

அமைச்சர் வீரப்பன் பதிலுரைக்குப் பிறகு கழகத் தலைவர் கலைஞர் எழுந்து கீழ்க்கண்டவாறு கூறினார்:— அக்கினியில் குளித்தவர்கள் இங்கேயும் இருக்கிறார்கள்: அங்கேயும் இருக்கிறார்கள்; அது இருக்கட்டும்.

கொலை முயற்சியில் ஈடுபட்டதாக என் மீதும் பேராசிரியர் அன்பழகன், சாதிக்பாட்சா மற்றும் கழகத்திலே உள்ள தலைவர்கள் மீதும் சதிவழக்கு தொடர்ந்து ஐந்தாண்டுகளாக நீதிமன்றத்திற்கு எங்களை அலைய விடுகின்ற அரசு. பால்கமிஷன் அறிக்கையை வெளியிட்டதையொட்டி ஒரு அதிகாரியையும்— எனது நேர்முக உதவியாளரையும்— எனது உறவினரையும் கைது செய்து — எங்கள் கட்சி அலுவலகம், வீடுகளை எல்லாம் சோதனையிட்டு— வழக்கும் தொடர்ந்துள்ள இந்த அரசு இன்றைக்கு அமைச்சர் வீரப்பன் மூலம் நடத்தியுள்ள இந்த வாதம் ஆளும் கட்சியைச் சேர்ந்த உண்மையான குற்றவாளிகளையும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளையும் திருச்செந்தூர் கொலை விவகாரத்திலே தப்புவிக்கவே பயன்படும் என்பதால், இந்த அரசின் போக்கை எதிர்த்து எங்கள் எதிர்ப்பைக் காட்ட வெளிநடப்பு செய்கிறோம்.

தலைவர் கலைஞர் அவர்கள் இவ்வாறு கூறிவிட்டு வெளிநடப்பு செய்தார்கள். கலைஞரைத் தொடர்ந்து கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.

## முதலமைச்சர் அறிவிப்பு

அதன் பிறகு முதலமைச்சர் எழுந்து திருச்செந்தூரில் உள்ள அறங்காவலர்கள் ஐந்து பேரும் தங்களுடைய பதவியை ராஜினாமா செய்து கடிதங்களை அனுப்பியிருப்பதாகவும் குற்றப் புலனாய்வு துறை இதனை மீண்டும் விசாரித்து அரசுக்கு அறிக்கை தரும் என்றும் அதன் பிறகு நடவடிக்கை என்பதையும் தெரிவித்து ராஜினாமா செய்த அறங்காவல் குழுவினருக்கு நன்றியும் தெரிவித்தார்.

# ஆட்சியை அகற்ற அல்ல!
# அக்கிரமங்களை அகற்றவே!

தலைவர் கலைஞர் அவர்கள் உரை வருமாறு:-

மதுரை வடக்குமாசி வீதி— மேல மாசி வீதி சந்திப்பில் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமையில் நடந்த நெடிய பயண வழியனுப்பு விழாக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவரது உரைவருமாறு:- இந்த விழாவினுடைய தலைவர் பேராசிரியர் அவர்களும், இங்கு உரையாற்றிய நம்முடைய கழக முன்னோடிகளும் நாளைக் காலையில் தொடங்கவிருக்கின்ற நெடிய பயணத்திற்கான வழியனுப்பு வாழ்த்துக்களை இங்கே வழங்கியிருக்கிறார்கள்.

நெடிய பயணத்தில் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்த அறிவுரைகளையெல்லாம் மிக விளக்கமாக நம்முடைய பேராசிரியர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

எப்பொழுதுமே வழியனுப்புகின்றவர்கள்தான் நிறையப் பேசுவதும் விடை பெற்றுக் கொள்கின்றவர்கள் குறைவாகப் பேசுவதும்தான் வாழ்க்கை!

புகை வண்டி நிலையங்களில் சென்று பார்த்தால்கூட வண்டிப் பெட்டியிலே அமர்ந்திருக்கின்ற —வழியனுப்புகின்ற உறவினரிடத்தில், வழியனுப்பி வைக்கின்ற பெரியவர்கள் அல்லது வீட்டுத் தாய்மார்கள், 'ஜாக்ரதையாகப் போ' ரயில் பெட்டியிலே கதவுப் பக்கத்தில் நிற்காதே. ஜன்னலைத் திறந்து வைத்துக் கொண்டிருக்காதே. ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டாதே. காதிலே கழுத்திலே இருப்பதெல்லாம் பத்திரம் என்று பல அறிவுரைகளை வழங்குவார்கள்.

## நல்ல பெயரை ஈட்டிட வேண்டும்!

ஆனால் ரயிலிலே செல்லுகின்றவர்கள் புன்னகையோடு தலையை அசைத்து விடைபெற்றுக் கொள்வார்கள். அந்த நிலைதான் இப்போது எனக்கு. வழியனுப்பி வைப்பவர்கள் நிரம்ப இங்கே பேசி அறிவுரைகளையெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். அந்த அறிவுரைகளை ஏற்று நம்முடைய நெடிய பயணம் நாளையதினம் நேர்த்தியான வகையிலும், அண்ணன் போதித்த கடமை, கண்ணியம்,

கட்டுப்பாடு கடுகளவு சிதையாமலும் போற்றிப் பாதுகாக்கப் பட்டு அமைதியாக வெற்றிகரமாக "எட்டு நாள் பயணத்தை மிகச்சிறப்பாக ஏற்றமுடன் நடத்தி முடித்தார்கள்" என்ற நல்ல பெயரினை நாம் ஈட்டிட வேண்டும் என்று காலையிலே என்னுடன் பயணம் தொடங்குகின்ற உடன் பிறப்புகள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நமது தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் விடுத்த வேண்டுகோள் ஒன்றையும், அந்த வேண்டுகோளை நிறைவேற்ற முடியாத நிலைமை நமக்கு ஏற்பட்டதையும் இன்று மாலையிலே பத்திரிகையாளர்களிடத்திலே நான் விளக்கியிருக்கின்றேன்.

அவரது வேண்டுகோள் காலையிலே ஏடுகளிலே வெளி வந்தது. என்னிடமும் அதிகாரி வாயிலாக அந்த வேண்டுகோள் தரப்பட்டது.

அதனை வைத்து நானும் பொதுச் செயலாளரும் நமது கழக முன்னணித் தலைவர்கள் அனைவரும் கலந்து பேசி, தவிர்க்க முடியாத எப்படியும் நீதியை நிலை நாட்டித்தான் தீர வேண்டும் என்கிற கட்டாயத்திற்குத் தள்ளப் பட்டுள்ள காரணத்தினால், மாலையிலே பத்திரிகையாளர்களிடத்திலே கழகம் எடுத்த முடிவை நாங்கள் அறிவித்திருக்கின்றோம்.

## இயலாத ஒன்றை செய்யச் சொல்கிறார்!

முதலமைச்சர் வேண்டிக் கொண்டார். அதை அலட்சியப்படுத்தினோம்; அதை நாங்கள் புறக்கணித்தோம், பொருட்படுத்தவில்லை என்று யாராவது எண்ணிக் கொள்வீர்களேயானால், அதற்காக நான் மெத்தவும் வருத்தப் படுகிறேன்.

இயலாத ஒன்றை அவர் எங்களைச் செய்யச் சொல்கிற நேரத்தில் அதற்கு இணங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற் பட்டு விட்டதே என்பதற்கான விளக்கங்கள் நாங்கள் அவருக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திருச்செந்தூர் ஆலயத்தில் நடைபெற்ற பயங்கர படுகொலை 1980-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ம் நாள் நிகழ்ந்த ஒன்று.

அதற்குப் பிறகு அந்த வட்டாரத்திலே மக்கள் கொதித் தெழுந்தனர். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த வர்கள் மாத்திரமல்ல; அந்தப் பகுதியிலே உள்ள அனைத்துக் கட்சியினரும் கண்டனக் கூட்டங்களை நடத்தினர். பேரணிகளை நடத்தினர். அந்த வட்டாரத்திலே ஒரு நாள் முழுக் கடையடைப்பு நடத்தினர்.

திருச்செந்தூர் ஆலயத்தில் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை இறந்ததாகச் சொல்லப்படுவது இயற்கையானது மில்லை; தற்கொலையுமில்லை: அது ஒரு படுகொலை. எனவே அதற்கு விசாரணை வேண்டும் என்று தெரிவித்தனர்.

அரசு அதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தயக்கம் காட்டியபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக— எதிர்க்கட்சியினுடைய தலைவன் என்கின்ற முறையில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களுக்கும் உள்துறை அமைச்சர் ஜைல்சிங் அவர்களுக்கும், தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களுக்கும் விளக்கமாகத் தந்திகளை அனுப்பி—உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று நான் கேட்டுக் கொண்டேன்.

அப்படிக் கேட்டுக் கொண்டபோது அந்த தந்தியிலே குறிப்பிட்ட வாசகங்கள் கூட ஒரு சிறந்த—தமிழகத்தினுடைய புலனாய்வுத் துறையின் மூலம்—சி. ஐ. டி. பிராஞ்சின் மூலம்—நடவடிக்கை எடுங்கள் என்றுதான் கேட்டுக் கொண்டேன். இன்றைக்கு எம். ஜி. ஆர். அரசு தானே வலிய மத்திய புலனாய்வுத் துறையைக் கேட்டும் பெற்று இந்த விசாரணையை நடத்த வேண்டும் என்றும் நான் வற்புறுத்துவதற்குக் காரணம், இந்த இடைக்காலத்திலே நடைபெற்றுவிட்ட பல்வேறு விதமான பயங்கள், செயல்கள் —கொலையை மூடி மறைக்க அரசாங்கமே மறைமுகமாகத் துணை போன காரியங்கள் ஆகிய இவைகள் தான்.

இந்த அரசாங்கம் அல்லது இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற போலீசார் உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு நிச்சயமாக பயன்பட மாட்டார்கள் என்று நமக்கு வலுத்து விட்ட சந்தேகம்—அந்தச் சந்தேகத்திற்குக் காரணமே அரசினுடைய தொடர் நடவடிக்கைகள் தான்.

## கொலைகாரர்களை மறைத்திட அரசு முயல்கிறது!

எனவேதான் நீதிபதி பால் அவர்களைக் கொண்டு ஒரு விசாரணை நடைபெற்று, அது முடிவுற்று ஏறத்தாழ ஐந்து மாதங்களுக்கு முன்பு அறிக்கை அரசாங்கத்தினிடத்திலே ஒப்படைக்கப்பட்டு அந்த அறிக்கையிலே உள்ள தகவல்களைப் பொதுமக்கள் நன்மைக்காக வெளியிடுகின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டி, அதைப் பொது மக்களுக்கு வழங்கி, ஏடுகள் மூலமாக வழங்கி அதற்குப் பிறகு சட்டமன்றத்திலே அந்த

அறிக்கை வைக்கப்பட்டு, நீதிபதி பால் அவர்கள் இந்தச் சம்பவம் குறித்து இப்படிப்பட்ட கருத்து அறிவித்திருக்கிறார். இன்னின்ன முடிவுகளை வெளியிட்டிருக்கிறார். அந்த முடிவு களின் மீது இந்த அரசாங்கம், இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்று சொல்வதற்கு பதிலாக நம் முடைய நாஞ்சிலார் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல்— சாதிக் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல்— நீதிபதி பால் கமிஷனுக்கு மேலாக— இவர்களே நியமித்த நீதிபதி ஆய்ந்து, எடுத்து அறிவித்த முடிவுகளுக்கு மாறாக— நீதிபதியினுடைய இந்தக் கண்டுபிடிப்புகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று எடுத்துக் காட்டுகின்ற விதத்திலே மற்றொரு அறிக்கையைத் தயார் செய்து சட்டப் பேரவையினுடைய மாமன்றத்திலே வைத்தது. வைத்தது மாத்திரமல்ல, அப்படிப்பட்ட மாற்று அறிக்கையிலே காணப்படுகின்ற செய்திகள்தான் உண்மை யானவை என்று அந்த துறையினுடைய அமைச்சரும் வாதாடி, குற்றவாளிகளுக்காக— கொலைகாரர்களுக்காக— அவர்களைத் திரையிட்டு மறைப்பதற்காக ஒரு சதி நடை பெறுகிறது என்றால் அதை ஜனநாயகத்திலே நம்பிக்கை யுள்ள — நீதியிலே நாட்டமுள்ள எதிர்க்கட்சி எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்?

எனவேதான், ஏற்கெனவே நாம் அறிவித்தவாறு நம் முடைய நெடிய பயணத்தைத் தொடங்க வேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டிருக்கின்றது.

நேற்று விவாதம் முடிவுற்றது. — அமைச்சருடைய வாதம் (வீரப்பனுடைய வாதம்) குற்றவாளிகளுக்குச் சார்புடையதாக கொலைகாரர்களுக்கு சார்புடையதாக இருப்பதாய் எடுத்துக் காட்டி— திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் சட்டமன்றத்திலிருந்து வெளி நடப்புச் செய்தபிறகு, முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் ஓர் அறிக்கையை வெளியிட்டார்!

## பதவியிலிருந்து விலகுவதல்ல பிரச்சினை!

திருச்செந்தூர் முருகன் ஆலயத்தைச் சேர்ந்த அறங் காவலர்கள் ஓர் ஐந்து பேர்—நாவலர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் — தங்களுடைய பதவியிலிருந்து விலகி விட்டார்கள் என்கிற அறிவிப்பு அது!

பதவியிலிருந்து விலகுவதல்ல பிரச்சினை! கொலை செய்வதற்கு காரணமாக இருந்தவர்கள் என்று நீதிபதி பால் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர்கள்— பேராசிரியர் அவர்கள் இங்கே அடுக்கடுக்காக எடுத்துக் காட்டினாரே ஆதாரங்களை— அதைப்போல முருகன் ஆலயத்திலே உள்ள உண்டியலை அதிகாரி சுப்பிரமணியபிள்ளை வருவதற்கு முன்பே உடைத்து — அதிலே இருந்த ஏராளமான பொருட்களைத் திருடியவர்கள் ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம், பத்தாயிரம் என்றால் கூட — அந்தத் திருட்டை மறைப்பதற்கு ஒரு கொலை செய்திருக்க மாட்டார்கள்!

அந்த உண்டியலிலே இருந்த தங்கநகை, வைரவேல்— வைர அட்டிகை ஆகிய இவைகள் அத்தனையையும் திருடிய காரணத்தினாலே, அதை மறைக்க—அவை எங்கே என்று கேட்ட சுப்பிரமணிய பிள்ளையைக் கொலை செய்து முடித்தார்கள். அவர்கள் விலக்கப்பட வேண்டும்; நீக்கப்பட வேண்டும்; அவர்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும்; நீதிமன்றத்திலே குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்!

இத்துணைக்கும் மாறாக, "அவர்கள் பதவி விலகி விட்டார்கள்! பதவி விலகி விட்டது மாத்திரமில்லை! தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்பதை நிலைநாட்டுகின்ற வகையில் பதவி விலகி விட்டார்கள்; அந்தத் தூய்மையானவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார் எம். ஜி. ராமச்சந்திரன்.

தமிழகத்தை ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற அருமை நண்பர் முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் இந்த அளவிற்குச் சென்று விடுவாரேயானால், இந்த அறங்காவலர்கள் — நீதிபதி பால் அவர்கள், சுட்டிக்காட்டியதைப் போல நடவடிக்கைக்கு ஆளாக முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

எனவேதான் எங்களுடைய ஐயம் மேலும் மேலும் வலுத்தது. ஏற்கனவே இருந்த ஐயம் பலப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் சுப்பிரமணிய பிள்ளை படுகொலைக்காக நீதி கேட்டு நெடிய பயணம் நடத்துகிறோம். இதனால்— நாளைக்கே— இன்றைக்கிருக்கின்ற அரசைக் கவிழ்த்து விடலாம் என்கின்ற கெடு நினைப்பு கொண்டது இல்லை நம் கழகம்!

## வழக்கம் போல் இரட்டை வேடம்!

நான் இன்னும்கூடச் சொல்வேன். இந்த அக்கிரம ஆட்சி அழிய வேண்டும்! அதையே திருத்தி மாற்றிச் சொன்னால், இந்த ஆட்சியினுடைய அக்கிரமங்கள் அழிய வேண்டும் என்பதுதான் எங்களுடைய குறிக்கோள் ஆகும்!

அக்கிரம ஆட்சி அழிய வேண்டும்! அது ஐந்தாண்டு கால ஜனநாயக கால கட்டத்திலே மக்கள் நடத்தி முடிக்க வேண்டிய காரியம்!

அதற்கு இடைப்பட்ட காலத்திலே முடிக்க வேண்டிய காரியம், மக்களால் நடத்தி முடிக்கப்பட வேண்டிய காரியம் ஆட்சியினுடைய அக்கிரமங்கள் அழிக்கப்பட வேண்டும்—நீக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்!

இது ஒவ்வொரு எதிர்க்கட்சியும் தங்களுடைய கடமையைக் கருதிச் செய்தாக வேண்டிய காரியம்!

நான் முதலமைச்சரைக் கேட்கிறேன். நான் இங்கே பேசுவதை—அவர் இங்கே இல்லாவிட்டாலும்—சென்னையிலிருந்து இந்நேரம் கேட்டுக் கொண்டுதான் இருப்பார். நான் அவரைக் கேட்கிறேன். இந்த அறப்போராட்டத்திலே ஈடுபடாதீர்கள், நெடிய பயணம் தேவையில்லை; அவக்கள் பதவி விலகிவிட்டார்கள் என்றெல்லாம் வேண்டுகோள் விடுக்கின்ற அதே முதலமைச்சர், அதே சென்னை மாநகரத்திலேயிருந்து, அவருடைய கட்சி அலுவலகத்திலேயிருந்த வண்டி வண்டியாக—பெட்டி பெட்டியாக இந்த நெடிய பயணத்திற்கு எதிராக—கடுமையான வாசகங்கள் அமைந்த—உண்மைக்கு மாறான செய்திகள் மலிந்த சுவரொட்டிகள் ஆயிரக்கணக்கிலே அச்சடித்து, மதுரையிலிருந்து திருச்செந்தூர்வரை ஒட்டுங்கள் என்று அனுப்பி வைத்து விட்டு இரட்டை வேடம் போடுகிறார் என்றால் நாங்கள் இவருடைய நல்லெண்ணத்தை எப்படி நம்புவது?

நம்முடைய பி. டி. ஆர். கேட்டார் ஏதோ நல்லெண்ணம் உங்களுக்கும், அவருக்கும் இடையிலேயிருப்பதாக, முதலமைச்சர் சொல்லியிருக்கிறாரே, எங்களுக்குத் தெரியாமல், அது என்ன உறவு? என்று.

நான் பி. டி. ஆர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். எனக்குப் பழைய கால வரலாறு ஒன்றுதான் நினைவுக்கு வந்தது. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரை தந்தை பெரியார் அவர்கள் சந்தித்து சந்தித்த பிறகு கோவை நகருக்கு வந்த நேரத்தில் அந்த மண்டபத்தில்

பேரறிஞர் அண்ணு அவர்கள் பெரியார் அவர்களைப்பார்த்து "பெரியார் அவர்களே! ராஜாஜியோடு நீங்கள் பேசிய ரகசியம் என்ன? அதை இங்கே பகிரங்கமாகச் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

அதைப் போல பி. டி. ஆர். கேட்டதாக நான் எண்ணிக் கொள்ள மாட்டேன். பெரியாரும் ராஜாஜியும் பேசுகிருர்கள் என்ருல் இரண்டு முதுபெரும் அரசியல் வாதிகள் பேசிக்கொண்டார்கள். நானும் எம். ஜி. ஆரும் பேசுகிருேம் என்ருல், இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டார்கள் என்கிற அளவிலேதான் பி. டி ஆர். போன்றவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல்—ஏதோ பெரிய அரசியல் இரகசியம் நாங்கள் இருவரும் பேசினேம். எங்களிடத்திலே பெரிய அரசியல் உறவு இருக்கிறது என்றெல்லாம் அவர் கருதிக் கொள்வாரேயானுல் நான் அதை மறுக்கக் க'டமைப்பட்டிருக்கிறேன். எம். ஜி ஆருடைய அகராதியில்—அவர் யாத்துத் தந்திருக்கின்ற நூலில்—நல்லெண்ணம் என்பதற்கு இலக்கணம் இதுதான். ஒரு பக்கத்திலே வேண்டுகோள்; இன்னெரு பக்கத்திலே சுவரொட்டிகள். இந்த இரண்டையும் செய்கிருரே அவர்தான் எம் ஜி. ஆர்.

எனக்குத் தெரியும், எப்படியாவது இந்த நெடிய பயணத்தை நிறுத்திவிட்டு, நான் வழக்குத் தொடருகிறேன், கிரிமினல் நடவடிக்கை எடுக்கிறேன் என்றெல்லாம் நம்ப வைத்து விட்டு—நெடிய பயணத்தை நாமும் அவருடைய பேச்சை நம்பி நிறுத்திவிட்டால் பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஏமாற்றலாம் என்பதைத் தன்னுடைய கடந்த கால வரலாறுகள் பலவற்றின் மூலம் மெய்ப்பித்துக் காட்டியவர்தான் இன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள்.

சட்டமன்றத்தில் இஸ்மாயில் கமிஷன் அறிக்கை ஏன் இன்னும் வைக்கப்படவில்லை என்று நாங்கள் கேட்டோம் முதலமைச்சர் எம். ஜி. ஆர். "நான் அதை கவர்னருக்கு அனுப்பி ரொம்ப நாளாயிற்று. கவர்னர் எனக்கு இன்னும் அனுப்பவில்லை. அதனுல்தான் வைக்கவில்லை" என்ருர்.

மறுநாள் நிருபர்கள் கவர்னரைக் கேட்டார்கள். "இன்னும் ஏன் நீங்கள் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப் படித்துப் பார்த்துவிட்டு எம். ஜி, ஆருக்குத் திரும்ப அனுப்பவில்லை?" என்று!

"அப்படி ஒரு அறிக்கை வரவேயில்லையே. நான் எப்படித் திரும்ப அனுப்ப?'' என்று கவர்னர் கேட்டார் நிருபர்களை.

இந்தச் செய்தி ஏடுகளில் வந்ததும் நான் சட்டமன்றத் திலே பிரச்னையை எழுப்பி, முதலமைச்சரை நேருக்கு நேராகக் கேட்டேன். நீங்கள் நேற்றைய தினம் இந்த மன்றத்திலே சொன்ன அந்தச் செய்தி தவறானது. கவர்னர் அதை மறுக்கிறார். இதற்கு என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டபோது முதலமைச்சர் எம். ஜி. ஆர். சொன்னார் "நான் அப்பொழுதே அதிகாரிகளிடத்திலே கொடுத்து விட்டேன். அவர்கள் போய்ச் சேர்க்காதது அவர்களுடைய குற்றம். அந்த அதிகாரிகள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன்" என்று சொன்னார்.

அப்போது நிதியமைச்சர் நம்முடைய நாவலர். அவருக்கு நன்றாக நினைவிருக்கும். சொல்லி இரண்டாண்டு மூன்றாண்டு ஆகிறது. இதுவரையிலே இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை அவர் தந்தும், கவர்னரிடத்திலேயே கொண்டு போய் உரிய நேரத்திலே சேர்க்காத அந்த அதிகாரி மீது முதலமைச்சர் எம். ஜி. ஆர். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## கண்ணகியின் கதறல்

அதைப் போலத்தான் இப்பொழுதும் தற்காலிமாக நம் முடைய அறவழி கிளர்ச்சியை நிறுத்திவிட்டால் பிறகு எதையாவது சொல்லி மக்களை ஏமாற்றலாம் என்கிற அந்த நல்லெண்ணத்தோடுதான்—அவரைப் பொறுத்தவரை நல் லெண்ணம் அல்லவா அது?—அந்த நல்லெண்ணத்தோடு தான் இப்படிப்பட்ட ஒரு வேண்டுகோளை. அவர் விடுத் திருக்கிறாரேயல்லாமல், எப்படியும் கொலையாளிகள்— குற்றவாளிகள் நீதி மன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும் என் கிற அந்த தூய்மையான எண்ணம் முதலமைச்சர் எம். ஜி. ஆருக்கு இல்லையென்று இன்றைக்குத் துல்லியமாகத் தெரிந்து விட்டது. எனவேதான் ஒரு சுப்பிரமணியபிள்ளைக் காக அல்ல; நாங்கள் திருச்செந்தூருக்குச் செல்கிறோ மென்றால் புராணத்திமே படித்தோம் அதைப் போல— சத்தியவானுடைய உயிரை எமனிடமிருந்து சாவித்திரி மீண்டும் மீட்டுவிட்டாள் என்பதைப் போல—சுப்பிரமணிய பிள்ளையினுடைய உயிரை மீட்டுக் கொண்டு வருவதற்காக அல்ல.

கண்ணகி அன்று என்ன சொல்லிக் கதறினாள் மதுரை வீதியிலே? என்னுடைய கணவனைக் கொன்று விட்டீர்களே. கொன்றுவிட்டீர்களே என்று சொல்லியா ஓலமிட்டாள்? இல்லை, என்னுடைய கணவனைக் கொல்லலாமா? கொல்லலாமா என்று கேட்டா ஓலமிட்டாள்? இல்லை. என் கணவன் கள்வனா? என் கணவன் கள்வனா? என்றுதான் கேட்டாள்.

அதைப் போலத்தான் இன்றைக்கு சுப்பிரமணியபிள்ளையினுடைய குடும்பத்திலே போய் ஆறுதல் சொல்லச் சென்றால் அவருடைய துணைவியாரும், அவருடைய உற்றாரும், உறவினரும் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? ஏதோ கொன்று தொலைத்தார்கள். சாகடித்தார்கள். மரணத்தின் வாயிலிலே தள்ளினார்கள். கொலைகாரர்களைப் பிடிப்பார்களோ இல்லையோ அதைப்பற்றிக்கூட எங்களுக்குக் கவலை இல்லை. அவரைத் திருடன் என்று சொன்னார்கள். அதைத்தான் எங்களால் தாங்க முடியவில்லை என்றுதான் இன்றைக்கு அங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு குடும்பத்திலே இந்த நிலைமையை அனுமதித்தால் நாளை எத்தனைக் குடும்பங்களுக்கு இந்த நிலை வருமோ ?

இது, அத்தனை பேருக்கும் தெரிந்த ஒரு நிகழ்ச்சி! இன்னும் தெரியாத நிகழ்ச்சிகள் எத்தனை! எத்தனை!

நாள்தோறும் பத்திரிகைகளிலே செய்தியாக வந்துகொண்டிருக்கிற நிகழ்ச்சிகள் எத்தனை! எத்தனை!

இந்த அநியாயங்களுக்கெல்லாம் முடிவு ஏற்பட்டு ஒரு விடிவு காலம் ஏற்பட வேண்டாமா? அதற்காகத்தான் இந்த நெடியபயணத்தை நாம் மேற்கொண்டிருக்கிறோம்!

இந்தப் பயணத்திலே ஈடுபடுகிற அத்துணைப் பேரும் எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், மற்றவர்களும் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்

அந்தப் பொறுப்புணர்ச்சியை நம்முடைய பொக்கிஷமாகக் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பாதையில்—அவர் காட்டிய அறநெறியில் அணுவளவும் தவறாமல் இந்தப்பயணம் வெற்றிபெற எல்லா வகையிலும் நீங்கள் உதவிட வேண்டும்—உதவிடவேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு கூறி தலைவர் கலைஞர் அவர்கள் நெடிய பயணம் செல்ல விடைபெற்றார்.

(மதுரை வழியனுப்பு விழா கூட்டத்தில் கலைஞர் உரை 14—2—82)

# கொலேகாரர்களுக்கு உடந்தையாக கொலுவில் இருப்போரா?

மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையில் சற்றேறப்ப இரு நூறு கிலோ மீட்டர் தொலேவு நீதி கேட்டு நெடிய பயணம் மேற்கொள்ளப்பட்டு இன்று ஏறத்தாழ 30கிலோ மீட்டர் அளவிற்கு இந்தப் பயணத்தில் நாங்கள் ஈடுபட்டு உங்களே எல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினே இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் பெற்றிருக்கிறேம்.

## தங்கத் திருவடிகள்!

என்னுடைய அருமை நண்பரும் நாடாளுமன்றத்திலே பீரங்கியாக முழங்குபவருமான மாயத்தேவர் அவர்கள் இங்கே பேசும்போது, "கலேஞர் தனது தங்கத் திருவடிகள் நோக நடந்து வருகிறூர்" எனக் குறிப்பிட்டார். அப்போது எனக்கு ஏற்பட்ட ஆசையெல்லாம் இந்தப் பாதங்கள் தங்கத் தாலே ஆகியிருக்கக்கூடாதா என்பதுதான். பாதங்கள் தங்கத்தாலே இருந்திருக்குமேயானுல் இன்று நடந்ததிலே என் பாதங்களிலே ஏற்பட்ட கொப்பளங்கள் நிச்சயமாக ஏற்பட்டிருக்காது. எனது பாதங்கள் தங்கப் பாதங்கள் அல்ல; தாமரைப் பாதமும் அல்ல. சராசரி மனிதனுக்கு—ஒரு சாதாரண—சாமானிய மனிதனுக்கு எந்தப் பாதமோ அதே பாதம்தான் நானும் பெற்றிருக்கிறேன்.

சிலருடைய பாதங்கள் உழைத்து—கழனியிலே இறங்கி—வயலோரங்களில் வரப்போரங்களில் நடந்து பழகி வலுப் பெற்று இருக்கக்கூடும். அத்தகைய காரியங்களிலே ஈடுபடுகிற வாய்ப்பினே நான் பெறுத காரணத்தினுல் வலிவற்ற—மென்மை என்றுகூடச் சொல்லமாட்டேன்—பலகீனமான பாதங்கள் என்னுடைய பாதங்களாக இருக்கக்கூடும்.

30 கிலோ மீட்டர் நடந்ததற்கு என்னுடைய பாதங்கள் கொப்பளித்து, என்னுடைய அருமை உடன்பிறப்புக்கள் சில பேர் எதிரிலே அமர்ந்து — என்னுடைய சங்கடத்தை உணர்ந்து "உட்கார்ந்து கொண்டே பேசுங்கள்" என்று அன்புக் கட்டளே இடுகின்ற அளவிற்கு நிலேமை ஏன் ஏற்பட்டது?

இது யாரோ தந்த தண்டனேயினுல் எங்களுக்குக் கிடைத்ததா? "மதுரையிலே யிருந்து திருச்செந்தூர் வரையிலே ஏறத்தாழ 120 அல்லது 125 மைல் நீங்கள் நடக்க வேண்டும். நீங்கள் செய்த குற்றத்திற்கு இதுதான் தண்டனே" என்று எந்த நீதிமன்றமாவது எங்களுக்குத் தீர்ப்பு வழங்கியிருக்

கிறதா? அல்லது நாங்கள், 120 மைல் நடந்து வரு கிறோம்; நாங்கள் கேட்ட வரத்தைத் தாருங்கள், என்று திருச் செந்தூர் முருகனை நாங்கள் பிரார்த்தனை செய்து, அந்தப் பிரார்த்தனையைச் செலுத்த வேண்டுமென்பதற்காக இன் றைக்கு நடந்து கொண்டிருக்கிறோமா?

## நீதியை நிலைநாட்டிட...

இல்லை! ஆனால் தவிர்க்க முடியாத ஒரு கடமையை இந்தத் தமிழ்ச்சமுதாயத்திற்கு—இந்தத் தமிழ் நிலத்திற்கு தேடித் தரவேண்டிய ஒரு நீதியை நிலைநாட்டுவதற்காகத் தான் நானும், நம்முடைய கழகத் தலைமையினுடைய முன் னணியினரும், மாவட்டங்களின் தளகர்த்தர்களும் மகளி ரும், மாணவரும், இளைஞர் அணியினரும், பாட்டாளித் தோழர்களும் இன்று காலையிலிருந்து இலட்சம் பேர் இந்த அணிவகுப்பிலே வந்த காட்சியை நாடு அறிந்திருக்கிறது.

நாடு அறிந்திருக்கிற காரணத்தினாலேதான் —நாடு மாத் திரமல்ல உலகத்திலே இருக்கிற பல்வேறு தேசங்களும் அறிந்து கொள்ளும் என்ற நம்பிக்கையின் காரணமாகத்தான் சென்னையிலே இருக்கிற வானொலியும்—திருச்சியிலே இருக் கிற வானொலியும் கோவை—நெல்லை போன்ற இடங்களிலே இருக்கிற வானொலியின் கிளைகளும் அல்லது தொலை ஒளிக் காட்சி நிலையமும் நம்முடைய செய்திக்கு அதிக முக்கியத் துவம் தரவில்லையே தவிர வேறு அடிப்படைக்காரணம் இருப்பதாக நான் கருதிடவில்லை.

மாயத்தேவர் இங்கே மிகுந்த, ஆவேசத்தோடு குறிப் பிட்டார். சென்னையில் இருக்கிற வானொலி நிலையம் என்ன செய்கிறது? ஏன் எங்களுடைய செய்தியை ஒரு வரியில் சொல்கிறது? டி.வி. எதை எதையோ படம் எடுக்கிறதே! பாரதி விழாவிற்கு ஓடுகிறதே: தேவையான ஒன்றுதான். ஆனால் பாரதிக்கு தரப்பட்ட முக்கியத்துவத்தைவிட வேறு யாருக்கோ தரவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படு கிறதே! என்ன காரணம் என்று இந்தச் சிந்தனைகளெல் லாம் தமிழ்நாட்டிலே உள்ள மக்களுக்கு வராமல் இல்லை.

ஆனால் நான் ஒன்றை மாத்திரம் நம் கழக உடன்பிறப்பு களுக்கும், இந்த கழகத்தை நீண்ட நெடுங்காலமாக உன்னிப் பாக கவனித்து வருகின்றவர்களுக்கும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பத்திரிகை பலம்—வானொலியின் பிரச்சாரம், டி.வி. போன்று இன்றைக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப் புக்கள்—வசதிகள் எதுவும் இல்லாமல் வளர்ந்ததுதான் தி.மு. கழகம்.

அண்ணா ஒருமுறை சென்னை கடற்கரை கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். அண்ணா பேசியதை சொல்கிறேன். "முன்பெல்லாம் அண்ணாதுரை பேசினால், ஒரு பெரிய நிகழ்ச்சியில் பேசியவர்கள் பேச்சையெல்லாம் ஒரு காலம், இரண்டு காலம் என்று போட்டுவிட்டு கடைசியாக ஒரு வரியிலே அண்ணாதுரையும் பேசினார் என்று போடுவார்கள். அப்படி இருட்டடிப்பு செய்யப்பட்ட அண்ணாதுரைதான் இன்றைக்கு தமிழகத்தை ஒளிமயமாக ஆக்குகின்ற ஒரு பெரும் இயக்கத்தின் தலைவனாக ஆக்கப்பட்டிருக்கிறேன்" என்று அண்ணா அவர்கள் சொல்லுவார்கள்.

எனவே நம்முடைய செய்திகளை யார் போடுகிறார்கள்? யார் இருட்டடிப்பு செய்கிறார்கள்? யார் திருத்தி வெளியிடுகிறார்கள் என்பதைப்பற்றி யெல்லாம் கவலைப்படாமல், நமக்கு ஏடுகள் இல்லாமல் இருக்கலாம்; நமக்கென்று இன்றைக்குக் கிடைத்திருக்கின்ற பிரச்சார சாதனங்களான ஏடுகள் 'முரசொலி' 'தினகரன்' 'எதிரொலி' என்கின்ற இந்த மூன்று நாளேடுகளோடு முடியலாம்.

மற்ற ஏடுகளெல்லாம் அரசாங்கத்தால் பயமுறுத்தப்பட்டு நம்முடைய செய்திகளைப் போட்டால் தங்களுக்குக் கிடைக்கின்ற விளம்பரங்கள் இலட்சக்கணக்கிலே—கோடிக் கணக்கிலே ஆதாயங்கள் தருகின்றவகையிலே தரப்படுகின்ற விளம்பரங்கள் வராமல் போய்விடும். விளம்பரங்கள் வராவிட்டால்கூடபரவாயில்லை. சில நேரங்களில் கைக்கு விலங்கே கூட வந்துவிடும் என்ற அளவிற்குப் பயப்படுகின்ற பத்திரிகையாளர்கள் தமிழகத்திலே இருக்கின்ற காரணத்தினாலே தான் நாம் மிகச் சிறிய அளவிலே பத்திரிகை வசதிகளைப் பெற்று நம்முடைய இயக்கத்தினுடைய நடவடிக்கைகளை நிகழ்ச்சிகளை நாட்டிற்கு எடுத்துக்கூற முடிகிறது.

இன்று காலையிலே இருந்து இதுவரையிலே ஒரு லட்சம் பேர் இந்த வழிநடைப் பயணத்திலே அணிவகுத்து வந்தீர்கள் என்றால் நான் கேட்கிறேன்; வானொலி மூலம் உங்களை அழைத்தா வந்தீர்கள்? இல்லை! அல்லது டி.வி. காட்சியிலே—நான் தொண்டரை, நீங்களெல்லாம் வரவேண்டும் என்று குறிப்பிட்டா வந்தீர்கள்? இல்லை!

## முதலமைச்சர் என்பதால் இந்த செல்வாக்கு கிடைக்குமா?

இன்னும்கூட உங்களுக்குச் சொல்வேன்; "நீதி கேட்டு நெடிய பயணம்" என்ற நம்முடைய விளம்பரத்தை சில

பத்திரிகைகள்கூட போட மறுத்துவிட்டார்கள். எக்ஸ்பிரஸ்—தினமணி பத்திரிகைகளிலே விளம்பரமாக வெளியிட்டார்கள். தினகரன், முரசொலி, எதிரொலி ஆகிய ஏடுகளிலே நம்முடைய விளம்பரங்கள்—செய்திகள் வந்தன. ஆனுல் ஒரு சில ஏடுகள் இந்த நெடிய பயணத்தின் விளம்பரத்தைக்கூட வெளியிட மறுத்துவிட்ட நிலைமைதான் இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது. ஆனுல் எனக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு. இந்தக் கழகத்திற்கும் உங்களுக்கும் இருக்கின்ற தொடர்பு, பத்திரிகை மூலமாக அல்லநம்முடைய உள்ளங்கள் மூலமாக ஏற்பட்டிருக்கின்ற தொடர்பு. அந்தத் தொர்டர்பை எவராலும் அழித்துவிட முடியாது.

இங்கே பேசிய நண்பர்கள் "எதிர்கால முதலமைச்சர் கருணுநிதி" என்று குறிப்பிட்டார்கள்.

நான் இன்று மாலையிலேகூட நண்பர்கள் ஆற்காடு வீராசாமி, தென்னரசு ஆகியோரிடம் சொல்லிக்கொண்டிருந்தேன்.

முதலமைச்சராக இருந்து பட்டுக்குடை, பதவிகள் பவிசுகள், போலீசார் அணிவகுப்பு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஓடிவந்து காரின் கதவைத் திறக்கின்ற காட்சிகள், அதிகாரவர்க்கம் புடை சூழ வருகின்ற ஆடம்பரங்கள் ஆர்ப்பாட்டங்கள் இன்ன பிறவற்றை எண்ணிப் பார்க்கிறேன்!

இன்று காலை மதுரையிலே அண்ணு சிலைக்கு மாலை அணிவித்துவிட்டுப் புறப்பட்ட காட்சியை நினைக்கிறேன்! "வருகிறேன் அண்ணு! நீ இருந்து என்னை வழி அனுப்பி வைத்திருக்க வேண்டும்! நீ இல்லாவிட்டாலும், நீ என்னேடு இருக்கிருய்! எங்களோடு இருக்கிருய்! எங்களது ஊனேடும் உயிரோடும் உயிர்மூச்சோடும் கலந்திருக்கிருய்! எங்கள் இதயத் துடிப்புகளிலெல்லாம் நிறைந்திருக்கிருய்! எனவே, அண்ணு! நாம்தான் வழிநடைப் பயணம் செய்கிறேம்!" என்று நாம் அண்ணுவின் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு இன்று மதுரையிலேயிருந்து இங்கே புறப்பட்டு வருகிற நேரத்தில் லட்சத்திற்கு மேற்பட்டோர் அணிவகுத்தீர்களே! அது முதலமைச்சர் என்பதால் கிடைத்த செல்வாக்கா? (கைதட்டல்)

இதைவிடவா முதலமைச்சர் பதவி பெரிது! கேவலம்! இதைவிட முதலமைச்சர் பதவிபெரிது என்று நம்புபவன் கருணுநிதி என்று நீங்கள் கருதுவீர்களாஞல், அது தவறு! எனக்கு நீங்கள்தான் வேண்டும்! உங்களுடைய உள்ளங்கள் தான் வேண்டும்! (கைதட்டல்)

நான் உங்களையெல்லாம் நடக்க வைத்திருக்கிறேன், நீங்களோ நான் நடப்பதைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள்.

ஆனால், என்னுடைய ஆணை கேட்டு—வேண்டுகோள் கேட்டு நீங்கள் வருகிறீர்கள்!

என்னுடைய ஆணையை வேண்டுகோளாக ஏற்றுக் கொண்டீர்களோ அல்லது வேண்டுகோளை ஆணையாக மாற்றிக் கொண்டீர்களோ எனக்குத் தெரியாது! அது உங்களுக்கும் எனக்குமுள்ள உறவின்பாற்பட்டது!

என்னுடைய வார்த்தையைக் கேட்டு ஓர் அறிக்கையைப் பார்த்து—"வாருங்கள்!" என்று அழைத்தவுடன் இன்றைக்கு லட்சக்கணக்கானோர் வருகிறீர்கள் என்றால், இதைவிடவா பதவிகளும் பவிசுகளும் எனக்குப் பெயரைத் தேடித் தந்து விடமுடியும்?

அப்படிப்பட்ட ஒரு மாபெரும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்!

அந்தக் கழகம், என்னுடைய நண்பர் அன்பில் அவர்கள் இங்கே சொன்னதைப் போல்—தமிழகத்திலே எத்தனையோ பிரச்சனைகளைச் சந்தித்திருக்கிறது! எத்தனையோ பிரச்சினைகளுக்காகப் போராடியிருக்கிறது. இந்த மாநிலத்தினுடைய உரிமைகள் பறிக்கப்படாமலிருக்க வேண்டும் என்பதிலே அந்தக் கழகத்திற்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

நம்முடைய தாய்மொழி—நம்மை ஈன்றெடுத்த மொழி—நமக்கு இன்னமும் இனமான உணர்வை ஊட்டிக் கொண்டிருக்கின்ற மொழி—வரலாற்று சிறப்பு மிக்க மொழி—இலக்கியத்திலே நடமாடுகிற மொழி—காப்பியமாய்—காவியமாய்—கவிதையாய்—கனி மொழி சிந்திக் கொண்டிருக்கின்ற மொழி—அந்த மொழிக்கு உரியவர்கள் நாம்—தாய்த்தமிழ் மொழிக்கு உரியவர்கள் நாம். அந்த மொழிக்கு ஆபத்து வந்த நேரத்தில் நாம் பேரணி நடத்தி இருக்கின்றோம். இப்படிப்பட்ட அளவுக்கு இவ்வளவு நீண்ட தொலைவு இத்தனை லட்சம் பேரை அழைத்து கொண்டு இல்லாவிட்டாலும் அன்றைக்கு நம்முடைய கழகம்—இயக்கம் வளர்ந்திருந்த அளவுக்கு 1938-ம் ஆண்டிலே இருந்து இதுநாள் வரையிலே ஏறத்தாழ நாற்பது அல்லது நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஒரு பெரும் மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

அதைப் போலவேதான் மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள், விலைவாசியால் வேதனைப் படுகிறார்களா? விவசாயி

களுடைய பிரச்சினை தலைதூக்கி அவர்களுடைய ஆடுமாடு களும் வீட்டுக் ஜன்னல்களும் கதவுகளும் உழவடிச் சாமான்களும் அவர்களுடைய இல்லத்திலே இருக்கின்ற பண்டம் பாத்திரங்களையும் அவர்கள் கட்டவேண்டிய கடனுக்காக பறிமுதல் செய்யப்படுகிறதா? ஜப்தி செய்யப்படுகிறதா? அதைத் தட்டிக்கேட்ட விவசாயிகளுடைய தலைவர்கள் கைது செய்யப்படுகிறார்களா? அதுவும் பாதுகாப்புச் சட்டப்படியா? பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்திருக்கின்ற விவசாய சங்கத் தலைவர்களை ஒரு வார காலத்திற்குள்ளே விடாவிட்டால் தமிழ்நாடு முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகம் மறியல் நடத்தும் என்று அறிவித்து, அதிலே வெற்றி பெற்றதும் திராவிட முன்னேற்றக் கழகம்தான். (கைதட்டல்)

நமக்கு இன்றைக்குப் பிரச்சினைகளைச் சொல்லி கொடுக்கின்ற ஆசிரியர்கள் புறப்பட்டிருக்கிறார்கள்! அவர்கள் நம்மிடத்திலே கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளம் இருக்கின்றன.

எனவே எந்த ஓர் அரசியல் கட்சியும் தி. மு. கழகத்திற்கு ஆசானாக அமர்ந்து பாடங்களைப் போதிக்கவேண்டிய அவசியம் கிடையாது. இன்று அரசியல் நாகரிகத்துடன் ஒரு கட்சி ஒரு போராட்டத்தை நடத்துகின்ற நேரததில் அதற்கு எதிர்ப்பு உணர்வைக் காட்டுகின்ற வகையிலே—கேலியாக, கிண்டலாக சுவரொட்டிகளை ஒட்டுவதும், பயணங்களைப் பற்றிக் கேலி பேசுவதும் சில கட்சிகள் தங்களுடைய உரிமையெனக் கொள்ளுமேயானால், அதைத் திருப்பிச் செய்ய திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு அதிக நேரம் ஆகாது. (கைதட்டல்)

ஆனால், நான் உறுதியளிக்கிறேன்! அப்படித் திருப்பிச் செய்கின்ற பண்பாட்டை எங்களை வளர்த்த எங்கள் அண்ணன் எங்களுக்குக் கற்றுக் கொடுத்ததில்லை! (கைதட்டல்)

## வீரப்பன் மீது கைவைக்க எம். ஜி. ஆருக்குப் பயம்!

நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க நீங்களும் அந்தப் பயணத்தை வெற்றிகரமாக இந்த ஒரு நாள்—முதல்நாள் பயணத்தை நடத்தி நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். இரண்டாம் நாளாக நாளையும் நமது பயணம் தொடங்கவிருக்கிறது. என்ன காரணத்திற்காக இந்தப் பயணத்தைத்

தொடருகிறோம் என்பதைப் புதிதாக மக்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.

கோவில் அதிகாரி சுப்பிரமணியபிள்ளை படுகொலை செய்யப்பட்டதை மூடிமறைக்க—கொலைகாரர்களைக் காப்பாற்ற அமைச்சர்கள் உடந்தையாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் அமைச்சர்கள் என்று சொல்லுவதுகூட தவறு. நான் பகிரங்கமாக—பட்டவர்த்தனமாக—திட்ட வட்டமாக இந்த மேடையிலே குற்றம் சாட்டுகிறேன். இந்தக் கொலையை மறைக்க அமைச்சர் வீரப்பன் உடந்தையாக இருககிறார். (பலத்த கை தட்டல்)

எம். ஜி. ஆர். அவர்களே வீரப்பன்மீது கை வைக்க நீங்கள் பயப்படுகிறீர்கள். இதை நான் சொல்லவில்லை. இலட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையாகும் குமுதம் பத்திரிகை சொல்கிறது. தமிழ்நாடு எம். ஜி. ஆர். கைக்குள்ளே அடக்கம்: ஆனால் எம். ஜி. ஆரோ வீரப்பன் கைக்குள்ளே அடக்கம்; வீரப்பனோ திருச்செந்தூர் அறங்காவலர் குழுத்தலைவர் பாலகிருஷ்ணன் கைக்குள்ளே அடக்கம். ஆகவே இந்த கைகள் எல்லாம் பிரித்துப் பார்க்கப் படவேண்டாமா? அந்த உள்ளங்கைக்குள்ளே ஒளிந்து கொண்டிருக்கின்ற உண்மைகள் என்ன? என்பதை உலகிற்கு அறிவிக்க வேண்டாமா? எனவே தான் நான் எம். ஜி. ஆர். அவர்களுக்குச் சொல்லுகின்றேன். நான் வீரப்பனை பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். இந்த கொலைக்கு உடந்தை; இந்தக் கொலையை மறைக்க உடந்தை. ஏனென்றால் அங்கே உண்டியலிலே திருடப்பட்ட வெள்ளி வேலோ—தங்க வேலோ—வைர வேலோ—தங்க அட்டிகையோ—பணமோ இவைகளைப் பங்கு போட்டுக்கொண்ட இடம் சென்னையிலே ஒரு மந்திரியினுடைய வீட்டிலேதான். எனவே தான் இந்தக் கொலையை மறைக்க உடந்தையாக இருக்கின்றார்கள்.

என் மீது வழக்கு போடுங்கள். அந்த வழக்குகளிலே பல விவகாரங்கள் வெளிவரும். முதலமைச்சர் எம். ஜி ஆருக்கு வீரப்பனைத் தொடப் பயம். என் சாக்கிலாவது தொடட்டும். (கைதட்டல்) அவருக்கு எவ்வளவோ சங்கடம். இவரைத் தொட்டால் எவ்வளவோ ஆபத்துகள் தனக்கு வருமோ என்று கருதுகிறார்.

ஏனென்றால் வீரப்பன் அவர்கள் எம். ஜி. ஆர். அவர்களுடைய அந்தரங்கச் செயலாளர். இன்று, நேற்றல்ல, பல ஆண்டு காலமாக. எனவே அப்படிப்பட்ட வீரப்பனைத் தொடட்டும் எனவே அப்படிப்பட்ட வீரப்பனைத் தொட

எம். ஜி. ஆர். அஞ்சுவாரேயானுல் நான் இன்றைக்கு விடுத்திருக்கின்ற அறைகூவலே அடிப்படையாக வைத்தாவது ஒரு வழக்கைத் தொடுத்து வீரப்பன் எப்படி உடந்தை என்று என்னைக் கேட்கட்டும். நான் சொல்லத் தயாராக இருக்கின்றேன்.

இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கின்ற கோவில் உண்டியல்கள் பல இந்த அமைச்சர்களால் பங்கிட்டுக் கொள்ளப்படுகின்றன. காட்டு மரங்கள் எல்லாம் இன்றைக்குக் கூட்டுக் கொள்ளேயிலே அமைச்சர்களால் பங்கிட்டுக் கொள்ளப்படுகின்றன. இவைகளுக்கெல்லாம் நியாயம் கிடைக்க வேண்டாமா? நீதி கிடைக்க வேண்டாமா? யாரும் முன்வராத நேரத்தில் சில கட்சிகளெல்லாம் 'தாம்தோம்' என்று குதித்தாலும் கூட, கொதிக்கிற பாலே யிலே தண்ணீர் தெளித்ததும் எப்படி கொதி அடங்கி விடுகிறதோ அதே போல எவரோ எதையோ தெளித்த காரணத்தால் அவை அடங்கி விட்டன.

எதற்கும் அடங்காத, ஆனுல் அமைதிக்கு—அண்ணுவின் அறிவுரைக்கு மாத்திரம் அடங்குகிற திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டிலே அநீதிகள் தலேயெடுப்பதை, நீதிக்கு சேதாரம் வருவதை நிச்சயமாக அனுமதிக்காது என்பதற்கு அடையாளமாகத்தான் இந்த நெடிய பயணத்தை நாம் மேற்கொண்டிருக்கிருேம்.

கொடியவர்கள் நடத்துகின்ற ஆட்சியிலே நடைபெற்று இருக்கின்ற அக்கிரமங்களே மக்களுக்குக் கோடிட்டுக் காட்டுவதற்ககத்தான் இந்த நெடிய பயணத்தை மேற்கொண்டிருக்கிருேம். இந்தப் பயணத்திலே எத்தனே சங்கடங்கள் வந்தாலும், இதை ஏற்றுக்கொண்டு அதே நேரத்தில் அமைதியாக, அண்ணு கற்பித்த கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு பட்டுப்போகாமல் இந்தப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற இந்தப்பகுதி மக்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தலேவர் கலேஞர் உரையாற்றினுர்.

**—திருமங்கலம் கூட்டத்தில் கலேஞர் உரை** **15-2-82**

# இனமானம் காத்திட இதயத்தில் ஏற்பட்ட ரணங்கள்!

நீதிகேட்டு தொடங்கி தொடர்ந்து நடைபெறுகின்ற 'நெடிய பயணத்தின் விருதுநகர் பாசறையில் பல்லாயிரக்

கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் பயணத்தின் களைப்பினை ஓரளவு நான் மறக்கின்றேன்.

இங்கே நம்முடைய மதிப்பிற்குரிய பி. டி. ஆர். பழனிவேல்ராசன் அவர்களும், மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் தங்கபாண்டியன் அவர்களும், தம்பி சீனிவாசன் அவர்களும், நண்பர் வீராசாமி அவர்களும், மற்றவர்களும் பேசுகிற நேரத்தில் இந்த நெடிய பயணத்திலே நான் நடந்து வருவது தேவைதானா, என்ற வினாக்குறியினை எழுப்பி நீங்கள் விரும்பினால் உங்களைத் தோளிலேயே ஏற்றிக்கொண்டு திருச்செந்தூர் வரையிலே செல்வதற்கு கழகத்தினுடைய தொண்டர்கள் இலட்சக்கணக்கிலே இருக்கிறார்களே. எனவே அதை மறுபரிசீலனை செய்யக்கூடாதா என்று குறிப்பிட்டார்கள்.

விருதுநகர் வந்தடைந்ததும் ஓய்வு விடுதியிலே என்னுடைய கால்களிலே உள்ள கட்டுக்களை அவிழ்த்து மருத்துவர்கள் மருந்துகளைத் தடவிக் கொண்டிருந்தபோது பாதங்களிலே உள்ள ரணங்களைப் பார்த்த தம்பி சீனிவாசன் கண்ணீர் விட்டு அழுது இவ்வளவு ரணமிருக்கிறதே; இந்தப் பயணத்தை ஏன் ஒத்திவைக்கக்கூடாது என்று தேம்பித் தேம்பி என்னிடத்திலே கேட்டார். நான் அப்பொழுது சொன்னேன். "தம்பீ! என்னுடைய கால்களிலே இருக்கிற ரணத்தைத்தான் நீ பார்த்திருக்கிறாய். என்னுடைய இதயத்திலே எவ்வளவு காலமாக எவ்வளவு ரணங்களையெல்லாம் நான் தாங்கிக்கொண்டு (கைதட்டல்) இந்த இனமானம் காப்பதற்காக இந்த இயக்கத்தை வளர்ப்பதிலே என்னை ஒப்படைத்திருக்கிறேன்" என்பது உனக்குப் புரியாதா? என்று கேட்டேன்.

நம்முடைய பி. டி. ஆர். அவர்கள் என்பால் கொண்டுள்ள உரிமையின் காரணமாக அன்புக் கட்டளையோடு நாளைக்கே இந்தப் பயணத் திட்டத்திலே ஒரு மாறுதல் வேண்டும் என்று குறிப்பிட்டார். அது அவருடைய காலிலே ஏற்பட்டுள்ள வேதனைக்காக அல்ல என்பதும், என்னுடைய கால்களிலே உள்ள வேதனை அவருடைய கண்களிலே எந்த அளவிற்கு ரத்தக் கண்ணீரை வடிக்கும் என்பதும் அவரைப் புரிந்துகொண்டவன் என்ற முறையிலே எனக்கு மிகத் தெளிவாகத் தெரியும்.

எனக்கு நேற்றிரவும், இன்றிரவும் சரியாகத் தூக்கம் கூடப் பிடிக்காமல் என்னுடைய உள்ளத்திலே புலம்பிக்

கொண்டிருக்கிற கவலைகளெல்லாம், இவ்வளவு ஒரு நெடிய பயணத்தில் நம்முடைய கழகத்தினுடைய செயல் வீரர்களை யும், கழக உடன்பிறப்புக்களையும் ,மகளிர் அணியினரையும், மாணவர் அணியினரையும், இளைஞர் அணியினரையும், தொழிலாளர் அணியினரையும், மலர்போல் வாழ்வு நடத்திக் கொண்டிருந்த என்னுடைய அன்பு நண்பர் பி. டி. ஆர் பழனிவேல்ராசன் போன்றவர்களையும் வாட்டி வதைக்கின்ற அளவிற்கு ஒரு கொடுமை செய்து விட்டோமா என்றுகூட நான் இரண்டு நாளாக எண்ணிப் பார்க்கிறேன். இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்ச் சமுதாயத்திற்காக தன்னுடைய தொண்டர்களை எத்தகைய இழப்புக்கும் ஆளாவதற்குத் தயாராக உள்ள ஒரு இயக்கம் என்ற காரணத்தினால் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று நமக்குப் போதித்த பேரறிஞர் அண்ணா அவர் களுடைய அந்தப் பொன்மொழியினை நெஞ்சிலே ஓவிய மாகத் தீட்டிக்கொண்டு நம்முடைய கழக நண்பர்கள்; கழக வீராங்கனைகள், கழகத்திலே உள்ள என்னுடைய சகோதரர் கள், சகோதரிகள், உடன்பிறப்புக்கள் தாங்கிக்கொள்வார் கள். தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். என்னைப் பார்ப்பவர்கள் கேட்பது புரிகிறது. "நாங்கள் தாங்கிக் கொள்கிறோம்; நீயும் தாங்கிக் கொள்ளவேண்டுமா? உன்னுடைய கஷ்டங்களையும் நாங்கள் தாங்கிக் கொள்ளக் கூடாதா?" என்று கேட்கிறார்கள். அது எனக்குப் புரிகிறது.

மதுரை மாநகரத்திலே நம்மையெல்லாம் ஆளாக்கிய அண்ணன் சிலையின் அருகிலே நின்று கொண்டு "அண்ணா அவர்களே! உங்களிடத்திலே விடைபெற்று நீங்கள் வழியனுப் புகின்ற அந்த நிலை இன்றைக்கு அந்த வாய்ப்பு எங்களுக்குக் கிட்டாமல் போனாலும். எங்களுடைய ஊனோடும், உயிரோ டும் உடலில் சுழன்று ஓடிக்கொண்டிருக்கின்ற ரத்தத்துளி களோடும் கலந்திருக்கின்ற உங்கள் உணர்வைச் சுமந்துதான் இந்த நடைப்பயணத்தை— நெடியபயணத்தை நாங்கள் தொடங்குகிறோம். எனவே அண்ணனே நீ எங்களோடு தான் இருக்கிறாய்" என்று சொல்லிவிட்டுத்தான் இந்தப் பயணத்தை நேற்றைக்கு முன்தினம் நாம் தொடங்கினோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலே—இந்தப் பெரிய குடும்பத்திலே பாசமும் பற்றுமிக்க இந்தக் குடும்பத்திலே கழகத்தினுடைய தலைவன் அல்லது கழகத்திலே உள்ள தலைவர்கள் அவர்களுக்கு ஒரு சிறு துன்பமென்றாலும் தங்களுடைய தனித்தனிக் குடும்பத்திலே ஏற்பட்ட துன்பத் தைப் போல கருதுகின்ற தொண்டர்களும் உண்டு. அதைப்

போல் தொண்டர்களுடைய குடும்பத்திலே ஒரு சிறு அல்லல் என்றாலும் அதைத் தன்னுடைய குடும்பத்திலே ஏற்பட்ட அல்லலைப் போலக் கருதுகின்ற தலைவர்களும் உண்டு. எனவே தான் உலகத்திலே எந்த இயக்கமும் பெற்றிராத குடும்பப் பாச உணர்வை திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிறது. அந்தப் பாச உணர்வைத்தான் இங்கே பேசிய அத்தனை பேருடைய பேச்சிலும் நான் பார்த்தேன்.

என்னுடைய அருமை நண்பர் அமைப்புச் செயலாளர் தென்னரசு என்னை இங்கே விளிக்கிற நேரத்திலே தணலில் தங்கமாக இங்கே வந்திருக்கின்ற கலைஞர் அவர்களே என்று விளித்தார். கந்தப்பன் அவர்கள், நான் பேசி அதை நீங்கள் கேட்க வேண்டும் என்பதற்காகத் தன்னுடைய பேச்சை நிறுத்திக்கொண்டார். பேசவே இல்லையென்றாலும் கூட நேற்று முதல் அவர் முரசொலி பத்திரிகையிலே தீட்டிக் காட்டப்பட்ட படத்தைப் போல் ஒரு பெரிய பையை தன்னுடைய தோளிலே மாட்டிக்கொண்டு இந்த நெடிய பயணத்திலே அவர் ஈடுபட்டிருக்கின்றார்.

தென் பாண்டி மண்டலத்திலே இந்தப் பயணம் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்பதற்காக கழகத்தினுடைய அமைப்புச் செயலாளர் என்கின்ற முறையிலே தென்னரசு அவர்களும், நெல்லை, குமரி, மேற்கு ராமநாதபுரம், கிழக்கு ராமநாதபுரம், மதுரை மாவட்டம், மதுரை நகர் ஆகிய நம்முடைய கழக அமைப்புக்களினுடைய செயலாளர்களும் தமிழகத்திலே உள்ள எல்லா மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர்களும் மகளிர் அணியைச் சேர்ந்த நம்முடைய அருமைச் சகோதரிகளும் தங்களுடைய கால் கடுக்க கடுக்க வியர்வை சொட்டச் சொட்ட இந்தப் பயணத்திலே ஈடுபட்டிருக்கிறார்களென்றால் எதற்காக?

நண்பர்களெல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல இந்தப் பயணம் திருச்செந்தூரார் வரையிலே சென்று முடிவுற்றால் மறுநாளே இன்று தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சி கவிழ்ந்துவிடும் அல்லது கவிழ்ந்து விட வேண்டும் என்பதற்காக நாம் திருச்செந்தூர் முருகனிடத்திலே லட்சார்ச்சனையா நடத்தப் போகிறோம்! இல்லை. நான் மதுரையிலே என்னை வழியனுப்பி வைத்த விழாவிலே கூடக் குறிப்பிட்டேன். நடைபெறுகின்ற ஆட்சி அக்கிரமமான ஆட்சியாக இருந்தாலும் இந்தப் பயணத்தினுடைய நோக்கம்—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நோக்

கம் இந்த அக்கிரம ஆட்சி ஒழிக என்பதல்ல. அக்கிரம ஆட்சிகளை ஒழிப்பதற்கு அந்த அக்கிரம ஆட்சியை சரியாகவோ, தவறாகவோ தேர்ந்தெடுத்துவிட்ட வாக்காளப் பெருமக்கள் ஐந்தாண்டு கால கெடு வைத்திருக்கின்றார்கள். எனவேதான் நான் மதுரையிலே திட்ட வட்டமாகச் சொன்னேன். அக்கிரம ஆட்சி ஒழிக என்பதல்ல நமது குறிக்கோள்! ஆட்சியினுடைய அக்கிரமங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் நம்முடைய குறிக்கோள் என்று நான் குறிப்பிட்டேன்.

அந்த அக்கிரமங்களுடைய பட்டியலிலே ஒன்றுதான் திருச்செந்தூர் விவகாரம். தம்பி நன்னிலம் நடராசன் அவர்கள் இங்கே இரண்டே வரிகளில் மிகப்பெரிய உண்மையை விளக்கிவிட்டுச் சென்றதை நீங்கள் கவனித்தீர்கள். இந்த தேவஸ்த்தானம் எம். ஜி. ஆர். கட்சிக்கு எந்த அளவிற்கு அடங்கி ஒடுங்கி ஆமைபோல், ஊமைபோலக் கிடக்க வேண்டியிருக்கிறது என்பதை நடராசன் தனக்கு உரிய மொழியிலே சொன்னார். இதுதான் திருத்தணியானாலும், திருச்செந்தூரானாலும், பழநியானாலும், மதுரையானாலும் தமிழகத்திலே இருக்கின்ற எந்த ஆலயமானாலும். அந்த ஆலயத்திலே உள்ள அறநிலையமானாலும் அவைகளுக்கு உரிய கதி இந்த கதிதான். இதுதான் இன்றைக்கு நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எல்லோரும் வருத்தப்பட்டார்கள்; சீனிவாசன்கூட வருத்தப்பட்டார். ஆதங்கப்பட்டார். விருதுநகரிலே ஒரு ஆலயத்தினுடைய சுவற்றிலே இவ்வளவு பெரிய சுவரொட்டிகளை ஒட்டிய வரலாறு உண்டா? இன்றைக்கு ஒட்டியிருக்கிறார்களே நியாயந்தானா? என்று கேட்டார். எப்பொழுதுமே நம்முடைய மனதை நாம் திடப்படுத்திக்கொள்ள வேண்டும் ஒரு ஐந்து ரூபாய் நம்முடைய பர்சிலே இருந்து காணாமல் போய்விட்டால் அல்லது ஐந்து ரூபாயோடு ஒரு பர்ஸ் பஸ் ஸ்டாண்டிலோ ரயில்வே ஸ்டேஷனிலோ காணாமற் போய்விட்டால் அய்யோ! ஐந்து ரூபாய் போய்விட்டதே, என்று அழுதுகொண்டே இருக்கக் கூடாது. நல்லவேளை அதில் நாம் பத்து ரூபாய் வைக்காமல் இருந்தோமே என்று நிம்மதி அடையவேண்டும். அதைப்போலத்தான் இந்தச் சுவரொட்டிகளை ஆலயத்திலே உள்ள சாமியின் மீது ஒட்டாமல் சுவரிலே ஒட்டினார்களே என்ற அளவிற்கு ஆர்வமுடைய அத்தகைய மனப்பக்குவத்தை நாம் பெற்றிட வேண்டும். (கைதட்டல்)

16-2-82 —விருதுநகர் கூட்டத்தில் கலைஞர் உரை

# "பாலைக் கலி" பாடியிருப்பேன்!

ஒரு நெடிய பயணமென்பது சாதாரணமான விவகாரமல்ல. எங்கேயோ உட்கார்ந்து கொண்டு இதைக் கேலி செய்துவிடலாம். அல்லது என்னுடைய அன்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களைப் போலவோ அல்லது ஆளுங்கட்சி நண்பர்களைப் போலவோ இந்த நெடிய பயணத்தை கேலி செய்து சுவரொட்டிகளை ஒட்டிவிடலாம். ஆனால் ஒரு நாள் நடந்து பார்க்க வேண்டும். என்னுடைய கால் கொப்பளித்துவிட்டது என்று சொன்னார்கள். கொப்பளித்தது என் காலாக இருப்பதால் இவ்வளவு விளம்பரங்கள் கிடைத்திருக்கிறது; அவ்வளவுதான். என்னுடைய உடன் பிறப்புகள் எத்தனை பேருடைய கால்கள் கொப்பளித்திருக்கின்றன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். (கைதட்டல்)

## வதங்குவது என் உள்ளத்தை கசக்கி பிழிகிறது

எனவே என்னுடைய ஆருயிர் உடன் பிறப்புக்களே என்னைத் தொடர்ந்து லட்சோப லட்சமாக வந்துகொண்டிருக்கிற உடன் பிறப்புக்களே! என்னுடைய கால் கொப்பளித்திருப்பதுதான் உங்களுக்குத் தெரிகிறது. ஆனால் உங்களுடைய பாதங்கள் கொப்பளித்த காரணத்தால் என்னுடைய இதயம் கொப்பளித்திருப்பது உங்களுக்கெல்லாம் தெரியாமலிருக்கலாம். (பலத்த ஆரவாரம்) அந்த அளவிற்கு உங்கள்பால் அன்பும் பாசமும் நீங்கள் நடந்து வருகிற நேரத்திலே உங்களுடைய கால்கள் நெளிவதும், வளைவதும் நீங்கள் வதங்கிய கொடியைப்போல நடந்து வருகின்ற காட்சியும் என்னுடைய இதயத்தைக் கசக்கி பிழிவதை நான் எப்படி வெளியிடுவது. எனக்குத் தெரிந்த எழுத்துத் திறமையால் வெளியிடுவதற்கு நான் அருகதையற்றவனாகி விட்டேன். அந்த அளவிற்கு லட்சக்கணக்கான கழக உடன் பிறப்புகள்—செயல் வீரர்கள்—வீராங்கனைகள்—மாணவ மணிகள்—இளைஞர் அணியினர்— பாட்டாளித் தோழர்கள் அத்தனை பேரும் அணிவகுத்து வருகின்ற காட்சியினைக் காணுகிறேன்.

வழியெல்லாம் நீரோடைகள் கிடையாது. வறண்ட பகுதிகள் பலவற்றைக் கடக்க வேண்டியதிருக்கிறது. தாகம் எந்த அளவிற்குக் கொடுமையானது என்பதை இலக்கியங்களிலேதான் படித்திருக்கிறோம். இலக்கியத்தில் பாலைக்கலி என்று ஒன்று உண்டு. ஐவகை நிலங்கள் நால்வகை நிலங்களைக் குறிப்பிடுகின்ற கவிஞர் பெருமக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலங்களைக்

குறிப்பிடுகின்றவர்கள் இந்த நிலங்களிலே ஒரு நிலம் நெய்தல் தவிர மற்ற நிலங்களில் வறண்டுவிட்ட பகுதிகள் தமிழ்நாட்டிலே நிறைய உண்டு. அதை வைத்து 'பாலைக் கலி' பாடிய பழங்காலத்துப் புலவன் சொன்னான். பாலையிலே தண்ணீரில்லாமல் இரண்டு மான்கள் தாகத்தால் தவிக்கின்ற நேரத்தில் ஒரு இடத்திலே ஒரு குழி—ஒரு கையகலமுள்ள இடத்திலே தண்ணீர் தேங்கியிருக்க அதை ஆணும் பெண்ணும்— இரண்டு காதல் மான்கள் அந்த வழியே செல்ல அதை யார் குடிப்பது என்று அவர்களுக்குள்ளே போட்டி ஏற்படாமல் யார் குடிக்காமலிருப்பதிலே போட்டி ஏற்பட்டு நீ குடி! நீ குடி! என்று ஒருவரையொருவர் சொல்லி முடியாத காரணத்தால் எப்படியும் பெண்மான் அதைக் குடிக்க வேண்டுமென்பதற்காக ஆண்மான் குடிப்பது போல பாசாங்கு செய்து, சரிதான் நம்முடைய காதலனும் குடிக்கிறான் நாமும் அந்தத் தண்ணீரைக் குடிப்போமென்று ஏமார்ந்துபோய்—காதலன் குடிப்பதாக எண்ணிக்கொண்டு அந்தத் தண்ணீரைக் குடித்துவிட்டது என்று தாகத்தைப் பற்றி வர்ணித்திருக்கிறான் தமிழகத்தினுடைய பழங்காலப் புலவன். அதே நேரத்தில் காதலையும் குறிப்பிட்டிருக்கிறார்.

இன்றைக்கு அப்படி ஒரு சம்பவம் நடைபெற்றது. என்னுடைய அருமை நண்பர் தலைமைக் கழகத்தினுடைய செயலாளர் வீரசாமி அவர்கள் எனக்கு அடிக்கடி கால்களிலே ஏற்பட்ட ரணத்திற்கு மருந்து போடுவதற்காக மருத்துவர்கள் அந்த முயற்சியிலே ஈடுபடுகிற நேரத்தில் அவரும் உடன் வருவார். அவரும் பக்கத்தில் அமர்ந்திருப்பார். இன்று 12 மணி அளவில் என்னுடைய காலுக்கு மருத்துவச் சிகிச்சை நடைபெற்ற நேரத்தில் அவரும் பக்கத்திலே இருந்தார். அப்பொழுது அவருக்குத் தாகம். மருத்துவர்கள் கால் வலிக்குத் தேவையான டர்பன்டைனையும் ஒரு புட்டியிலே வைத்திருந்தார்கள். பக்கத்திலே இன்னொரு புட்டியிலே மோரும் இருந்தது. இவருக்கு மோருக்கும், டர்பன்டைனுக்கும் வித்தியாசம் தெரியாமல் டர்பன்டைனை எடுத்து வாயிலே கவிழ்த்துவிட அது உள்ளே போன பிறகுதான் தவறு செய்து விட்டோமென்று தெரிந்து அதற்குப் பிறகு மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு இப்பொழுதுதான் வெளியிலே வந்திருக்கிறார். அப்படிப்பட்ட தாகம்: மோருக்கும் டர்பன்டைனுக்கும் வித்தியாசம் தெரியாத அளவுக்கு தாகம். நான் பழங்காலத்து இலக்கியப் புலவனாக இருந்தால் ஒரு பாலைக்கலியே கூடப் பாடியிருப்பேன். அந்த அளவிற்கு

ஒரு வீராசாமி அல்ல. லட்சக்கணக்கானவர்கள் இந்த நடைப் பயணத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

**—சாத்தூர் கூட்டத்தில் கலைஞர் உரை 17-2-82**

# உருண்டு கொண்டாவது திருச்செந்தூர் சென்றடைவேன்!

உட்கார்ந்துதான் நான் பேசவேண்டும். இது தலைமைக் கழகத்தின் உத்தரவு என்று ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர் உத்தரவிட்டாலும் உத்தர விடாவிட்டாலும் இன்று என்னால் உட்கார்ந்துதான் பேசமுடி கிற சூழ்நிலை. அதற்காக நீங்கள் என்னை மன்னித்துக் கொள்ள வேண்டுமென்று வெள்ளமென குழுமியிருக்கின்ற உங்கள் அனைவரையும் நான் தாள் பணிந்து கேட்டுக் கொள்ளு கின்றேன்.

அவையடக்கத்தில் அவையோருக்கு முன்னால் சற்று இலேசாக கால்களை நீட்டிக்கொண்டு உட்காருவது கூட பண்பு அல்ல. இது தமிழர்கள் நீண்ட நெடுங்காலமாக போற்றிப் பாதுகாத்து வருகின்ற நாகரீகக் கருவூலம். ஆனால் இன்று என்னுடைய உடல் நிலையின் காரணமாக அதற்கு மாறாக நான் இங்கே அமர்ந்து காலைக் கூடச் சரி யாகத் தொங்கவிட்டுக் கொண்டு பேச முடியாத சூழ்நிலை யில் சில கருத்துக்களை உங்களிடத்திலே எடுத்துக் கூற வேண்டிய கடமை வற்புறுத்துகின்ற காரணத்தால் அந்தக் கடமையினைச் செய்ய முன் வந்திருக்கின்றேன்.

கோபால்சாமி இங்கே பேசும்போது குறிப்பிட்டார். தலைவருக்கு 59 வயது. அவர் இந்த நீதி கேட்டு நெடிய பயணத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார் என்று குறிப் பிட்டார்.

மதுரையிலே தொடங்கிய இந்த நெடிய பயணம் கோவில்பட்டியிலே நிறைவுறுகிற இந்தநேரம் கிட்டத்தட்ட எனக்கு எப்படி 59 வயதோ அதைப் போல் 59 மைல்களை கடந்திருக்கின்றது. (கைதட்டல்) ஆனால் என்னைப் பொறுத்த வரையிலே இந்த 59க்குப் பிறகு என்னுடைய வயதிலே 61 மைல் கல்கள் இருக்குமோ இருக்காதோ நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் திருச்செந்தூர் வரையிலே உள்ள

61 மைல்களை நிச்சயமாக நான் கடந்திடுவேன்—நடந்திடுவேன்—உருண்டு கொண்டாவது திருச்செந்தூர் போய்ச் சேருவேனேயல்லாமல் (பலத்த ஆரவாரம்—கை தட்டல்) யார் கேலி பேசினாலும்—உருட்டினாலும்—திரட்டினாலும் நான் மிரண்டு போய்விடுகின்ற ஆள் அல்ல; காரணம் பெரியாரின் தொண்டன், பேரறிஞர் அண்ணாவின் தம்பி, உங்களின் உடன்பிறப்பு (பலத்த கரவொலி). எனவே நாம் மேற்கொண்டிருக்கின்ற இந்தப் பயணம் தொடக்கத்திலே இவ்வளவு வெற்றிகரமாக நடைபெறுமா? என்றுதான் நம்முடைய கழகத்தினுடைய அமைப்புக்கள் அத்தனையும் யோசித்தன.

## நாம் எதிர்பார்த்ததைவிட அதிகக் கூட்டம்!

தென் மாவட்ட அமைப்புக்களை கவனித்து வருகின்ற என்னுடைய அருமை நண்பர் தென்னரசு அவர்களும், நெல்லை மாவட்டச் செயலாளர் கிருஷ்ணன் அவர்களும், மதுரை மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம் அவர்களும், மதுரைநகர் மாவட்டச் செயலாளர் காவேரி மணியம் அவர்களும், கிழக்கு இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் தா. கிருஷ்ணன் அவர்களும், மேற்கு இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் தங்கபாண்டியன் அவர்களும் மற்றும் இந்த எல்லைக்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டப் பேரவையினுடைய முன்னாள் உறுப்பினர்களும், தங்களுடைய கழகத்தினுடைய வைரத் தூண்களாக விளங்குகின்றவர்களும் கலந்து பேசி இந்தப் பயணத்தை வெற்றிகரமாக எவ்வாறெல்லாம் நடத்திடவேண்டும் என்று எண்ணியபோது நாங்கள் ஒரு ஐயாயிரம் அல்லது பத்தாயிரம் பேர் வரக்கூடும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை நம்மால் முடிந்த அளவிற்குச் செய்து தரலாம் என்றுதான் எண்ணினோம். நாம் எண்ணியதைவிட நம்முடைய எதிரிகள் ஐயாயிரமாவது? பத்தாயிரமாவது? ஐம்பது பேர் அல்லது அறுபது பேர் வருவார்கள். இந்தக் கருணாநிதியை நம்பி யார் பின்னாலே நடப்பார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அதிலே கூட எனக்கு ஒரு அதிக திருப்தி தான். ஐம்பது, அறுபது பேர் வந்தால் வருகிற வழியிலே அவர்களுக்கெல்லாம் இலை போட்டுச் சாப்பாடு. அதுவும் ஆறு அல்லது ஏழுவகை கறியோடு பரிமாறலாம் என்றுகூட

எண்ணினேன். ஆனல் எதிரிகள் சொன்ன ஐம்பது அறுபது, ஐம்பதாயிரம் அறுபதாயிரமாக மாறுமென்று எனக்கு அப்போதெல்லாம் தெரியாது.

ஆனல் மதுரையிலிருந்து தொடங்கிய இந்த நெடிய பயணத்தில் ஐம்பதாயிரம், அறுபதாயிரம் கழகக் கண்மணிகள் கலந்துகொண்டிருக்கின்ருர்கள் என்பதும், நடுநிலை ஏடுகளாக இருக்கின்ற பல ஏடுகள் 25,000 தொண்டர்கள் கலந்து கொண்டார்கள் என்று செய்தி வெளியிடுகின்ற அளவிற்கும் வடக்கே இருக்கின்ற பத்திரிகைகளெல்லாம் பல்லாயிரக்கணக்கானவர்கள் இந்த அணிவகுப்பிலே கலந்து கொண்டு இந்த நெடிய பயணத்தை நடத்துகிருர்கள் என்று சிறப்பாகக் கூறுகிற அளவிற்கும் இந்தப் பயணம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்தப் பயணத்தினுடைய தொடக்க விழா கடந்த 14-ஆம் நாள் நம்முடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களுடைய தலைமையிலே மதுரையம்பதியிலே நடைபெற்றது.

## எங்கு நோக்கினும் எழிற்கோலம்!

அன்றைக்கு மதுரையம்பதி காட்டிய எழுச்சியை மறுநாள் 15-ம் தேதி திருமங்கலத்திலே உருவான எழுச்சி வென்றது என்று சொன்னல் காவேரிமணியம் கோபித்துக் கொள்ளமாட்டார் என்று கருதுகின்றேன். திருமங்கலத்தின் எழுச்சியை மறுநாள் விருதுநகரிலே நடைபெற்ற பொதுக்கூட்டமும் அதற்குரிய சிறப்பான ஏற்பாடுகளும் வென்று காட்டின. விருதுநகரை நேற்றைய தினம் சாத்தூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம், எழில்மிகு ஏற்பாடுகள் வண்ண விளக்குகள் இவைகளையெல்லாம் கண்ட நேரத்தில் விருதுநகர் சாத்தூரால் தோற்கடிக்கப்பட்டுவிட்டதே என்று எண்ணினேன். ஆனல் நேற்றைக்கே சொன்னேன். சாத்தூரை கண்டிப்பாக கோவில்பட்டி வென்று காட்டும் என்று. கோவில்பட்டி வென்றிருக்கிறது. ஆனல் நாளைக்கு எப்போதும்வென்ருன் இப்போதும் வெல்வான் என்கின்ற அளவிற்கு அங்கேயும் நம்முடைய நிகழ்ச்சி மிகச் சிறப்புடையதாக அமையும் என்பதனை நெல்லை மாவட்டத்தினுடைய தீரர்கள் நாங்கள் வருகின்ற வழியிலே எங்களை வரவேற்ற மாட்சியிலேயிருந்தும் இங்கே அவர்கள் காட்டியிருக்கின்ற இந்த ஏற்றமிகு எழிற் கோலத்தை நாங்கள் பார்க்கின்ற நேரத்திலும் உறுதியாக எங்களால் நம்பமுடிகிறது.

# அனைத்துக் கட்சியினரும் ஆதரவு!

இந்த இயக்கத்திற்கு, நான் இயக்கம் என்று குறிப்பிடுவது திராவிட முன்னேற்றக்கழகத்தை அல்ல. நீதி வேண்டும் என்பதற்காக நடைபெறுகின்ற நெடியபயண இயக்கத்திற்கு நம்முடைய நண்பர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கினுடைய மாநில பொதுச்செயலாளர் லத்தீப் அவர்கள் முஸ்லிம் லீக்கினுடைய சார்பிலே எங்களுடைய பேராதரவு உண்டு என்பதை எடுத்துச் சொன்னார். அதை அவர்கள் சொல்லாமலே எங்களுக்குத் தெரிந்த விபரம். வழி நெடுக முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த நண்பர்கள் பலர் எங்களுக்கு மாலை அணிவித்து பச்சை நிற ஆடைகள் அணிவித்து வழியனுப்பி வைத்திருக்கின்றார்கள்.

இன்று மாலையிலேகூட அவரும், சட்டமன்ற முஸ்லிம் லீக் உறுப்பினரும் எங்களை வரவேற்று இந்தப் பயணம் வெற்றிபெற வேண்டும் என்று வாழ்த்தியிருக்கின்றார்கள்.

திராவிடர் கழகம், நான் ஒரிஜினல் திராவிடர் கழகத்தைச் சொல்லுகிறேன்—நம்முடைய தாய்க் கழகத்தைச் சொல்லுகிறேன். திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கியென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வர்ணித்தாரே அந்தத் திராவிடர் கழகத்தைச் சொல்லுகிறேன். அந்தத் திராவிடர் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் மானமிகு நண்பர் என்னுடைய இளவல் வீரமணி அவர்கள் இந்தப் பயணத்திலே இடையிலே வந்து கலந்துகொண்டு எங்களுக்கு மாலைகளை அணிவித்து வழி அனுப்பி வைத்திருக்கின்றார்.

இந்திரா காங்கிரசிலே ஒரு சிலரும் நம்முடைய நண்பர் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இது ஒரு நாடகம் —இது ஒரு வேடிக்கை என்றெல்லாம் கேலி பேசினாலும் கூட இந்திரா காங்கிரசிலும் பொறுப்புள்ளவர்கள் நிறைய பேர் இருக்கின்றார்கள். பொறுப்பிலே சில பேர் இருக்கலாம்! பொறுப்பிலே உள்ளவர்களெல்லாம் பொறுப்புள்ளவர்களாக இருக்க முடியாது. எனவே அதிலே உள்ள பொறுப்புள்ள பலர் திராவிட முன்னேற்றக்கழகம் ஈடுபட்டிருக்கின்ற இந்த நெடிய பயணத்திற்கு தங்களுடைய பேரதரவைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

நேற்றைய தினம்கூட துலுக்கப்பட்டியிலே இந்தப் பயணம் தொடர்ந்து நடைபெற்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் அருமை நண்பர் கே. டி. கோசல்ராம் அவர்கள் எங்களை வரவேற்று எங்களுக்குக் கதராடை அணிவித்து இந்த முயற்சி வெல்க என்று வாழ்த்தினார்கள்.

இங்கேயும் சரி. வேறு பல இடங்களிலேயும் சரி இந்திரா காங்கிரசைச் சேர்ந்த அந்தந்தப் பகுதி தளகர்த்தர்கள், இளைஞர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் ஒரு சில இடங்களில் தற்போது சிவாஜி மன்றத்தைச் சேர்ந்தவர்கள் எங்களுக்கு மாலை அணிவித்து, வரவேற்பு வழங்கி பாராட்டி வெற்றி பெறுக என்று வாழ்த்தினார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பல பகுதி களிலேஉள்ள செயலாளர்கள், செயல்வீரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்தப் பயணம் வெற்றி பெறவேண்டுமென்று வாழ்த்தியிருக்கின்றார்கள்.

மதுரையிலே வந்து இறங்கியதும் ரயிலடியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொடிகளோடு போட்டி போட்டுக் கொண்டு பறந்தகொடி முகவை மாவட்டத்தினு டைய சிங்கம்—பசும்பொன் முத்துராமலிங்கம் அவர்களுடைய வாரிசுகளாகத் திகழுகின்றவர்கள் நடத்துகின்ற பார்வர்டு பிளாக் கட்சியினுடைய கொடிகளென்று சொன்னால் அது மிகையாகாது. அவர்களும் இந்த வழி நடைப்பயணத்திலே பல பகுதிகளிலே எங்களோடு கலந்துகொண்டு வாழ்த்தி யிருக்கின்றார்கள்.

## யோசனை சொல்லப் புறப்பட்டிருக்கிறார்கள்

இங்கேகூட விவசாய சங்கத்தின் சார்பிலே எங்களுக்கு பச்சைநிற ஆடைகள் அணிவித்தார்கள். அந்தச் சங்கத்தி னுடைய தலைவர் என்னுடைய அன்புக்குரிய நாராயணசாமி நாயுடு அவர்கள் "இந்தப் பயணம் வென்றிடுக" என்று வாழ்த்தி நேற்றைய தினம் கொடுத்த தந்தி இன்றைக்கு ஏடுகளிலெல்லாம் வெளிவந்திருக்கின்றது.

இதிலே சில கட்சிகள் எங்களுக்கு யோசனை சொல்லப் புறப்பட்டிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய அமைப் பின் சார்பிலேதான் என்று கருதுகின்றேன். ஏனென்றால் அருமை நண்பர் சங்கரய்யா அவர்கள் சட்டமன்றத்திலே பேசும்போதுகூடச் சொன்னார். "கருணாநிதி திருச்செந் தூருக்கு நெடியபயணம் செல்வதும் தேவையில்லை! அவரைத் தொடர்ந்து 22—ந்தேதி எம். ஜி. ஆர். நெடிய பயணம் செல்வதும் தேவையில்லை. இரண்டு பேரும் நெடிய பயணத்தைக் கைவிட்டுவிட்டு வேறு காரியங்களுக்காக நெடிய பயணம் செல்ல வேண்டும். அதுவும் டில்லி நோக்கிச்

செல்ல வேண்டும். விலைவாசி குறைவதற்கும், மத்திய அரசினுடைய எதேச்சாதிகாரம் வீழ்த்தப்படுவதற்கும், ஆதிக்கம் அகற்றப்படுவதற்கும் நெடிய பயணம் மேற்கொள்ள வேண்டும்" என்று மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே அங்கே பேசினார்கள். அதையே சுவரொட்டிகளாகவும் ஒட்டி வைத்திருக்கின்றார்கள். நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்! நான் அவர்களை ஒரு ஆறு, ஏழு மாதத்திற்கு முன்பு இரண்டு கேள்விகளை அவர்கள் முன் வைத்தேன். அதற்கு இதுவரையிலே அவர்கள் பதிலளிக்கவில்லை. தமிழ்நாட்டிலே இந்தியை— இந்தி ஆதிக்கததை—இந்தித் திணிப்பை எதிர்த்தே தீருவோம் என்று பேசி திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதிலே முனைப்பாக இல்லை என்று எங்கள் இரண்டு கட்சிகளையுமே தாக்கி மேடை தோறும் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கு நான் ஒரு நாலைந்து கூட்டங்களிலே ஒரு கேள்வியை எழுப்பினேன்.

என்ன கேள்வியென்றால், அண்ணா அவர்களுடைய காலத்திலே திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் தமிழ். இந்தி, ஆங்கிலம் இந்த மூன்றும் பள்ளிக்கூடங்களிலே மாணவர்கள் படிக்கவேண்டுமென்று கட்டாயமாக இருந்த நிலையை கலைஞர் அவர்கள் மாற்றி இனிமேல் தமிழ்நாட்டு பள்ளிக் கூடங்களிலே தமிழ், ஆங்கிலம் இரண்டுக்குத்தான் இடம். இந்திக்கு இடமில்லை. இந்தி ஆசிரியர்களுக்கெல்லாம் மாற்று வேலை தரப்படும் என்று அண்ணா அறிவித்து இரு மொழிக் கொள்கையை அண்ணா நம்மிடத்திலே தந்துவிட்டுச் சென்றார்.

அண்ணா மறைவிற்குப் பிறகு ஏழாண்டுக்காலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இன்றைக்கு நடைபெறுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் அந்த இருமொழிக் கொள்கைதான் பின்பற்றப்படுகிறது. இனி எவனொருவன் ஆட்சிக்கு வந்தாலும் சரி இந்த இரு மொழிக் கொள்கையிலே எவன் கை வைத்தாலும் மறுநாள் சிம்மாசனம் காலி என்கின்ற அளவிற்கு தமிழ்நாட்டினுடைய மொழிப் போராட்ட வரலாறு நாற்பதாண்டு கால நெடிய சரித்திரத்தை உள்ளடக்கிய வரலாறு ஆகும்.

## மொழிப்போரில் வரலாறு படைத்தோர் நாங்கள்

எனவே அப்படிப்பட்ட வரலாற்றுக்குரியவர்கள் நாம். 1938. —ஆம்ஆண்டிலே இருந்து இந்திமொழி ஆதிக்கத்தை

எதிர்த்து வெற்றிக் கொடி நாட்டியவர்கள் நாம். வடக்கேயிருந்து யார் வந்தாலும் தமிழ்நாட்டு எல்லையிலே கால் வைத்துவிட்டால் அவர்கள் தமிழ் நாட்டுக்குள்ளே நுழைந்துவிட்டால் நாங்கள் இந்தியை உங்கள் மீது திணிக்க மாட்டோம் என்று கணபதி காப்பு பாடிவிட்டுத்தான் கச்சேரியே ஆரம்பிக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலை. தமிழ்நாட்டிற்குள்ளே வந்து எந்த அரசியல்வாதியானாலும் சரி இந்த மாநிலத்தவர் அல்லாத அரசியல்வாதிகள் குறிப்பாக வடக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அவர்கள் இமயத்திலிருந்தே வந்தாலும் சரி தமிழ்நாட்டிற்குள்ளே வந்து அடி எடுத்து வைத்தால் அவர்கள் பேசுகின்ற அரசியல் மேடைகளிலே இந்தியைத் திணிப்பது எங்களுடைய நோக்கமல்ல என்று சொல்ல வேண்டுமென்றால், அதற்கு என்ன காரணம்? 1938—ஆம் ஆண்டிலேயிருந்து 65, ஆம் ஆண்டு வரையிலே நடைபெற்ற மொழிப் போராட்டத்திலே பல்லாயிரக் கணக்கானோர் சிறை புகுந்தார்கள். பல பேர் செத்து மடிந்தார்கள். பல பேருடைய நெஞ்சங்களை துப்பாக்கி ரவைகள் துளை பார்த்திருக்கின்றன. துப்பாக்கிக் குண்டுகள் தங்களுடைய மார்பகங்களை மலர்ச்செண்டுகளாக ஏந்தி மாணவ மணிகள் பலர் மடிந்து போயிருக்கின்றார்கள்.

தம்பி கோபால்சாமி சொன்னதைப்போல் நான் சிறைப்பட்ட காரணத்தால் ஏழு பேர் தீக்குளித்துச் செத்தார்கள் என்று சொன்னாரே அதைப்போல மொழியைக் காப்பாற்ற—தமிழ் மொழியைக் காப்பாற்ற—இந்தி ஆதிக்கத்தை அகற்ற—இந்தி ஒழிக, தமிழ் வாழ்க என்று சொல்லிக் கொண்டே எட்டு தமிழ் நாட்டுச் சிங்கங்கள் தீக்குளித்துச் செத்த வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வரலாறு ஆகும்.

## உங்களால் முடிந்ததா !

அந்தக் கழகத்தைப்பார்த்து அந்தக் கழகத்தைச் சேர்ந்தவர் எத்தனை பேர் அண்ணா தி. மு. க. விலே இன்றைக்குமிருக்கிறார்கள். அவர்களையும் சேர்த்து உங்களால் இந்தித் திணிப்பை எதிர்க்க முடியுமா? என்று கேட்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். நான் கேட்ட கேள்விக்கு இதுவரையிலே பதிலளிக்கவில்லை. உங்களுடைய ஆட்சிக் கேரளத்திலே இருந்ததே; உங்களுடைய ஆட்சி திரிபுராவிலே இருக்கிறதே; உங்களுடைய ஆட்சி மேற்கு வங்கத்திலே இருக்கிறதே; அங்கெல்லாம் தமிழ், ஆங்கிலம்

இரண்டு மட்டும்தான், இந்திக்கு வேலை கிடையாது என்று தமிழ்நாட்டிலே இருப்பதைப்போல் மேற்கு வங்கத்திலே வங்கமொழி, ஆங்கிலம், இந்திக்கு வேலைகிடையாது என்று உங்களால் உத்தரவிட முடிந்ததா? கேரளத்திலே நீங்கள் ஆட்சி நடத்தியபோது இங்கே மலையாளம், ஆங்கிலம், இந்திக்கு இடம் கிடையாது பள்ளிக்கூடங்களில் என்று ஆணையிட முடிந்ததா? திரிபுராவிலே நீங்கள்தானே ஆளுகிறீர்கள். அங்கே இருமொழி கொள்கைக்கு இடம் உண்டா? ஆனல் தமிழ்நாட்டிலே இந்தித்திணிப்பு வந்து விடும் அதை தி. மு. க. வரவேற்றுவிடும் என்று மார்க்சிஸ்டுகள் பேசினர்கள். மேற்கு வங்கத்தை, திரிபுராவை, கேரளாவைச் சுட்டிக்காட்டியபோது பதில் சொல்லாத வர்கள் இன்றைக்கு நம்மை அரசியலிலே மாணவர்களாக நடத்துகின்ற அந்த வேடிக்கையைப் பார்த்து நான் உள்ள படியே வியப்படைகிறேன்.

நான் இந்தப் போராட்டத்தை நடத்துகின்ற காரணத்தால் விலைவாசி உயர்ந்து கொண்டே போவதை மறந்து விடவில்லை. நான் இந்தப் போராட்டத்தை நடத்துகின்ற காரணத்தால் தொழிலாளர்களுடைய உரிமைகளை யார் வேண்டுமானலும் கழுத்தை நெறித்துக் கொன்று விடலாம் என்று எண்ணுவார்களேயானல் அதைத் தடுத்து நிறுத்தத் தயங்கப் போவதில்லை. நான் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவிட்ட காரணத்தால் மக்களுடைய அன்றுடப் பிரச்சினைகளைப் பற்றிக்கவலைப்படாமல் இருந்துவிடப் போவதில்லை. அவசரமாக இருந்தால் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுகளைக் கேட்டுக்கொள்வேன் நீங்கள் ஒரு நடைப்பயணத்தை ஆரம்பியுங்கள். எங்களுக்குச் சொல்லுகிற யோசனையை ஏன் நீங்கள் செய்துகாட்டக் கூடாதா? உங்களால் முடியாதா? அதையும் நாங்கள்தான் செய்ய வேண்டுமென்றால் என்ன அர்த்தம்? அதை ஏன் நீங்கள் செய்யக் கூடாது? இதைத்தான் மார்க்சிஸ்டுகளைப் பார்த்து நான் கேட்க விரும்புகின்றேன்.

**கோவில் பட்டியில் கலைஞர் உரை 18—2—82**

# ஆட்சியாளர் ஆணவம் மிதிபடும் காலம் வந்தே தீரும்!

இந்த மாவட்டத்திலே நடைபெற்ற பயங்கரமான சம்பவம் கோவில் அதிகாரி கொல்லப்பட்டது. ஆண்டவனுடைய ஆபரணங்களைத் திருடினர் என்று அவர் குற்றம் சாட்டப்பட்டார். யாரால்? திருடியவற்களால்— கொள்ளைக் காரர்களால் குற்றம் சாட்டப்பட்டார். யார் அந்தக் கொள்ளைக்காரர்கள்? அந்த ஆலயத்தைச் செம்மையாக நடத்துவதாக உறுதி எடுத்துக்கொண்டு எம். ஜி. ஆரால் நியமிக்கப்பட்டவர்கள்; அறங்காவலர் குழுவைச் சேர்ந்தவர்கள்— அவர்களோடு சேர்ந்த சில அதிகாரிகள்— அவர்களால் கொல்லப்பட்டார்.

இந்தப் பயங்கர சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி திருச்செந்தூர், திருநெல்வேலி, குமரி மாவட்டங்கள் கொந்தளித்தன. குமுறின. ஏன் தமிழகமே ஆர்த்தெழுந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரமல்ல; அனைத்துக் கட்சிகளும் ஆர்த்தெழுந்தன. அனைத்துக் கட்சிகளும் நீதி விசாரணை வேண்டுமென்று கோரின. வேறு வழியின்றி நான் பிரதமருக்கும் உள்துறை அமைச்சருக்கும் தந்திகள் கொடுத்தேன். இந்திரா காங்கிரசைச் சேர்ந்த நண்பர் கே. டி. கோசல்ராம் சி. பி. ஐ. விசாரனை— மத்திய போலீஸ் விசாரணை வேண்டுமென்று தந்தி கொடுத்தார்.

## கமிஷன் வைத்த காரணம்!

திருச்செந்தூர் கோவில் நகை சரிபார்ப்பு அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையின் மர்மச் சாவு குறித்து பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சி.பி. ஐ. விசாரணைக்கு உத்தர விடக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக தமிழகத்தின் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் நீதிபதி பால் அவர்களைக் கொண்டு ஒரு நீதி விசாரணை வைத்தார். அவர் ஆறேழு மாதம் விசாரணை நடத்தி, இறுதியாக அவர் அறிவித்த முடிவு "அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை தற்கொலை செய்து கொள்ளவில்லை. அவர் உண்டியலைத் திருடவில்லை. மாறாக உண்டியலைத் திருடிய உன்மத்தர்களால் அவருடைய உயிர் போக்கப் பட்டிருக்கிறது. இது தற்கொலை அல்ல. அவரைக் கொன்றிருக்கிறார்கள். இது கொலைதான்" என்று திட்ட

வட்டமாக அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார். அந்த அக்கிரமக் காரர்கள் சுப்பிரமணிய பிள்ளைக்கு முதலுதவிகூடச் செய்ய வில்லை என்பதை அவர்கள் வாக்குமூலத்திலே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தூக்கு மாட்டிக் கொண்டதாகச் சொல்லுகிறீர்களே! அவரைக் கீழே தூக்கிப் போட்டது நீங்கள்தான் என்று சொல்லுகிறீர்களே! அப்போது அவருக்கு உயிர் இருந்ததா என்று பார்த்தீர்களா என்று நீதிபதி கேட்டிருக்கிறார். ஆனால் அவர்கள் பார்க்கவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். ஏன் பார்க்கவில்லை என்று நீதிபதி கேட்டதற்கு 'பார்க்க வேண்டிய அளவிற்கு எங்கள் மனதிலே கவலை ஏற்படவில்லை' என்று பதில்சொன்ன பழிகாரர்கள், பாதகர்கள்— பஞ்சமாபாவிகள்— இந்த நாட்டிலே உலவிட வேண்டுமென்று எம்.ஜி. இராமச்சந்திரன், அவர்களுக்கு பட்டயங்கள்— பதவிகள்— பவிஷிகள் அனைத் தையும் மேலும் மேலும் தருவேன் என்று சொல்லுகிறார்.

## நான் தமிழர்கள் பிரதிநிதி!

நீ யார் இவைகளைக் கேட்க என்று கேட்கிறார் எம்.ஜி. ஆர்.

நான் யார்? தமிழகத்து மக்களுடைய பிரதிநிதி என்ற முறையிலேதான் இன்றைக்கு நான் எம்.ஜி. ராமச்சந்திரனைக் கேட்கிறேன்.

நீதிபதி பால் இதைக் கொலை என்று சொன்னாரா? தற்கொலை என்று சொன்னாரா? எதுவுமே சொல்லவில்லை என்று எம். ஜி. இராமச்சந்திரன் சொல்வது அப்பட்டமான பொய்.

## அன்று மௌனம் பூண்டது!

எம்.ஜி ஆர். மேலும் என்னோடு வாதாடத் தயாரா? சட்டமன்றத்திலே நான் பல ஆதாரங்களை எடுத்து வைத்து பால் கமிஷன் அறிக்கையைப் பக்கம் பக்கமாகப் படித்துக் காட்டி அதற்கு மறுப்பு அளிக்கப்பட்டிருக்கின்ற அரசாங்கத் தினுடைய அறிக்கையிலே இருக்கின்ற ஓட்டை உடைசல்களை எல்லாம் அங்கே எடுத்துச் சொன்னபோது—இன்றைக்கு நான் நடைப்பயணம் புறப்பட்டபோது சட்டமன்றத்திலே வாய்வீரம் பேசுகின்ற எம்.ஜி.ஆர். நேருக்கு நேர் நான் குற்றம் சாட்டியபோது மௌனமாகத்தான் உட்கார்ந்திருந் தார் என்பதை மறந்துவிடக்கூடாது.

நான் பயணம் புறப்பட்டபோது போகாதே என்ருர். போகாதே, போகாதே என்ற சொல்லை பாஞ்சாலச் சீமையிலே போர்க் குணம் படைத்தவர்கள் யாரும் கேட்ட தில்லை என்பதை நீங்கள் நன்ருக அறிவீர்கள்.

ஆனுல் எம். ஜி. ஆர் சொன்ன போகாதே என்பதற்கு அர்த்தம்— தன்னுடைய தோழர்களை— கட்சிக்காரர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான்.

நான் சொன்னேன். 'குற்றவாளிகளை கைது செய்தால் போகாமலிருக்கிறேன்' என்று. ஆனுல் எம். ஜி.ஆர். அதை கேட்கவில்லை. நான் புறப்படுவதற்குள்ளாக லட்சக்கணக் கான சுவரொட்டிகளை அடித்து அதை சுவரிலே மாத்திர மல்ல; பாதைகளிலெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை இழிமொழிகளால் அர்ச்சித்து ஒட்டியிருக்கிருர் கள்.

தார் போட்ட சாலையிலே ஒட்டப்பட்ட சுவரொட்டி களை என்னுடைய தங்கங்கள்— உடன் பிறப்புகளாம்— சிங்கங் கள் தங்களுடைய காலால் மிதித்து நடந்துவருகிற காட்சியை நான் பார்த்துப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறேன்.

எனவே இந்த ஆட்சியும் காலால் மிதிபடுகின்ற காலம் வந்தே தீரும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

கடந்த 15-ந் தேதி காலை மதுரை நகரில் பேரறிஞர் அண்ணு சிலைக்கு முன்பு அவருடைய வாழ்த்துக்களை மானசீகமாகப் பெற்றுள்ளோம் என்ற உணர்வோடு தொடங்கிய இந்தப் பயணம் இன்றைய தினம் உங்களை யெல்லாம் சந்திக்கின்ற இந்த வாய்ப்பினை எங்களுக்கெல் லாம் வழங்கியிருக்கின்றது.

நாளை காலையிலே மீண்டும் துவங்கி திருச்செந்தூர் வரையிலே நடைபெற இருக்கிற இந்தப் பயணத்திலே ஈடுபட்டு தொடர்ந்து மதுரையிலிருந்து என் பின்னுல் நடை போட்டு வருகின்ற கழகக் கண்மணிகளுக்கு, அன்பு உடன் பிறப்புகளுக்கு எப்படித்தான் நன்றி சொல்வதென்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கின்றேன்.

வருகின்ற வழியெல்லாம் ஒருவர் இருவராக சில இடங் களில் தன்னந்தனியாகக்கூட தங்களுடைய ஆடைகளை, தங்களுக்குத் தேவையான பொருட்களை அடைத்து அப் பையை தங்கள் தலையிலே தூக்கி கொண்டு பக்தர்கள் பழனிக்குச் செல்வதைப் போல்— திருச்செந்தூருக்குச் செல்வதைப்போல்—ஆலயங்களிலே தங்களுடைய பிரார்த் தனைகளைச் செலுத்துவதற்கு செல்கின்றவர்களைப்போச

செல்கின்ற அந்தக் காட்சியை நான் காணுகிற நேரத்தில், அவர்களுக்கெல்லாம் நான் எந்த விதத்திலே கைமாறு செய்யப் போகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை.

என்னுடைய கால்கள் கொப்பளித்து விட்டன என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் நான் உங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்லுவேன். கொப்பளித்துவிட்ட கால் கருணாநிதியினுடைய காலாக இருக்கிற காரணத்தால் அதற்கு விளம்பரம் கிடைத்திருக்கிறது. ஆனால் என்னுடைய கண்மணிகளே! உடன்பிறப்புக்களே! உங்களுடைய கால்களெல்லாம் எத்தனை பேருக்கு கொப்பளித்திருக்கின்றன என்ற கணக்கு பத்திரிகைகளிலே வெளிவராது. காரணம் நீங்கள் விளம்பரம் பெறாதவர்கள். விளம்பரம் பெறாவிட்டாலும் இந்த இயக்கத்திலே உங்களுக்கு பதவிகள் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கோபுரத்திலே உள்ள கலசங்களை ஒளிவிடச் செய்வதற்கு மண்ணடியிலே கிடக்கின்ற அஸ்திவாரக் கற்களைப் போன்றவர்கள் நீங்கள்.

என்னுடைய ஆயுள் உள்ளவரையிலே நிச்சயமாக இதை நான் மறக்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஊருக்குப் பெயர் எப்போதும் வென்றான் என்று தம்பி கோபால்சாமி சொன்னதைப்போல் இந்த ஊரில் எப்போதும் இல்லாத கூட்டம் கூடியிருப்பதை நீங்களும் காணுகிறீர்கள்; நானும் காண்கிறேன். எப்போதும் வென்றான் என்ற இந்த ஊர் நேற்று கோவில்பட்டியிலே கூடிய கூட்டத்தைக்கூட வென்று காட்டி இப்போதும் வென்றிருக்கிறது; எப்போதும் வெல்லும் என்பதை நிரூபித்திருப்பதை நான் நேரடியாகவே காணுகிறேன்.

இந்த நீண்ட நெடிய நீதி கேட்கின்ற பயணத்தில் எல்லா ஊர்களையும் விட ஒரு விதத்திலே இந்த ஊர் வென்றிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எல்லா ஊர்களிலும் நெடிய பயணம் முடிந்து எனக்கு சற்று நேர ஓய்வளித்து என்னுடைய ரணமாகியிருக்கிற கொப்புளங்கள் வெடித்திருக்கிற கால்களில் ஒரு துளி மண்ணும்படக் கூடாது என்பதற்காக ஓய்விடத்திலே இருந்து காரிலே அழைத்து வந்து மேடையிலே ஏற்றுவார்கள். அதிலே கூட இந்த ஊர் மற்ற ஊர்களை வென்று காட்டியது என்பதற்கு அடையாளமாக நடந்து வந்த நீ நடந்து வந்தே மேடையில் ஏறு. காலில் மண்பட்டால் பரவாயில்லை என்று என்னையும் இந்த ஊர்

வென்று காட்டி, உன்னை மட்டுமல்ல, உன் தாத்தாவையும் வெல்லுவேன் என்கின்ற அளவுக்கு வென்று காட்டியிருக்கின்றது.

எனவேதான் எப்போதும் வென்றான் அப்பெயருக்கேற்ப தன்னுடைய இயல்பினைத் தொடர்ந்து பெற்று வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக அச்சார அடையாளமாக இந்த மாபெரும் பொதுக் கூட்டம் அமைந்திருக்கிறது.

**''எப்போதும் வெள்ளுன்'' கூட்டத்தில் கலைஞர்**. 19—2—82

# ஒவ்வொரு தனி மனிதனுக்கும் நீதி கிடைக்கவே நெடும்பயணம் செல்கிறோம்

திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில், ஏன்? ஆளுங்கட்சியாக இருந்த காலத்திலேகூட இப்பொழுது எதிர்க்கட்சியாக இருக்கின்ற இந்தக் காலத்திலும் தமிழ்நாட்டு மக்களுடைய நன்மைக்காகவும், தமிழர்களுடைய உரிமைகளைப் பேணி பாதுகாப்பதற்காகவும், தமிழ் மொழிக்கு ஒரு இன்னலென்றால் அதனைத் தட்டிக் கேட்டு தாய்மொழியைக் காப்பாற்றுகின்ற நிலைக்காகவும் தமிழ்நாட்டு மக்களுடைய தேவைகள் புறக்கணிக்கப்பட்டு மத்தியிலே உள்ள ஒரு சர்க்கார் அந்த நிலையை தொடர்ந்து கடைப்பிடிக்குமேயானால் அதை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும், மத்தியிலே உள்ள அரசுக்கு எடுத்துக்காட்டவும் எழுச்சி நாள் போன்ற நாட்களைக் கொண்டாடுகின்ற வகையிலும் பல்வேறு போராட்டங்களை அறவழியிலே நடத்தியுள்ள இயக்கமாகும்.

திராவிட முன்னேற்றக்கழகம் ஒரு போராட்டத்திலே ஈடுபடுகிறதென்றால் அந்தப் போராட்டம் சிறிதும் அமைதிக்கு ஊனம் விளைவிப்பதாக, கடுகளவு கலவரத்திற்கும் இடந்தருவதாக இருந்திடக்கூடாது என்பதிலே நம்மையெல்லாம் ஆளாக்கிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார்கள் என்பதை நீங்கள் மிகத் தெளிவாக அறிவீர்கள். அத்தகைய அறப் போராட்டப் பட்டியலிலே ஒன்றாகத்தான் நம்முடைய கழக

வரலாற்றில் சிறப்பிடம் பெறக்கூடிய இந்த இயக்கம் நீதி கேட்டு நெடிய பயணம் மேற்கொண்டிருக்கிறோமே அந்த இயக்கம் கடந்த 15-ந்தேதி காலையிலே தொடங்கி நாளை மறுநாள் திருச்செந்தூரில் நிறைவடையவிருக்கின்றது.

## பேராசிரியர் வாழ்த்துவது அண்ணன் வாழ்த்துவது போல

மதுரையிலே 14-ஆம் நாள் நம்முடைய பேராசிரியர் அவர்களுடைய தலைமையிலே வழியனுப்பு விழா என்ற தலைப்பிலே ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு தலைமையேற்ற நம்முடைய பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் கருணாநிதிக்கு நான் வயதிலே மூத்தவன் ஓராண்டு அல்லது ஈராண்டு என்ற வகையிலே தம்பி என்கிற முறையிலேகூட நான் அவரை வழியனுப்பி வைக்கிறேன் என்று குறிப்பிட்டார்.

தம்பி! தம்பி! என்று நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கி அன்பு பொழிந்து, குடும்ப பாசத்தைக் கட்டிக் காத்து வளர்த்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய குரல் அன்றைக்கு பேராசிரியருடைய குரலாக ஒலித்ததாகத்தான் நான் எண்ணிக்கொண்டேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலே கருணாநிதி தலைவன். பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பொதுச்செயலாளர் என்று இருக்கிற இந்த நிலையை தலைவர், அதற்கு அடுத்து பொதுச் செயலாளர் என்ற படிக்கட்டு முறையிலே உள்ளது அல்ல. எதையாவது ஒன்றை முதலிலே போடவேண்டும். பொதுச் செயலாளர் என்பதை முதலிலே போட்டாலும் போடலாம். தலைவர் என்பதை முதலிலே போட்டாலும் போடலாம். இரண்டையும் முதலிலே போட முடியாது. எனவேதான் தலைவர் பொதுச்செயலாளர் என்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற இந்த பொறுப்புக்கள் தலைவர், என்ற பொறுப்பு என்னிடத்திலும், பொதுச்செயலாளர் என்ற பொறுப்பு பேராசிரியரிடத்திலும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. என்றாலும்கூட நாங்கள் இருவரும் கழகத்தின் சார்பிலே எந்த ஒரு முடிவினை மேற்கொள்வதாக இருந்தாலும் ஒருவரையொருவர் கலந்துபேசி ஒருவேளை மிக அவசரமானதும் விரைவிலே முடிவெடுக்க வேண்டிய காரியமாக இருந்தாலும்கூட நானும் அவரும் தொலைவிலே உள்ள ஊர்களிலே இருந்தாலும்கூட தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு அந்த முடிவினை

இருவரும் கலந்து பேசி எடுப்பதைத்தான் எங்களுடைய ஜனநாயகக் கடமையாக இந்தக் கழகத்தை வளர்ப்பதற்கு பயன்படக்கூடிய ஒரு தன்மையாக ஏற்றுக்கொண்டு செயல் பட்டு வருகின்றோம்.

## 'கள்வன்' என்ற பட்டம் சூட்டுவதா?

இந்த நெடிய பயணத்தைப் பொறுத்தவரையிலேகூட நான் கடந்த ஒரு திங்களுக்கு முன்பு நெல்லை மாவட்டத்திலே ஒரு பகுதியிலே நண்பர் கிருஷ்ணன் அவர்களும், இன்னொரு பகுதியிலே தம்பி கோபாலசாமி அவர்களும் மற்றுமுள்ள நம்முடைய கழக நண்பர்களும் ஒன்றியக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் ஆங்காங்கு ஏற்பாடு செய்த பல்வேறு நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டு திருச்செந்தூரிலே நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் பேசிவிட்டு, திருச்செந்தூரிலே படுகொலைக்கு ஆளான நேர்மைமிக்க அதிகாரி சுப்பிரமணியபிள்ளையினுடைய இல்லத்திற்கு —கன்யாகுமரி மாவட்டத்திலே உள்ள இரணியல் என்ற ஊருக்கு நான் சென்று அவரை இழந்து வாடிக்கொண்டிருக்கிற அவருடைய ஆருயிர்த் துணைவியாரையும், அன்புச் சின்னங்களாம் அவர் பெற்றெடுத்த இரண்டு செல்வங்களையும் சந்தித்தேன்.

இங்கு பேராசிரியரும், விவசாய அணியினுடைய செயலாளர் நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் குறிப்பிட்டதைப்போல் தன்னுடைய கணவர் இறந்துவிட்டார்—மாண்டு விட்டார் என்ற கவலையில் இன்றைக்கு விதவையாகி வெள்ளுடை பூண்டிருக்கிற அந்த அம்மையார் வாடுவதை விட இறந்தவர் பிழைப்பதற்கில்லை என்ற இயற்கை நீதியினை உணர்ந்திருக்கிற காரணத்தினால் அந்த கவலையை மறக்கவேண்டியதுதான். அவருடைய அன்புச் சின்னங்களாக இருக்கின்ற அந்த மக்களை வளர்க்க வேண்டியதுதான் அவர் வழிநின்று நாம் ஆற்ற வேண்டிய கடமை என்று அந்த அம்மையார் உணர்ந்து கொண்டிருக்கிறார்களென்றாலும் அவர்களுடைய உள்ளத்தை இன்றைக்கும் அரித்துக் கொண்டிருக்கிற ஒன்று ஏதோ கொன்றார்கள் என்னுடைய கணவனை! ஆனாலும் கள்வனென்று சொல்லி அல்லவா கொன்றார்கள். அந்தக் கள்வன் என்ற பட்டத்தையும் அதிகாரப் பூர்வமாக— அரசாங்க ரீதியாக நாட்டிலே இருக்கின்ற அத்தனைக் கட்சிகளினுடைய தலைவர்களும் மறுத்துங் கூட சுப்ரமணியபிள்ளை திருடன்தான். உண்டியலை அபகரித்தவர்தான். உண்டியல் பணத்தை அதுவும் திருமுருகனுக்கு சொந்தமான திருச்செந்தூர் உண்டியல் பணத்தைக்

களவாடியவர்தான் என்று 'கள்வன்' என்கின்ற ஒரு பட்டத்தையும் தன்னுடைய கணவனுக்குச் சூட்டி விட்டார்களே! இனி என்னுடைய கணவன் எழுந்து வரப்போவதில்லை: அப்படி எழுந்து வருகின்ற அந்த மாயத்தைச் செய்வதற்கு அந்த அற்புதத்தை நிகழ்த்துவதற்கு யாராலும் இயலாது. ஆனுல் 'கள்வன்' என்று சூட்டப்பட்டிருக்கிற பட்டத்தைக் களைவதற்கு நம்மால் முடியுமென்று அவர்கள் நம்புகிருர்கள். அந்த 'நம்மால்' என்பதுதான் யார் என்று பிரச்சினையாகி விட்டது.

தமிழ்நாட்டிலே பல கட்சிகள் இருக்கின்றன. தலைவர்கள் உள்ள கட்சியும் இருக்கிறது. தலைவர்கள் இருந்தும் உறுப்பினர்கள் இல்லாத கட்சியும் இருக்கிறது; உறுப்பினர்கள் இருந்தும் தலைவர் யார் என்று தெரியாது திணறிக் கொண்டிருக்கிற கட்சிகளும் இருக்கின்றது. இத்தனை கட்சிகள் தமிழ்நாட்டிலே இருந்தும் கூட ஒரு சில கட்சிகளைத் தவிர மற்ற கட்சிகள் ஏதோ ஒரு நாள் ஒப்புக்காகக் கண்டனத்தைத் தெரிவித்துவிட்டு, அறிக்கைகளை வெளியிட்டுவிட்டு நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதிலே இறுதி வரையிலே போராடுவோம் என்கின்ற உறுதியை எடுத்துக்கொள்ளவில்லையே என்று எங்களுக்கு ஏற்பட்ட ஆதங்கத்தின் காரணமாகத்தான் சுப்ரமணியபிள்ளை கள்வன் அல்ல என்பதை நிலைநாட்ட வேண்டிய அந்தக் கடமையை திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தோளிலே தூக்கிப் போட்டுக்கொண்டு இன்றைக்கு இத்தகைய அறப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கின்றது.

## அய்யாசாமி போன்ற தியாக உள்ளம் படைத்தோர்!

வாருங்கள் 15—ந் தேதி மதுரையம்பதிக்கு; நடைப் பயணத்திலே ஈடுபடுங்கள் என்று தலைமைக் கழகத்தின் சார்பிலே நானும், பொதுச்செயலாளரும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள் உங்களுக்கு இருந்தாலுங்கூட உங்களுடைய குடும்பங்களிலே எவ்வளவோ தொல்லைகள் இருந்தாலும்கூட இந்தமேடையிலேயே இந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகித்திருக்கின்ற அன்பிற்குரிய நண்பர் அய்யாசாமி அவர்கள் கடந்த நான்கு நாட்களுக்கு முன்புதான் தன்னுடைய ஆருயிர் மகனை விபத்து ஒன்றுக்கு பலி கொடுத்துவிட்டு அதையுங்கூட மறந்த நிலையில் — அதையுங் கூட பொருட்படுத்தாத நிலையில் இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு நகரக் கழகத்

தினுடைய செயலாளர் செயபாண்டியனோடும், மாவட்டக் கழகச் செயலாளர் நண்பர் கிருஷ்ணனோடும், மாநிலங் களவை உறுப்பினர் தம்பி கோபாலசாமியோடும் மற்றும் இந்த வட்டாரத்திலே இருக்கின்ற கழக நண்பர்களோடும் ஒத்துழைத்து என்னை மதுரையிலே வந்து சந்திக்கின்ற அளவுக்கு நான் வந்து துக்கம் விசாரிப்பதற்கு முன்பாக தனனுடைய தலைவனை மதுரையிலே வந்து சந்திக்க வேண்டும் என்ற உணர்வோடு ஓடி வருகிறாரென்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர இத்தகைய தியாக உள்ளங்களை (கைதட்டல்) தருகின்றவர்களை வேறு எங்கே காணமுடியும் என்று கருதுகின்றீர்கள்.

## வீரநடை போடும் லட்சிய வீரர்கள்!

இப்படிப்பட்ட பல்வேறு தொல்லைகளுக்கு, ஒரு குடும் பத்திலே சோதனை நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கலாம்; ஒரு குடும்பத்திலே தன்னுடைய தந்தைக்கோ தாய்க்கோ அல்லது உற்றார் உறவினருக்கோ கவலைப்படுகின்ற அளவுக்கு உடல்நிலை ஏற்பட்டிருக்கலாம். பிறருக்குப் பல்வேறு பிரச் சினைகள் இருக்கலாம். இவ்வளவு பிரச்சினைகளையும் மறந்து விட்டு எட்டு நாட்கள் அதுவும் எங்கேயோ ஒரு மாநாட்டிலே அமர்ந்தோம் பேச்சைக் கேட்டோம், சென்றோம் என்றல்ல. 120 மைல் கற்களைத் தாண்ட வேண்டும். வழியிலே சாப்பாடு போடுவதாக சொல்லுகிறார் கள். பணம் கொடுத்தாலும் சாப்பாடு கிடைக்குமா என்கின்ற ஐயப்பாடு. தண்ணீர் இல்லாத பகுதி. இத்தகைய காடாரம்பம் என்று சொல்லப்படுகின்ற பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியதும், வறண்ட பகுதிகள் பலவற்றைத் தன்ன கத்தே இணைத்துக் கொண்டிருப்பதுமான இந்த மாவட்டங் களில் எட்டுநாள், எந்த யாதொரு வசதியுமில்லாமல் மதுரை யிலேயிருந்து புறப்பட்டு திருச்செந்தூர் வரையிலே கால் நடையாகவே நாங்கள் வரத் தயார் என்று சொல்லக்கூடிய ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டோர் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறார்கள் என்பதை எண்ணுகிற நேரத்தில் நாங்கள் பெருமை அடைகிறோம்.

நான் வேண்டுமானால் அறைகூவல் விடுக்கிறேன். வேறொரு கட்சி இந்தக் காரியத்தைத் தமிழ்நாட்டிலே செய்து காட்டமுடியும் என்று கருதுகிறீர்களா? (முடியாது முடியாது என்று மக்கள்குரல்) இப்படி அணி அணியாக பாதை ஓரங்களிலே சாலைகளிலே மனிதர்கள் செல்வது கிடையாதா? என்று நீங்கள் கேட்கக்கூடும். பழனிக்குக்

காவடி எடுத்துக் கொண்டு செல்வதில்லையா? ஏழுமலையானை தரிசிக்க திருப்பதிக்கு பக்தர்கள் போவதில்லையா? திருத்தணியிலே இருக்கின்ற முருகனுக்கு வேண்டுதல் செய்து பிரார்த்தனையைச் செலுத்துவதற்காக பக்த கோடிகளெல்லாம் செல்வது கிடையாதா? அவர்கள் கூட்டங் கூட்டமாக 50 பேர், 60 பேர், 100பேர் என்று பல்லாயிரக்கணக்கானோர் செல்வது கிடையாதா? தமிழ்நாட்டிலே இருக்கின்ற சாமிகள் எல்லாம் போதாதென்று பக்கத்திலே அய்யப்பசாமி கிடைக்குமா என்று மலையாளத்திலே இருக்கின்ற சாமியையும் தேடிக்கொண்டு போகிறார்களே தெருத் தெருவாக! அப்படியெல்லாம் போகின்ற கூட்டம் கிடையாதா? கேட்கலாம் நீங்கள்.

## உங்கள் கால் கொப்புளங் கண்டு என் இதயத்தில் கொப்புளங்கள்!

ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செல்கிறவர்கள் அத்தனை பேரும் தங்களுக்காகச் செல்லுகிறார்கள். தான் வாழவேண்டும். தன்னுடைய எதிர்காலம் ஒளி மயமாக இருக்க வேண்டும். தன்னுடைய குடும்பம் செழிக்க வேண்டும். தன்னுடைய பிள்ளை குட்டியினுடைய வாழ்வு— அல்லது உற்றார் உறவினருடைய வாழ்வு—அல்லது கணவனுடைய வாழ்வு அல்லது மகனுடைய வாழ்வு அல்லது தன்னுடைய வேலை நிலைக்க வேண்டும்; அல்லது வேலை கிடைக்காமல் இருந்தால் இந்த ஆட்சியில் அது கிடைக்கவேண்டும் என்று தன்னைச் சுற்றி, தன்னுடைய குடும்பத்தைச் சுற்றி அல்லது தன்னுடைய உற்றார் உறவினர்களைச் சுற்றியிருக்கின்ற பிரச்சினைகளுக்காகத்தான் ஆண்டவனுடைய ஆலயங்களுக்கெல்லாம் கூட ஆயிரக்கணக்கான பக்தர்கள் செல்லுகின்றார்கள்.

ஆனால் இங்கே யாருக்கும் உங்களைப் பற்றிய தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. ஆனால் நாட்டைப் பற்றி ஒரு பொதுப் பிரச்சினைக்காக — நீதியை நிலைநாட்டுகின்ற பிரச்சினைக்காக 50,000 பேர் இன்றைக்கு மதுரையிலேயிருந்து திருச்செந்தூர் வரையிலே சாலைகளிலெல்லாம் நான் காணுகின்றேன். என்னுடைய கால் கொப்பளித்து விட்டது என்பதற்காக வருந்துகின்றீர்களே! பேராசிரியர் வருந்தினாரே! ஆனால் நேற்றும் நேற்று முன்தினமும் சொன்னதைப்போல கருணாநிதி என்கின்ற பெயர் விளம்பரமாகி

விட்ட பெயர் என்கின்ற காரணத்தால் என்னுடைய காலிலே ஏற்பட்ட கொப்புளங்கள் விளம்பரப்படுத்தப் படுகின்றன; பெரிதாகத் தெரிகின்றன. உங்களில் எத்தனை பேருடைய கால்களிலே இதைவிட அதிகமான கொப்புளங்கள்; இதைவிட அதிகமான ரணங்கள் எனக்குத் தெரியாதா? எனக்குத் தெரியும். ஆனால் அதை உங்களால் புரிந்து கொள்ள முடியாது. நான் சொல்லுகிறேன் உங்களுடைய கால்களிலே கொப்புளங்கள். அதைப் பார்த்து பார்த்து என்னுடைய இதயத்திலே கொப்புளங்கள். கால்களிலே இருக்கின்ற கொப்புளங்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அது எனக்குத் தொல்லை கொடுக்கிறது; நடக்க இயலவில்லை; இருந்தாலும்கூட பேராசிரியர் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல நடக்காதவையெல்லாம் இந்த நாட்டிலே நடக்கிற நேரத்தில் அவைகளை அடக்காமல் விட்டால் எதிர்காலச் சந்ததியால் நாம் சபிக்கப்படுவோம் என்கின்ற ஒரே காரணத்திற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மகத்தான போராட்டத்திலே ஈடுபட்டிருக்கின்றது.

நீங்கள் எண்ணலாம். தமிழ்நாட்டில் எத்தனையோ கொலைகள் நடைபெறுகின்றன. நாட்டில் எத்தனையோ பயங்கர விளைவுகள் பத்திரிகை செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் இல்லாத முக்கியத்துவம் திருச்செந்தூர் ஆலயத்திலே நடைபெற்ற இந்தச் சம்பவத்திற்குத் தரப்படுவானேன்? என்று எண்ணலாம். பேராசிரியர் கழகத்தினுடைய கருத்தை இங்கே அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்! அதுதான் கழகத்தின்கருத்து. ஏதோ திருச்செந்தூர் விவகாரத்தைப் பெரிதுபடுத்தி இந்த ஆட்சியை அகற்ற வேண்டுமென்று கருணாநிதியோ, அன்பழகனோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களோ எண்ணுகிறார்கள் என்று யாராவது நினைத்தால் அது பைத்தியக்காரத்தனம். இந்த ஆட்சியை அகற்றித்தான் தீரவேண்டும்; அதற்கு போர்க்கோலம் பூணுங்கள் என்று நானோ பேராசிரியரோ கட்டளையிட்டால் அதற்கும் தங்களை ஈடுகொடுக்க தங்களை அர்ப்பணித்துக் கொள்கின்ற தற்கொலைப்படை தமிழகத்திலே உருவாக இருக்கின்றது.(பலத்த கரவொலி) ஆனால் நானும் சொன்னேன். இன்றைக்கு பேராசிரியரும் உங்களிடத்திலே விளக்கியிருக்கின்றார்! அந்தப் பொறுப்பை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வருகிற தேர்தலில் மக்கள் எடுத்துக் கொள்ளட்டும். அந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்வதிலே அவர்கள் தவறிவிடு

வார்களேயானுல் அந்த தவறுக்குத் தாங்கள் பொறுப்பாளி யாகட்டும்.

## கொலையை மறைக்க குருக்கள் மகளேயும் களங்கப்படுத்த முயற்சி

இந்த திருச்செந்தூர் கொலை விவகாரத்திலே அமைச்சர் வீரப்பன் எப்படியாவது சுப்ரமணியபிள்ளையின் மீது சில புகார்களைச் சுமத்தவேண்டுமென்று கருதினுர். நீதிபதியின் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வீரப்பன் வியூகம் ஒன்றை வகுக்கிருர். தஞ்சை மாவட்டத்திலே ஒரு பாடல் பெற்ற ஸ்தலம். அந்த தேவஸ்தானத்திலே சுப்ர மணியபிள்ளை ஒரு காலத்திலே வேலை பார்த்தார். அவர் பெரிய அதிகாரியாக பதவி உயர்வதற்கு முன்பு அறநிலையத் துறை அதிகாரிகளிலே சிறிய அதிகாரியாக அவர் அங்கே ஒரு கோவிலுக்கு மாத்திரம் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந் தார். அதன் வழியில் ஏதாவது புகாரைச் சுமத்தலாம் என்று அமைச்சர் எண்ணினுர். தஞ்சை மாவட்டத்திலே சென்று தஞ்சைத்தலைநகரத்திலே முகாமிட்டார். அதிகாரிகளை அழைத்தார்— ஆணை பிறப்பித்தார். என்ன ஆணை தெரியுமா? என்றைக்கோ ஒரு காலத்திலே சுப்ரமணியபிள்ளை அதிகாரியாக வேலை பார்த்த அந்த ஆலயத்தின் குருக்களை அழைத்து வரச்சொன்னுர். அந்தக் குருக்களுக்கு ஆள் அனுப்பினுர். அந்தக் குருக்களை என்ன செய்தார்கள் தெரியுமா? தன்னுடைய மகளை அங்கே அதிகாரியாக ஒரு காலத்திலே வேலைபார்த்த சுப்ரமணியபிள்ளை கற்பழிக்க முயற்சித்தார் என்று இட்டுக்கட்டப்பட்ட கட்டுக் கதையை அந்தக் குருக்கள் சொல்லவேண்டுமென்று அமைச்சர் அதிகாரிகள் மூலமாக ஆணை பிறப்பித்தார். அந்தக் கோவில் குருக்கள் சொல்லிவிட்டார்; நீங்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காக என்னுடைய மகளை களங்கமுள்ள வளாக ஆக்கிஅவள் வாழ்நாளெல்லாம் உயிரோடிருந்தே சாக வேண்டுமா? என்னுல் முடியாது என்று மறுத்துவிட்டார். —இவைகளெல்லாம் மறைமுகமாக நடைபெற்ற வேலைகள்.

இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல் சுப்ரமணிய பிள்ளையின் மீது ஏற்கனவே புகார்கள் இருந் தன. நான் சட்டமன்றத்திலே கேட்டேனே? அர்ச்சுனன் என்ற ஒரு அதிகாரி பால்கமிஷனுக்கு முன்னுல் சாட்சிய மளித்ததில் சுப்ரமணியபிள்ளையைப் பற்றிய நற்சான்றுகள் அத்தனையும் அவர் மிகவும் உயர்ந்த மனிதராகத்தான் காட்டுகின்றன என்று சொன்னேன். அதை அடிப்படை

யாகக் கொண்டு நீதிபதி பால் தன்னுடைய கருத்துக்கு வலுவூட்டியிருக்கிறார். ஆனால் அரசாங்கம் வைத்த மறுப்பு அறிக்கையில் அப்படிச் சொன்ன அர்ச்சுனன் அரசாங்கத் திற்குத் தந்துள்ள அறிக்கையில் சுப்ரமணியபிள்ளையின் மீது புகார்கள் ஒரு காலத்திலே வந்தது உண்டு என்று சொல்லியிருக்கிறார் என்று அரசு தரப்பிலே குறிப்பிட்டார் கள்.

நான் சட்டமன்றத்திலே கேட்டேன். அப்படியானால் அந்தப் புகார்களை நீதிபதி பாலுக்கு முன்னால் நீங்கள் கொண்டுபோய் வைக்கத் தயங்கியது ஏன்? ஏன் வைக்க வில்லை. நான் குற்றஞ்சாட்டுகிறேன் உங்களை. நீதிபதி பாலுக்கு முன்னால் அதிகாரி அர்ச்சுனன், நேர்மையானவர் என்று சாட்சி சொல்லி முடித்த பிறகு அந்த அர்ச்சுனனை சென்னையிலே ஒரு அமைச்சர் வீட்டிலே உட்கார வைத்து மறுபடியும் சில புகார் கடிதங்களை அவரிடத்திலே எழுதி வாங்கி அந்தப் புகார்க் கடிதங்களை இன்றைக்குப் பயன் படுத்துகிறீர்கள். இல்லையா? என்று சட்டமன்றத்திலே கேட்டேன். யார் பதில் சொன்னார்கள்?

## பயணம் வெற்றி பெற நீங்கள் பக்கபலமாக இருங்கள்!

எனவே தெளிவாகத் திட்டவட்டமாக ஒரு பயங்கரப் படுகொலை நடைபெற்றது மாத்திரமல்ல; ஒரு நீதிபதியால் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. யார் யார் கொலையாளிகள் குற்றவாளிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றவாளிகளைப் பிடிக்கமாட்டேன். அறங்காவலர் குழு ராஜினாமா செய்துவிட்டது! அவர்களெல்லாம் காப்பாற்றப் படுவார்கள் என்று எம். ஜி. ஆர். சூசகமாகத் தெரிவிப் பாரேயானால் இது எங்கு போய் நிற்கும்?

ஒரு அதிகாரிக்கு அல்லது ஒரு அரசாங்க அதிகாரிக்கு இந்தக் கதி என்றால், அந்தக் குடும்பத்திற்கு இந்தக்கதி என்றால் சாதாரணமான — சாமான்யமான மக்களுக்கு எப்படி நீதி கிடைக்க முடியும்?

எனவேதான் இது சுப்ரமணியபிள்ளை வீட்டுக்கு மாத்திரம் நீதி கேட்டு அல்ல. தமிழகத்திற்கே—தமிழ் நாட்டிலே இருக்கின்ற ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நீதி கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக்கழகம் இந்த நீதி கேட்கின்ற நெடிய பயணத்தைத் தொடங்கி உங்களுடைய அன்பான ஆதர

வால் தொடர்ந்து நடத்திக்கொண் டிருக்கின்றது. அந்தப் பயணம் வெற்றி பெற நீங்கள் பக்க பலமாக இருந்திட வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

**—தூத்துக்குடியில் கலைஞர் உரை** 20—2—82

# திசை திருப்பாதீர்! நீதியைத் திகைக்கவிடாதீர்!

பேரூர் என்று சொல்லத்தக்க ஆத்தூரில் ஏறத்தாழ லட்சம் பேர் கலந்து கொள்ளக்கூடிய ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினை நாங்களெல்லாம் பெற்றிருக்கின்றோம் என்றாலும் என்னைப் பொறுத்த வரையிலே நீண்ட நேரம் உங்கள் முன்னால் கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பினை பெறாதவனாக இருக்கிறேன் என்பதை எனக்கு முன் பேசிய அனைவரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

நீதி ஏன் கேட்கிறோம்? எதற்காகக் கேட்கிறோம்? நாட்டில் என்ன நடந்துவிட்டது? இவைகளைப் பற்றி நம்முடைய பேராசிரியர் அவர்களும், முன்னாலே பேசிய நம்முடைய கழகத்து முன்னோடிகளும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

தன்னால் தாக்குப் பிடிக்க முடியாத எந்தவொரு பிரச்சினை தமிழகத்து முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு ஏற்பட்டாலும் அவர் உடனடியாக மக்களுடைய கவனத்தை வேறு திசையிலே திருப்புவதற்கு பெரும் முயற்சி எடுத்துக்கொள்வார். அதே வாடிக்கையான அவருடைய வழக்கம் இந்த நெடிய பயணத்தை திசை திருப்புகின்ற அளவிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் நாளேடுகளில் காணுகின்றீர்கள்.

பொதுவாகவே சமீப காலமாக நம்முடைய தமிழ்நாட்டு ஏடுகளில் 'கொலை முயற்சி' 'கொலை முயற்சி' என்கின்ற செய்திகளே ஏராளமாகக் காணப்படுகின்றன.

ஒரு அரசியல் இயக்கம் இன்னொரு அரசியல் இயக்கத்தினுடைய தலைவரையோ அல்லது தளபதிகளையோ மரணப் படுகுழிக்கு அனுப்பி விட்டுத்தான் வளர வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கக் கூடாது.

ஆனல் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட உணர்வுகளைத் தூண்டி விடுகின்ற நிகழ்ச்சிகள் அல்லது செய்திகள் நாள்தோறும் பத்திரிகைகளிலே வெளிவந்து மக்களும் அதைப் படித்துப் பார்த்து பரபரப்பு அடைகின்ற நிலைமை இருந்து வருகின்றது.

## வன் முறைச் செயலைக் கண்டிக்கிறேம்!

இந்தச் சுற்றுப்பயணத்திலே ஈடுபட்டிருக்கின்ற என்னைக் கூட கொல்வதற்காக ஒருவர் கத்தியோடு பாய்ந்தார் என்ற செய்தியும் நான் தங்கி இருந்த ஓட்டல் ஒன்றில் இரும்புத் தடியோடு ஒருவர் அலைந்து கொண்டிருந்தார் அல்லது ஒளிந்து கொண்டிருந்தார்; அவர் கைது செய்யப்பட்டிருக்கிறர் என்ற செய்தியும் நம்முடைய நெடிய பயணத்திலே ஈடுபட்டுள்ள கழகச் செயல் வீரர்களும், வீராங்கனைகளும், மாணவர்களும், இளைஞர்களும், பாட்டாளிகளும் நடந்து வருகிற பாதையிலே துலுக்கப்பட்டிக்கு அருகாமையில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகள் நெடிய பயணத்திலே ஈடுபட்டிருந்த நாங்கள் அங்கே வந்து சேர்வதற்கு முன்பே வெடித்து, அப்படி வெடித்த காரணத்தால் ஒரு பெண்மணி காயமுற்றுர் என்ற செய்தியும் பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கிறதே தவிர, அது குறித்து இதுவரையில் நான் எந்த அறிக்கையும் வெளியிடவில்லை. ஏனென்றுல் எதற்காக அந்த காரியங்கள் நடைபெற்றன; உள்ளபடியே என்னைத் தாக்குவவதற்கு அல்லது என்னைச் சார்ந்தவர்களை — தி. மு. க. தொண்டர்களைத் தாக்குவதற்கு இந்தக் காரியங்கள் நடைபெற்றதா என்பதைப் போலீசார் ஆராய்ந்து அறிவிக்கும் வரையிலே பொறுத்திருக்கலாம் என்பதற்காகத்தான் கடந்த இரண்டு மூன்று நாட்களாக இந்தச் செய்திகள் ஏடுகளிலே வந்த போதும்கூட—நம்முடைய சட்டமன்றத்திலே கூட கழகச் சார்பிலே அது குறித்து கேட்கப்பட்டு அவை முன்னவர் நாவலர் அவர்களும், மற்றவர்களும் அது குறித்து நாங்கள் இன்னும் விசாரித்துக் கொண்டிருக்கிறேம் என்று தெரிவித்ததாக செய்திகள் வெளிவந்தாலும் இந்த ஏழு நாட்களாக நான் பேசுகின்ற எந்தப் பொதுக்கூட்டத்திலும் அதைப்பற்றி குறிப்பிடவும் இல்லை.

நம்முடைய நண்பர்கள் பல பேர் பேசிய நேரத்திலும், இந்தச் செய்திகளைப் பற்றிக் குறிப்பிடவேயில்லை.

ஆனல் தமிழக முதல்வர் அவர்கள் தனக்கு சங்கடம் வருகிற நேரத்திலெல்லாம் தன்னைக் கொல்ல முயற்சி என்கிற ஒரு பரபரப்பான செய்தியை நாட்டு மக்களிடத்திலே பரவவிடுவது வாடிக்கை.

இப்போது அப்படிப்பட்ட ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. உண்மையிலேயே அப்படி ஒரு சம்பவம் நடந்திருக்குமேயானல் அதற்காக ஒருவன் தயாரிக்கப்பட்டிருப்பானேயானல்— தி. மு. க. சார்பாக அந்த வன்முறைச் செயலை அழுத்தந்திருத்தமாக நாங்கள் கண்டிக்கிறோம்.

அத்தகைய செயல்கள் அரசியலுக்கு ஒவ்வாதவை. பேரறிஞர் அண்ணு அவர்கள் காட்டிய நெறியும், வழியும் அது அல்ல என்ற காரணத்தினல் ஒருவரையொருவர் கருத்துக்கள் மூலம் சந்திக்கவேண்டுமேயல்லாமல் — கொள்கைகள் மூலம் சந்திக்க வேண்டுமேயல்லாமல் — அவரவர்களுக்குரிய இயக்கங்களின் இலட்சியங்கள் மூலம் சந்திக்கவேண்டுமேயல்லாமல்— கத்தியால், கட்டாரியால், அல்லது துப்பாக்கியால் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது என்பது ஒரு ஜனநாயக நாட்டில் அரசியலில் நாகரீகமாக—நல்ல பண்போடு நடக்க வேண்டும் என்கிற பண்பை நமக்கெல்லாம் போதித்த அறிஞர் அண்ணு அவர்கள் பிறந்த தமிழகத்தில் தி. மு. கழகம் நிச்சயமாக அனுமதிக்கவே அனுமதிக்காது.

நான் மீண்டும் சொல்கிறேன். எம். ஜி. ஆர். அவர்களைக் கொல்வதற்கான ஒரு முயற்சி நடைபெற்றிருக்குமேயானல் அதை வன்மையாக, அழுத்தம் திருத்தமாக நான் கண்டிக்கிறேன்—தி.மு. கழகத்தின் சார்பில்.

## 'தினத்தந்தி'யில் வந்த செய்தி

எம். ஜி. ஆர். ஜனவரி திங்கள் 25-ஆம் நாள் நெய்வேலியிலே இந்தி எதிர்ப்பு தியாகிகளுடைய நினைவுநாள் பொதுக் கூட்டத்திலே பேசினர். பேசுகிறபோது ஒன்றைச் சொன்னர் அவர் சொன்னது தினத்தந்தி பத்திரிகையிலே வெளியாகி இருக்கிறது. அவர் 25-ம் தேதி பேசினர். 27-1-82 நெல்லை—சென்னை—மதுரை அல்லது கோவை தினத்தந்தியிலும் இந்த செய்தி வெளியாகி இருக்கிறது.

"எம் ஜி ஆரை கொல்ல சதி—ஆசாமி கைது."

நெய்வேலி, ஜன. 27—

முதலமைச்சர் எம். ஜி. ஆரைக் கொல்ல சதி நடந்தது. இதனையொட்டி ஒரு ஆள் கைது செய்யப் பட்டுள்ளார். இத் தகவலை முதலமைச்சர் எம்.ஜி. ஆரே நெய்வேலியில் நடந்தபொதுக் கூட்டத்தில் வெளியிட் டார்."

இதுதான் செய்தி.

கைது செய்யப்பட்டதாக வந்த செய்தி ஜனவரி 25. வெளியிட்டவர் போலீஸ் கான்ஸ்டபிள் அல்ல. போலீஸ் அமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன். போலீஸ் அமைச்சர் மாத்திரமல்ல. போலீஸ் இலாகா ஒருவேளை வேறு ஒரு அமைச்சரிடத்திலே இருந்தாலும் அந்த அமைச்சருக்கும் தலைமை வகிக்கக் கூடிய முதலமைச்சர்—முதலமைச்சரே வெளியிடுகிறார்.

அது பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஜனவரி 25-ஆம் தேதி சொல்கிறார் என்னைக் கொல்வதற்கு ஒரு சதி நடை பெறுகிறது. அதையொட்டி ஒரு ஆள் கைது செய்யப்பட் ருக்கிறார் என்று. இது எம். ஜி. ஆர். அவர்கள் நெய்வேலியில் நடைபெற்ற தியாகிகள் தினப் பொதுக் கூட்டத்திலே சென்ற மாதம் 25-ம் நாள் வெளியிட்ட தகவல்.

## நெய்வேலியில் எம். ஜி. ஆர். அவிழ்த்து விட்ட செய்தி!

தியாகிகள் நாள் பொதுக் கூட்டம் இந்தியை எதிர்த்து எட்டுப்பேர் தீக்குளித்துச் செத்தார்களே அவர்களை நினைவு கூர,அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே மாணவ இளந்தளிர் இராசேந்திரன் துப்பாக்கிக் குண்டுகளை ரோஜாமலர்களாக தன்னுடைய மார்பிலே ஏந்திக் கொண்டாரே அந்த வீரத் தைப்பற்றி நினைவு கூர்கின்ற பொதுக்கூட்டத்தில் 1938-ம் ஆண்டு தமிழ்காக்க, இந்தியை விரட்டி அடிக்க, இந்தி ஆதிக்கத்தை நுழைய விடாமல் தடுக்க, நடைபெற்ற போராட்டத்தில் தாளமுத்து—நடராசன் என்ற இரு தியாகச் செம்மல்கள் சென்னைச் சிறைச்சாலையிலே மாண்டு மடிந்து போனார்களே அதை நினைவுகூர—நடைபெற்ற கூட்டத்தில்— எம். ஜி. ஆர். இதைச் சொன்னார்.

தி.மு. கழகத்தின் சார்பிலும் அந்த நாள் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது; அ. தி. மு. க. சார்பிலும் கொண் டாடப்பட்டது. நெய்வேலியில் பேசிய எம். ஜி. ஆர் அவர் கள் தீக்குளித்து இறந்த 8 பேரைப் பற்றி கவலைப்படவில்லை!

தாளமுத்து—நடராசன் யார் என்று கேட்டால் நாவலரை கேட்டுத்தான் அவர் சொல்ல வேண்டும்! இது அத்தனையும் விட்டுவிட்டு எம். ஜி. ஆர். தன்னைப் பற்றியே ஒன்றரை மணிநேரம் இரண்டு மணி நேரம் சுய புராணம் பாடினார். அந்த சுய புராணம் பாடிய கூட்டத்திலேதான் இந்தச் செய்தியையும் சொல்கிறார்.

சனவரி 25 மறந்து விடாதீர்கள் என்னைக் கொல்லுகின்ற ஒரு சதியிலே ஈடுபடுத்தப்பட்டிருந்த ஒரு ஆள் கைது செய்யப்பட்டு இருக்கிறான். விரைவில் வழக்குத் தொடருவோம். பிற விபரங்கள் அடுத்தடுத்து வெளிவரும் என்று. சனவரி 25-ம் தேதி எம். ஜி. ஆர். சட்டமன்றத்திலே அல்ல, மக்கள் மன்றத்திலே, நெய்வேலியில் பயங்கரமான பரபரப்பான இந்தச் செய்தியைச் சொல்லுகிறார்.

25-ம் தேதி செய்தி சொல்கிறார் என்றால் முதல் நாளோ அல்லது அன்றோ அல்லது அதற்கு ஒரு வாரத்திற்கு முன்போ அந்த ஆள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். நாளைக்கு பிப்ரவரி 22, ஏறத்தாழ ஒரு மாத காலமாகிறது. நேற்றைய தினம் செய்தி வருகிறது. எம். ஜி. ஆரை கொல்லுகின்ற சதிக்கு பயன்படுத்தப்பட்ட மணி என்கின்ற மணிகுண்டு என்ற பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஆள் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று நேற்றைக்கு போலீசார் செய்தி தருகிறார்கள்.

நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு மாதத்திற்கு முன்பே அந்த ஆள் கைது செய்யப்பட்டுவிட்டான். ஆனால் நேற்றுத்தான் கைது செய்யப்பட்டான் என்று போலீசார் சொல்கிறார்கள். முதலமைச்சர் சொல்லி ஒரு மாதம் கழித்து நேற்றைய தினம் மணி என்கின்ற மணிகுண்டு என்கின்ற பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஆள் கைது செய்யப்பட்டிருக்கின்றார். மேற்கொண்டு புலன் விசாரணை செய்துகொண்டு இருக்கிறோம் என்று போலீசார் சொல்கிறார்கள்.

## மணியைச் சித்திரவதை செய்திருப்பார்களே!

நான் கேட்கிறேன்—எம். ஜி. ஆரைக் கேட்கிறேன்—அவரது தலைமையில் இயங்கக்கூடிய போலீஸ் இலாகாவின் பிரதான அதிகாரிகளைக் கேட்கிறேன். முதலமைச்சர் கூற்றுப்படி ஒரு மாத காலத்திற்கு முன்பே ஒருவர் கைது செய்யப்பட்டு அதைப் போலீசார் அதிகாரப் பூர்வமாக வெளியிடாமல் இருந்த காரணம் என்ன? அப்படிக் கைது செய்யப்

பட்டவருடைய பெயரையும் சொல்லாமல் ஒரு மாதம் வரையில் லாக்கப்பிலோ அல்லது போலீசாருடைய பொறுப்பிலோ வைத்திருந்து இப்படி எழுதிக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி போலீஸ் ஸ்டேசனில் வைத்திருந்தால் சில போலீஸ் ஸ்டேசனில் வழக்கமாக என்ன செய்வார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எப்படியாவது ஒருவரை அப்ரூவராக ஆக்க அவர்கள் அவரை என்னென்ன சித்திர வதைகள் செய்து தாங்கள் சொல்கிறபடி எழுதிக் கொடுக்கச் சொல்வார்கள் என்பதும், அப்படி எழுதிக் கொடுக்காதவர்கள் சித்திரவதைக்கு ஆளாகி லாக்கப்பிலே மரணமடைந்து அது மாரடைப்பால் மரணம் என்று சொல்லிப் படுவதும் நீங்கள் அறிவீர்கள்.

போலீஸ் இலாகாவிலே எல்லோரும் அல்ல—சில பேர். இப்படிப்பட்ட அக்கிரமச் செயல்களில் இந்த ஒரு மாத காலத்திற்குள் அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறீர்களா? முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனை கொல்ல முயன்றவர் என்று இப்போது ஒருவரைக் கைது செய்திருக்கிறார்கள் என்றால் இடையில் இந்த ஒரு மாத காலத்தில் நடந்த சம்பவங்கள் என்ன என்பதை அறிய நாடு துடியாத் துடித்துக் கொண்டிருக்கிறது.

கைது செய்யப்பட்டவர் இப்படி ஒரு வன்முறைச் சம்பவத்திலே ஈடுபடுத்தப்பட்டிருப்பாரானால் அவருடைய செயலை அனுமதிக்க திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இல்லை. எம். ஜி. ஆரைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டிலோ அல்லது கடந்த ஆண்டுக்கு முந்திய ஆண்டிலோ நெல்லை மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்ய புகைவண்டியிலே வந்தபோது, மணியாச்சி ரயில் நிலையத்தில் ஒருவன் கத்தியை வீச, அது ரயில் பெட்டியிலே பட்டு எம். ஜி. ஆர். தப்பித்துக் கொண்டார் என்ற செய்தி பத்திரிகைகளில் வர நான் அந்தச் சம்பவத்தை கண்டித்து எம். ஜி. ஆர். தப்பித்துக் கொண்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்து சென்னையிலேயிருந்து ஒரு அறிக்கை தந்தேன். நிருபர்கள் மாலையிலே அவரைப் பார்த்து எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி வன்முறைச் சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை விட்டிருக்கிறாரே பார்த்தீர்களா? என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு எம். ஜி. ஆர். கருணாநிதிக்கு நான் இன்னும் சாகவில்லையே என்கின்ற கவலை என்று பதிலளித்தார். அப்படிப்பட்ட நாகரீகம் படைத்த அற்புதமான அறிஞர் தமிழகத்து

முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் இப்போது சட்ட மன்ற மேலவைக் கூட்டத்திலே பேசுகிற நேரத்திலே ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்.

## 'எதிரொலி'யில் வராததை வந்தது என்று சொல்கிறார்!

நண்பர் வீராசாமி அவர்களுடைய நிர்வாகத்திலே இருக்கின்ற 'எதிரொலி' பத்திரிகையிலே 'கருணாநிதியைக் கொல்ல எம். ஜி. ஆர் சதி' என்று செய்தி வந்தது என்று முதலமைச்சர் எம். ஜி. ஆர் சட்ட மன்ற மேலவையிலே பேசியிருக்கிறார். அப்படியொரு செய்தியே எதிரொலியில் வரவில்லை. அப்படி செய்தியே வராமல் இருக்கும்போது கருணாநிதியைக் கொல்ல எம். ஜி. ஆர் சதி என்று வீராசாமியினுடைய எதிரொலி பத்திரிகை செய்தி வெளியிடுகிறதே. இப்படிப்பட்ட பத்திரிகைகளெல்லாம் நாட்டிலே வெளி வரலாமா? என்று எம். ஜி. ஆர். மேலவையிலே கேட்டிருக்கிறார். அவ்வாறு கேட்டுவிட்டு எம். ஜி. ஆர். 'எனக்கும், கருணாநிதிக்கும் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். இந்த எம் ஜி. ஆரா கருணாநிதியை கொல்கிற அளவிற்கு சதி செய்வான்' என்று மிகுந்த ஆதங்கத்தோடு பேசியிருப்பதைப் பத்திரிகைகளிலே படித்துப் பார்த்தேன். நண்பர்களும் சொன்னார்கள்.

இதே எம். ஜி. ஆர். தான் நெல்லையிலே பொதுக் கூட்டத்திலே பேசும்போது சொன்னார்— "அடையாறு மருத்துவமனையிலே இருந்த அண்ணாவைக் கொலை செய்ய முயற்சித்தான் கருணாநிதி!" என்று சொன்னார். எம். ஜி. ஆருக்கு கருணாநிதியை கொலை செய்கிற அளவிற்கு பகை உணர்வுகள் கிடையாதாம்; ஆனால் என்னை அரசியலில் ஆளாக்கி விழிகளை திறந்துவிட்டு தம்பி தம்பி என்று தழுதழுத்த குரலில் அழைத்து அரவணைத்து, இந்த நாட்டைப் பாழாக்குகின்ற மூட நம்பிக்கைகளையெல்லாம் அகற்றுகின்ற ஆற்றலையும் — சீர் செய்திடும் மனப்பாங்கையும், தனது இனிய தமிழால் எனக்கும், பேராசிரியரைப் போன்றவர்களுக்கும் உருவாக்கித் தந்தவர் அண்ணா. அந்த அண்ணாவை — ஒரே இலையிலே உண்பது என்பார்களே, ஒப்புக்காகச் சொல்லவில்லை. உண்மையிலே ஒரே இலையிலே உண்டு வளர்ந்தோமே அந்த அண்ணாவை — ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்றால் 20 மணி நேரம் அண்ணனுடனேயே இருந்து வளர்ந்தோமே அந்த அண்ணணை—அடையாறு மருத்துவமனையில் இன்னொரு துளை

போட்டால்தான் மூச்சுவிட முடியும் என்று டாக்டர்கள் சொன்னபோது உடனே என்னை அழைத்து — டாக்டர்கள் இப்படிச் சொல்கிறார்களே என்று கேட்டு, டாக்டர்கள் சொல்கிறபடி செய்து கொள்ளுங்கள் அண்ணா என்று நான் சொல்ல "சரி அப்படியானால் நீ சொன்னால் செய்து கொள்கிறேன்" என்று சொன்ன அண்ணனை நான் கொலை செய்ய முயற்சித்தேனாம். தாயாகவும் தந்தையாகவும் இருந்து எங்களை வளர்த்து ஆளாக்கிய அண்ணனை — எங்கள் ஊனோடும் உயிர் மூச்சோடும் கலந்துவிட்ட அண்ணனை நான் கொலை செய்ய முயற்சித்தேனாம். இப்படி நெல்லையிலே பேசினார் எம். ஜி. ஆர்.

அடுத்த நாள் அண்ணன் பிறந்த ஊரான காஞ்சியில் பொதுக்கூட்டத்தில் பேசினேன் — "இப்படி நெல்லையிலே பேசிய எம். ஜி. ஆர் வருத்தம் தெரிவிக்காவிட்டால் வழக்குத் தொடருவேன்" என்று அறிவித்தேன். உடனே எம். ஜி. ஆர். நான் அப்படிப் பேசவே இல்லை; எல்லாப் பத்திரிகைகளும் தவறாகப் போட்டுவிட்டன என்று அறிவித்தார். அவர் பேசிய பேச்சு டேப் செய்யப்பட்டு இருந்தது. அதை வரவழைத்துப் போட்டுப் பார்த்தேன். அப்படித் தான் அவர் பேசியிருந்தார்.

இதுபற்றி பேராசிரியரிடம் சொன்ன பொழுது "அவர் கிடக்கிறார் விடுங்கள். நம்மை விடவா இந்த ஆள் அண்ணாவைத் தெரிந்தவர்; அறிந்தவர்? இவர் இப்படிச் சொல்வதை மக்கள் நம்ப மாட்டார்கள், விடுங்கள்" என்று கூறினார்.

எம். ஜி. ஆர். இப்படிப் பேசிய காரணம் கிராம அதிகாரிகள் பிரச்சினை தீயாகப் பரவிக் கொண்டு இருந்தது. 24 ஆயிரம் பேரை வீட்டிற்கு அனுப்பிய விவகாரம். அந்தப் பிரச்சினையை திசைதிருப்பவே எம். ஜி. ஆர். அப்படிப் பேசினார்.

## மதுரைக்குப் புறப்படுமுன் எம். ஜி. ஆர். என்னோடு தொலைபேசியில் பேசியதென்ன?

அதேபோல் இப்போதும் தன்னைக் கொல்லச் சதி என்று எம். ஜி. ஆர். பேசி இருக்கிறார். அப்படிச் சதி நடந்திருந்தால் தி. மு. க. சார்பில் நான் வன்மையாக கண்டிக்கத் தயாராக இருக்கிறேன். இவர் உத்தமராம். யாரையும் பழி வாங்கமாட்டாராம். நான் இந்தப் பிரச்சினையை இது

வரை சொல்லவில்லை. இந்தப் பயணம் நாளை நிறைவு பெற இருக்கிறது. இப்போது சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அதனால் சொல்கிறேன்.

பிப்ரவரி 13—ந் தேதி சட்டமன்றம் முடிந்து 14—ந் தேதி மதுரையிலே பேராசிரியர் தலைமையிலே நடைபெறுகின்ற வழியனுப்பு விழாக் கூட்டத்திற்கு செல்லச் சென்னையில் என்னுடைய வீட்டிலிருந்து தயாராகிக் கொண்டிருக்கிறேன். மாலை ஆறு மணியளவில் எனக்கு ஒரு தொலைபேசி வருகிறது. முதலமைச்சர் பேச வேண்டுமென விரும்பு கிறார் என்று.

பிறகு முதலமைச்சர் என்னோடு தொலைபேசியில் பேசினார்.

நான் "என்ன?" என்று கேட்டேன்.

"இந்த நெடிய பயணம் போய்த்தான் தீர வேண்டுமா?" என்று கேட்டார்.

"எடுத்த முடிவை நிறைவேற்றத்தானே வேண்டும்" என்று நான் சொன்னேன்.

"காலையிலே நீங்களெல்லாம் சட்டமன்றத்திலே வெளி நடப்புச் செய்த பிறகு நான் ஒரு அறிவிப்புச் செய்தேனே? உங்களுக்குத் தெரியாதா?" என்றார்.

"என்ன அறிவிப்பு?" என்று கேட்டேன்.

"அறங்காவலர் குழுவினர் ராஜினுமா செய்து விட்டார் கள்" என்று சொன்னார்.

நான் சொன்னேன் — "ராஜினுமா என்பது மட்டுமே எங்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. நான் ஒரு மறுப்பு அறிக்கை வெளியிட்டிருக்கிறேன். பார்க்கவில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை" என்று சொன்னார்.

பிறகு "என்னதான் செய்யலாம்!" என்று கேட்டார்.

"பால் கமிஷனல் யார் யார் குற்றம் சாட்டப்பட்டிருக் கிறார்களோ அவர்களைக் கைது செய்து குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டும்" என்று சொன்னேன், அதற்குச் "சான்று இல்லையே". என்று சொன்னார்.

"பால் கமிஷன் அறிக்கை வெளியிட்டது சம்பந்தமாக எனது நேர்முக உதவியாளர் சண்முகநாதனை கைது செய் தீர்களே! அதற்கு என்ன சான்று?" என்று கேட்டேன். ஒரே மவுனம். அந்த முனையிலே பதிலும் இல்லை. ஒரே நிசப்தம்!

"அரசு அதிகாரி சதாசிவத்தையும் என்னுடைய மருமகன் செல்வத்தையும் கைது செய்தீர்களே, எந்தச் சான்றின் அடிப்படையில் கைது செய்து விட்டீர்கள். இன்னும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. இந்திரா அம்மையாரைக் கொலை செய்ய முயன்றதாக என் மீதும் பேராசிரியர் மீதும் சாதிக்பாட்சா மீதும் வழக்குத் தொடர்ந்து நாங்கள் இன்னும் நீதி மன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறோமே? எந்த அடிப்படையில் எங்கள் மீது வழக்குத் தொடர்ந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"அந்தச் சமயத்தில் நான் கும்பகோணத்தில் இருந்தேன். இருந்தாலும் சாட்சியங்கள் இருப்பதாகச் சொன்னார்கள்" என்று எம். ஜி. ஆர். பதிலளித்தார்.

## பழி வாங்காதவராம்—பசப்புகிறார் எம். ஜி. ஆர்.

ஏதோ வழக்கு வாபஸ் வாங்கவேண்டும் என்பது எங்களுடைய கவலை அல்ல. நடக்கட்டும் வழக்கு. ஆனால் பழி வாங்காத உத்தமராயிற்றே. பழி வாங்காத, பழி வாங்குகிற எண்ணமில்லாத எம். ஜி. ஆர். தான் என்னையும், பேராசிரியரையும், பொருளாளர் சாதிக்கையும், ஆற்காடு வீராசாமியையும், கொள்கை பரப்புச் செயலாளர் கந்தப்பனையும், நெல்லை, மதுரை, கிழக்கு, மேற்கு முகவை, கோவை, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களிலிருந்து ஏறத்தாழ 135 அல்லது 140 பேரை குற்றவாளிகளாக ஆக்கி கொலை முயற்சியில் ஈடுபட்டோம் என்று 302, 307, 120—பி ஆகிய சட்டப் பிரிவுகளையெல்லாம் எங்கள் மீது போட்டிருக்கிறாரே; எம். ஜி. ஆருடைய எண்ணம் ஈடேறுமானால், நான் தூக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டும். பேராசிரியர் தூக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டும். யார் யார் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்களோ அவர்களெல்லாம் தூக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டும். எம். ஜி. ஆருக்கு எவ்வளவு ஆசை பார்த்தீர்களா? கருணாநிதியும், கழகத்தில் உள்ள தலைவர்களும் தூக்குமேடைக்குச் செல்லவேண்டும். அல்லது குறைந்த பட்சம் ஆயுள் தண்டனையாவது பெற வேண்டும் என்பதால் அல்லவா எங்கள் மீது 302, 307 பிரிவுகளின் கீழ் வழக்கு போட்டிருக்கிறார்.

இவர் பழி வாங்காதவராம்—பசப்புகிறார். பாமர மக்கள் இன்னும் பட்டிக்காட்டில் இருக்கிறார்கள்; படம் பார்த்துச் சாகிறார்கள் என்ற ஒரே ஒரு நம்பிக்கையின்

காரணமாகத்தான் எம். ஜி. ஆரினல் இந்த நாட்டிலே ஒரு ஆட்சியை நடத்த முடிகிறது. ஒரு கட்சியை நடத்த முடிகிறது. அந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் தன்னுடைய பளபளப்பையும் பழைய படங்களையும் காட்டிப் படு பயங்கரமான கொலைகளையெல்லாம் மறைத்துவிட முடியும் என்று எம். ஜி. ஆர். கருதுகிறார்.

## வெங்கடாசலம் கொலை!

ஒரு நாட்டிலே கொலை நடைபெறுவதும், நடைபெற்ற கொலைகளின் உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியாமல் போவதும் இயற்கை. காமராசருடைய ஆட்சியிலேகூடச் சில கொலைகள் கண்டுபிடிக்க முடியாமற் போயிருக்கலாம். பேரறிஞர் அண்ணா ஆட்சியிலே, பெரியவர் பக்தவத்சலம் ஆட்சியிலே, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் ஆட்சியிலே, ஏன்— என்னுடைய தலைமையிலே நடைபெற்ற ஆட்சியிலே கூட ஒன்றிரண்டு கொலைகள் கண்டுபிடிக்கப்படாமல் தடயங்களே இல்லாமல்கூட போயிருக்கலாம். ஆனல் அதைப்போல் எம். ஜி. ஆர். ஆட்சியிலே இந்த நான்காண்டு காலத்திலே ஒரு சில கொலைகள் தடயங்கள் இல்லாமல் கண்டுபிடிக்கப் படாமல் போய்இருக்கலாம். தஞ்சாவூரிலே வெங்கடாசலம் என்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர். அவரை ஐந்தாண்டு காலமாகக் காணவில்லை. 'கொலை செய்யப் பட்டார் என்பது தான்மார்க்சிஸ்ட் கட்சியினருடையவாதம். கொலை செய்யப்பட்டார் என்பதுதான் தஞ்சை வட்டாரத் திலே உள்ள அத்தனை பேரும் நம்புகின்ற செய்தி. அந்த வெங்கடாசலத்தை யார் கொலை செய்தார்கள் என்று இந்த நான்காண்டு கால எம். ஜி. ஆர். ஆட்சியிலே கண்டுபிடிக்க வில்லை.

## பிரேமா கொலை!

சென்னையிலே இந்திரா நகரிலே பிரேமா என்ற பெண் மணி கொலை செய்யப்பட்டாள். இதுவரையிலே அந்தக் குற்றவாளிகள் யாரும் கைது செய்யப்படவில்லை. அ.தி.மு.க. வைச் சேர்ந்த புட்டூர் தண்டபாணி என்ற காண்ட்ராக்டர் அ.தி.மு.க. வினராலேயே கொலை செய்யப்பட்டார். அதற் கான ஆதாரங்களை இறந்து போனவருடைய கடிதங்களை யெல்லாம்கூடச் சட்ட மன்றத்திலே எம். ஜி. ஆருக்கு நேராகப் படித்து அவரிடத்திலே கொடுத்தேன்.

எம். ஜி. ஆர். என்ன செய்தார் தெரியுமா? இந்தக் கடிதங்கள் எப்படி கருணாநிதிக்கு வந்தது? என்று ஆராய்ந்

தாரே தவிர, அப்படி ஆராய்ந்து ஒரு வேளை பூவிருந்தவல்லி ராஜரத்தினம் தி. மு. க. எம். எல். ஏ. கொடுத்திருக்கக்கூடும் என்று அவர் வீடு சோதனை போடப்பட்டது. எதிர்கட்சித் தலைவரை எடுத்து வைத்த பிறகும் ஆதாரங்களைத் தந்த பிறகும் போலீசார் முனைந்து புலன் விசாரணை செய்யவில்லை. அந்தக் கொலை கண்டுபிடிக்கப்படாமலேயே போய் விட்டது.

கழகத்தைச் சேர்ந்த இளம்பாலகன் இளஞ்செழியன் திருவல்லிப்புத்தூர் கூட்டத்திற்குச் சென்று திரும்புகிற வழியிலே கொலை செய்யப்பட்டான்! எந்தக் குற்றவாளியும் இதுவரையிலே கூண்டிலே ஏற்றப்படவில்லை.

ஆனால் இந்தக் கொலை இப்படி கண்டுபிடிக்கப்படாமல் போய்விட்ட கொலைகளைப் போன்ற ஒரு நிகழ்ச்சியல்ல. திருச்செந்தூர் தமிழகத்தில் இருக்கின்ற கோடிக்கணக்கான மக்கள் நம்பிக் கொண்டிருக்கின்ற முருகனுடைய ஆலயம் இருக்கின்ற ஊர். அந்த ஆலயத்தில் இலட்சக்கணக்கான ரூபாய் நகைநட்டுகள் வந்து சேருகின்ற உண்டியல்—இவைகளை எண்ண ஒரு குழு. அதைச் சரிபார்க்க ஒரு அதிகாரி. சரிபார்ப்பதற்காக அதிகாரி வருகிறார். அங்கு இருக்கின்ற அறங்காவலர் குழுவினர், அதிகாரிவருவதற்கு முன்பே உண்டியலை உடைத்து லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகளையும் வேறு சில பொருள்களையும் கரன்சி நோட்டுக் களையும் களவாடி இங்கே பங்கிட்டுக்கொள்ள முடியாது என்று அவர்களுடைய தலைவர் சென்னையிலே இருக்கிறார் அமைச்சர் பதவியில். அங்கே சென்று பங்கிட்டுக் கொண்டு, உண்டியலை நான் வருவதற்கு முன்பு திறந்து விட்டீர்கள். நான் சரி பார்ப்பு அதிகாரி என்ற முறையில் இதைக் கண்டிக் கிறேன். நான் இந்த இடத்திலே இருக்கமாட்டேன். எனக்கு வேலை இல்லை என்று வெளியேறிய நேர்மையான அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையை அவர் தங்கி இருந்த இடத்திற்கு சென்று கொலை செய்த சண்டாளர்கள், கொடுமையாளர்கள் இன்றைக்கு எம். ஜி. ஆரால் காப்பாற்றப்படுகிறார்கள். நியாயம்தானா?

அதுவும் எதற்குப் பிறகு? அனைத்துக் கட்சிகளும் தி. மு. கழகம், இந்திரா காங்கிரஸ்—கம்யூனிஸ்ட் கட்சிகள், பார் வர்டு பிளாக்கட்சி, ஜனதாக்கட்சி, முஸ்லிம் லீக் இப்படி பல்வேறு கட்சிகள் எடுத்துச் சொல்லி அதற்குப் பிறகு எம். ஜி. ஆரே நியமித்த நீதிபதி பால் இது தற்கொலை அல்ல. சுப்பிரமணியபிள்ளை உண்டியலைத் திருடவே இல்லை; திருடியவர்கள் எனக்குத் தெரிந்தவரையில் இந்த அறங்கா

வலர் குழுவில் உள்ளவர்களாகத்தான் இருக்கவேண்டும் அதற்கு அதிகாரிகள் உடந்தை. அந்த வட்டாரத்துப் போலீஸ் உடந்தை. அவர்கள் பல ஆவணங்களைத் திருத்தி இருக்கிறார்கள். அந்த வட்டாரத்திலே ரெவின்யூ அதிகாரிகள் உடந்தை அவர்கள் பல சான்றுகளை ஆவணங்களைத் திருத்தி இருக்கிறார்கள். அங்கிருந்த மருத்துவர்கள் உடந்தை, பிரேத விசாரணை செய்தவர்கள்கூட உடந்தை என்று அந்த அளவிற்குத் தெளிவாக திட்டவட்டமாக ஒரு அறிக்கையை எழுதி எம். ஜி. ஆரிடத்திலே செப்டம்பர் 18-ம் தேதி கொடுத்துவிட்டு நீதிபதி பால் 19-ம் தேதி அமெரிக்காவிற்கு போய்விட்டார். இந்த உண்மையை வெளியிட்ட பிறகு இந்தியாவிலே இருக்கலாமா கூடாதா என்ற சந்தேகத்தின் காரணமாகப் போய்விட்டார்.

சாட்சிகள் யார்? எம். ஜி. ஆர். கேட்கிறார். சாட்சிகளே இல்லை என்று எம். ஜி. ஆர். சொல்கிறார்.

பால் கமிஷன் அறிக்கையில் 16-ம் பக்கத்தில் நீதிபதி பால் என்ன சொல்கிறார். "உறுதிமொழிப் பத்திரங்களை அளித்தவர்கள்—கோவில் அறங்காவலர் குழு இன்னும் இருப்பதாலும், உறுதிமொழிப் பத்திரங்களை அளித்தவர்களில் இருவர் இன்னும் கோவிலில் பணியாற்றி வருவதாலும், இதைத் தவிர டாக்டர் பாலகிருஷ்ணன் உள்ளூரில் செல்வாக்கு மிக்கவராக இருப்பதாலும் கமிஷன் முன்பு வந்து சாட்சியம் அளிக்க பயந்தார்கள்." நீதிபதி பால் சொல்கிறார். "நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு நான் கடைசியாகச் சென்ற போது திரு. வேலுப்பிள்ளை, திரு. சங்கரலிங்கம், திரு. ஈஸ்வர அய்யா ஆகிய மூவரும் என் முன்னால் வந்து வாய்மொழியாக முறையிட்டார்கள். புகார் மனுக்களையும் அளித்தார்கள். அதில் அவர்கள் சில உண்மைகளைத் தெரிவித்து இருந்தார்கள். டாக்டர் பாலகிருஷ்ணன் தங்கள் உயிருக்கு ஊறு விளைவிப்பதாய் அச்சுறுத்தியதன் காரணமாகத் தங்களுடைய வீடுகளை விட்டுப் புறப்பட்டு திருநெல்வேலிக்கு வந்து கமிஷன் விசாரணையை நேராக நடத்தத் தயாராக இருப்பதாகக் கூறினேன். மேலும் அரசுக்கு எழுதி அவர்களுக்கு தேவையான காவலர் பாதுகாப்புஅளிக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறினேன். அப்போதும்கூட அவர்கள் கமிஷன் முன்னால் சாட்சியம் அளிக்க அஞ்சுவதாயும் மனுக்களிலே தாங்கள் குறிப்பிட்ட உண்மைகளை நம்பும்படியும் என்னைக் கேட்டார்கள்.

இவ்வாறு நீதிபதி பால் கூறுகிறார்.

இவ்வளவு பயத்திலே எவன் சாட்சி சொல்ல வருவான்?

நேரிலே கண்ட ஒரு சாட்சி ஆறுமுகம் என்ற ஒரு நகரசுத்தி தொழிலாளி—துப்புரவுத் தொழிலாளி. அவர் நேரிலே கண்ட சாட்சிகளிலே ஒருவர். அந்த சாட்சியின் கதி என்ன ஆயிற்று தெரியுமா!

சுப்பிரமணியபிள்ளை ஒருவர் கொலை செய்யப்பட்ட தோடு முடிந்துவிட்டது என்றுதானே கருதுகிறீர்கள். அல்ல. ஆறுமுகம் கொலை செய்யப்பட்டார்—சாட்சியும் கொலை செய்யப்பட்டார்; ஆறுமுகம் கொலை செய்யப் பட்ட செய்தியைக் கேள்விப்பட்ட பிறகு வேலுப்பிள்ளை, சங்கரலிங்கம், ஈஸ்வர அய்யா இவர்களெல்லாம் சாட்சி சொல்ல முன்வர முடியுமா?

நியாயமான நடுநிலையான புலன் விசாரணை நடைபெற வேண்டுமேயானால் எம். ஜி. ஆரே சி. பி. ஐ. விசாரணை வேண்டும் என்றல்லவா கேட்கவேண்டும்.

ஆகா போலீஸ் மீது நம்பிக்கை இல்லையா? என்று கே. டி. கோசல்ராம் அவர்களை கேட்கிறார். இந்த போலீஸ் மீது எம். ஜி. ஆருக்கே நம்பிக்கையில்லை. அவரே வெளி யிட்டு இருக்கிறார். போலீஸ் இலாகாவிற்கு சப்-இன்ஸ்பெக் டர்களை தேர்ந்தெடுக்கிற ஒரு பரீட்சை. அதிகாரிகள் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார் கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் ஒரு மாதம் ஆயிற்று; இரண்டு மாதம் ஆயிற்று வெளியிடவேயில்லை.

சப்—இன்ஸ்பெக்டர் செலக்ஷன் முடிந்து ரொம்ப நாளாயிற்றே. இன்னும் ஏன் அந்தப் பட்டியலை வெளியிட வில்லை என்று நிருபர்கள் கேட்டார்கள். எம். ஜி. ஆர். சொன்னார். அதிலே பல தவறுகள் நடந்திருக்கின்றன. எனவே நான் இனிமேல் சப்—இன்ஸ்பெக்டர் தேர்வை ராணுவத்தை வைத்து நடத்துவதாக இருக்கிறேன். ஆக போலீஸ் இலாகாவில் உள்ள மூத்த அதிகாரிகளைப் பொறுப் பான அதிகாரிகளைக் கொண்ட கமிட்டி தேர்வு செய்த ஒரு பட்டியல் நம்பிக்கைக்கு உரியது அல்ல என்று எம். ஜி. ஆர். சொல்கிறார் என்றால் இவரிடத்திலே பணிபுரிகின்ற போலீஸ் அதிகாரிகள் பொறுப்பானவர்கள் அல்ல; நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்ல என்று நான் சொல்லவில்லை—சொல்ல மாட்டேன். எம். ஜி. ஆர். சொல்கிறார்.

ஆனால் திருச்செந்தூர் விவகாரத்தைப் பொறுத்தவரை யிலே அந்த வட்டாரத்திலே அந்த நேரத்திலே பணிபுரிந்த வர்கள் —குறிப்பாக சி.ஐ.டி. பிரிவிலே இருந்தவர்கள் இந்த

விசாரணையைத் தொடர்ந்து நடத்துவதாக இருந்தால் தாங்கள் ஒரு முறை செய்த தவறைத்தான் மெய்ப்பிக்க முற்படுவார்களேயல்லாமல் அதை திருத்திக் கொண்டு உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முன் வரமாட்டார்கள்.

பிரதமர் இந்திரா காந்தியாகப் பார்த்து சி. பி. ஐ. விசாரணையைப் போட்டால் அது நம்முடைய மாநில சுயாட்சிக்கு குந்தகம். நான்கூட ஒப்புக்கொள்கிறேன்.

நீங்களாகக் கேளுங்கள்—என்னை நீங்களே விசாரியுங்கள். இவ்வளவிற்குப் பிறகு, எதிர்க் கட்சிகளெல்லாம் சேர்ந்து பேசிய பின் இங்குள்ள போலீசாரை வைத்து விசாரித்தால் என்னதான் நியாயம் கிடைத்தாலும்கூட நம்பமாட்டார்கள். எனவே. சி. பி. ஐ. விசாரணையை நீங்களே தாருங்கள் என்று இந்திரா காந்தி அம்மையாரை எம். ஜி. ஆர். கேட்டுக் கொள்ளட்டும். அடுத்த நாளே சி. பி. ஐ. விசாரணை வருகிறதா இல்லையா பார்க்கலாம். அந்த அளவிற்கு நியாய புத்தியுண்டா? வீரம் உண்டா? துணிவு உண்டா? இல்லாததற்கு என்ன காரணம்? அறங்காவலர் குழுவிலே இருக்கின்றயார் மீது இந்த ஆட்சி கைவைத்தாலும் மறுநாளே அவர் யார் யாருக்கு எவ்வளவு பங்கு கொடுத்தேன் என்று சொல்லத்தயாராய் இருக்கிறார். அந்தக் காரணத்தினாலே தான் கைவைக்க அஞ்சுகிறார்கள்.

எனவேதான் இந்த நிலைமைகளையெல்லாம் உங்களுக்கு எடுத்துச் சொல்ல, விளக்கம் தர இந்த நெடிய பயணத்தை நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். சிந்தியுங்கள்—பிறகு செயலாற்றுவோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

**—ஆத்தூரில் கலைஞர் உரை** 21—2—82

# "நான்" என்பது நீங்களும் நானும் சேர்ந்த "நாம்"தான்!

அறங்காவலர் குழு ராஜினாமா செய்ததை ஒரு முதலமைச்சர் சட்டமனறத்திலே ஒரு மணிநேரம் காத்திருந்து அறிவிக்கிறார்.

## நீதியை யாரிடத்திலே எதிர்பார்ப்பது?

நான் பேசுகிறேன். முதலமைச்சர் அமர்ந்திருக்கிறார். நான் பால் கமிஷன் அறிக்கைமீது நடைபெறுகின்ற

விவாதத்திற்கு விடை அளிக்கப் போகின்ருர் என்று எண்ணி இருந்தேன். நல்லவேளை. விடையளிக்கவில்லை. விடையளித்திருந்தால் ஒரு ஆறு மணி ஏழு மணி நேரம் ஆகி இருக்கும். நான் மதுரைக்குப் புறப்பட்டும் இருக்க முடியாது. ஏனோ எம். ஜி. ஆர். அந்தத் தந்திரத்தை அன்றைக்கு கையாளவில்லை. அவருக்குப் பதிலாக வீரப்பன் விடையளித்தார். வீரப்பன் விடையளித்த பிறகு எம். ஜி. ஆர். எழுந்து அறங்காவலர் குழு ராஜினமா செய்து விட்டது என்ருர். அதோடு நிறுத்தினரா? அப்படி ராஜினமா செய்ததற்காக அரசாங்கம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது என்று அறிவித்தார். ஒருவருக்கொருவர் நன்றி தெரிவித்துக் கொள்கிற அளவிற்கு அமைச்சர் குழுவும், அறங்காவலர் குழுவும் இருக்குமேயானல் நீதியை யாரிடத்திலே நாங்கள் எதிர்பார்ப்பது?

## மக்களை ஏமாற்றும் போலி நாடகம்!

அறங்காவலர் குழு ராஜினமா என்பது ஒரு விளையாட்டு. மக்களை ஏமாற்றுகிற ஒரு வித்தை. ஒரு போலி நாடகம். திருச்செந்தூர் பக்தர்களுக்குத் தெரியும். திருச்செந்தூர் முருகன் சூரபத்மர்களைக் கொன்ருன் என்பது புராணம். சூரபத்மன், சிங்கமுக சூரன், கஜமுக சூரன் — இந்த மூன்று பேரையும் கொன்று குவித்தான் என்கிறது புராணம்.

ஆனல் ஆண்டுதோறும் கந்த சஷ்டி விழா நடக்கிற நேரத்தில் உண்மையான முருகனும் வருவதில்லை; உண்மையான சூரபத்மனும் வருவதில்லை. உண்மையான சிங்கமுகனும் வருவதில்லை; உண்மையான கஜமுகனும் வருவதில்லை. இந்த சூரன் ஒரே வடிவத்தில் வருவார். முதலில் ஒரு சிங்கத்தலை மாட்டப்பட்டிருக்கும். இப்படி ஒரு மூன்று ஓட்டம்; அப்படி ஒரு மூன்று ஓட்டம் முருகன் சிலையைத் தூக்கிக் கொண்டு ஓடுவார்கள். அதைப் போல சூரன் சிலையைத் தூக்கிக் கொண்டு ஓடுவார்கள். பிறகு முருகன் சிலையுடன் இருக்கும் குருக்கள் வேலாயுதத்தை எடுத்து சூரன் சிலையிலே வைப்பார். உடனே பக்கத்திலேயே இருப்பவன் அந்த சிங்கமுகத் தலையைக் கழற்றிக் கொள்வான்.

அடுத்து அதே சூரன் சிங்க முகத்தில், யானைத் தலை வைக்கப்படும் யானைத்தலை கொண்ட சூரன், முருகன் ஆகிய இந்த இரண்டு சிலைகளும் இப்படி ஒரு மூன்று ஓட்டம்; அப்படி ஒரு மூன்று ஓட்டம் ஓடுவார்கள். அதற்குப் பிறகு வேலாயுதத்தை

சூரன்சிலை கழுத்திலே வைப்பார்கள். உடனே யானைத்தலையைக் கழற்றிக் கொள்வார்கள். மூன்றாவது சூரன் தலையை வைத்து பழையபடியே இப்படியும் அப்படியும் ஓடி, பின் வேலாயுதத்தை கழுத்திலே வைப்பார்கள். பிறகு அந்த சூரன் தலையைக் கழற்றிக் கொள்வார்கள்.

அதைப் போல வேலாயுதத்தைத் கழுத்திலே வைத்து தலையைக் கழற்றுகின்ற வேலைதான் இந்த அறங்காவலர் குழு ராஜினாமாவே தவிர உள்ளபடியே வேல் செருகப்பட்டு கழுத்து துண்டிக்கப்பட்ட கதையல்ல!

அது என்றைக்கோ கந்த புராணத்திலே நடந்ததோ—நடக்கவில்லையோ—நான் பக்தர்கள் மனதைப் புண்படுத்த விரும்பவில்லை. அந்தப் பிரச்சினைக்கு நான் இப்போது வர விரும்பவில்லை. ஆனால் சூர சம்காரத் திருவிழாவில் நடப்பது இதுதான்!

## ஏன் கைது செய்யவில்லை?

அதைப் போலத்தான் சுப்பிரமணிய சம்காரத்தை நடத்தியவர்களும். அறங்காவலர் குழு ராஜினாமா செய்திருக்கிறது. அறங்காவலர் குழு ராஜினாமாச் செய்தால் மறுநாள் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டாமா?

ஏன் கைது செய்யப்படவில்லை?

முதலமைச்சர் சொல்கிறார், "நீதிபதி பால் குற்றவாளிகள் யார் என்று சுட்டிக்காட்டவில்லை" என்கிறார்.

சுட்டிக்காட்டி இருக்கிறாரே!

அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்—தற்கொலை என்று சொன்னவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

"தற்கொலை செய்து கொண்டு சுப்பிரமணிய பிள்ளை தூக்குப் போட்டு குழாயிலே தொங்கியபோது அவரைக் கீழே இறக்கி அவருக்கு உயிர் இருக்கிறதா? என்று பார்க்க யாராவது முனைந்தீர்களா?" என்று நீதிபதி கேட்கிறார். வழக்கறிஞர்கள் கேட்கிறார்கள். அறங்காவலர் குழுத்தலைவர் இல்லை என்கிறார். ஏன் என்று கேட்கிறார்கள்.

"அந்த எண்ணம் எங்களுக்கு ஏற்படவில்லை" என்கிறார்கள்.

"முதலுதவியாவது செய்தீர்களா?"

"இல்லை."

"ஏன்?" என்று கேட்கிறார் நீதிபதி. "நாங்கள் விரும்பவில்லை" இப்படி பதில் கிடைக்கிறது.

நீதிபதி எழுதுகிறார் "மனிதாபிமான உணர்ச்சியே இல்லாமல் நடந்துகொண் டிருக்கிறார்கள். இவர்களது செயலைப் பார்க்கும்பொழுது என்ன தோன்றுகிறது என்றால், 'ஒருவேளை சுப்பிரமணிய பிள்ளைக்கு முதலுதவி செய்து அவரை உயிர் பிழைக்க வைத்துவிட்டால் அவர் கண் விழித்ததும், வாய் பேசத் தொடங்கியதும் மரண வாக்குமூலம் கொடுத்து, இவர்களையெல்லாம் காட்டிக் கொடுத்துவிடுவார் என்ற பயத்தின் காரணமாகத்தான் அவருக்கு முதலுதவி செய்யவில்லை' என்று அறங்காவலர் குழுத் தலைவர் பாலகிருஷ்ணனை, குழு உறுப்பினர் சீனிவாச பாண்டியனை, கேசவ ஆதித்தனை, ராஜாராம், மகாதேவன் என்ற அதிகாரிகளை பெயர் குறிப்பிட்டு இந்த புத்தகத்திலே சொல்லி இருக்கிறாரே, இல்லையென்றால் நாளை மறுநாள் நடைபெறுகிற கூட்டத்திலே அறநிலையத்துறை அமைச்சர் நீதிபதி பால் கமிஷன் அறிக்கையை வைத்துக் கொளுத் தட்டும்.

ஏன் இப்படிப்பட்ட அபாண்டங்கள்?

கொலைகாரர்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றார்கள்! அவர்கள் கைது செய்யப்படவில்லை!

நடைபெற்றிருக்கிற கொலை ஓராயிரம் ஈராயிரம் ரூபாய்களுக்காக இல்லை!

## கொலை நடக்கவில்லையாம்;
## குற்றவாளிகள் இவர்கள் இல்லையாம்!

தங்க நகைகள், வைர வைடூரியங்கள், வைர வேல் ஆகிய இத்தனையும் அந்த உண்டியலிலிருந்து கொள்ளையிடப்பட்டு —அத்தனையும் சென்னைக்குக் கொண்டுபோகப்பட்டு, ஓர் அமைச்சருடைய வீட்டிலே வைத்துப் பங்கு போடப்பட்டு, அதற்கு உடந்தையாக இருக்க வேண்டுமென்று சுப்பிரமணிய பிள்ளையை கேட்கப்பட்டு, அதை சுப்பிரமணியபிள்ளை மறுத்த ஒரே காரணத்திற்காக அவர் கொலை செய்யப் பட்டிருக்கிறார்.

கொலை செய்யப்பட்டது தவறு. கொலை செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இது எங்களுடைய வாதம்.

இதற்காகத்தான் இந்த நெடிய பயணம்!

ஆனால், அவர்களும் கூட்டம் போடுகிறார்கள்! எதற்காகத் தெரியுமா?

கொலையே நடக்கவில்லை என்று சொல்வதற்காக!

எதற்காகத் தெரியுமா?

அப்படி நடந்திருந்தாலும் இவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறுவதற்காக! நாங்கள் நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று சொல்வதற்காக!

ஒரு நீதிபதியினுடைய அறிக்கையை மதித்து நடவடிக்கை எடுங்கள் என்று கேட்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குரல்; மற்ற கட்சிகளினுடைய குரல்.

நாங்கள் நீதிபதியினுடைய குரலை மதிக்கமாட்டோம். நீதிபதியினுடைய அறிக்கையை துச்சமெனக் கருதுகிறோம் என்று எந்த அரசாங்கம், நீதிபதியை அமைத்ததோ, அந்த அரசாங்கமே நாட்டுக்குப் பதில் தருகிறது.

இதிலே மக்களுடைய தீர்ப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதுதான் இன்றைக்கு நம் முன்னுல் உள்ள பிரச்சினை.

அந்தப் பிரச்சினையை விளக்குவதற்காகத்தான் இந்த நெடிய பயணத்தை மேற்கொள்ள வேண்டுமென்று நான் எண்ணினேன்.

நான் எண்ணிய நேரத்தில் எவ்வளவு இடர்பாடுகள் இருக்கும்? எத்தகைய தொல்லைகள் இருக்கும்? என்றெல்லாம் சிந்திக்கவில்லை.

பேராசிரியர்கூட சிந்தித்து சிந்தித்து கருணாநிதியினுடைய தலையெல்லாம்கூட வழுக்கையாகிவிட்டது என்று சொன்னுர்.

நான் நிச்சயமாகச் சொல்கிறேன். என்னுடைய உள்ளத்திலே ஏற்பட்ட குமுறல்—கொதிப்பு இவற்றின் காரணமாகத்தான் திடீரென இந்த எண்ணம் எனக்குத் தோன்றி, நான் பேராசிரியரிடத்திலே திருச்சியிலே ஒரு திருமணத்திலே சந்தித்தபொழுது இப்படிச் செய்தால் என்ன என்று கேட்டேன். பேராசிரியர் வழக்கமாக எதையும் அவசரப்பட்டுச் செய்யக்கூடாது என்பதிலே திடமான நம்பிக்கை படைத்தவர் என்ற காரணத்தினுல் உங்களுடைய உடம்புக்கு ஒத்துக் கொள்ளுமா? என்று கேட்டார்.

''கழகத் தோழர்கள் அத்தனைப் பேரும் வருவார்களா? கஷ்டத்தை ஏற்றுக் கொள்வார்களா?'' என்று அவர் முதலிலேயே கேட்டிருந்தால் நான்கூட யோசித்திருப்பேன்!

"உங்களுடைய உடம்பு ஒத்துக்கொள்ளுமா?'' என்றுதான் அவர் கேட்டார்.

என்னை முன்னிலைப்படுத்தி — என்னை மையப்படுத்திக் கேட்ட காரணத்தால், நான் நீதியை நிலைநாட்ட — நாட்டு மக்கள் விழிப்படைய தமிழ்ச் சமுதாயம் முன்னேற— இருண்டு கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயம் ஒளிமயமான இடத்திற்கு வந்திட என்னுடைய உடம்பைப் பற்றிக் கவலைப்படவில்லை. அதைப் பற்றிக் கவலைப்படாதவன் என்ற காரணத்தால் நீங்கள் அதைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள்! பேராசிரியர் அவர்களே! இதற்கு ஒப்புதல் தாருங்கள்! என்றுதான் நான் அவரிடத்திலே கேட்டேன்.

அவரும் சரி என்ருர்.

ஒரு அக்கிரமம் நடைபெறுகிற நேரத்தில் — ஒரு கொடுமை நடைபெறுகிற நேரத்தில் அதைத் தடுக்க வேண்டுமென்று எண்ணும் பொழுது அதை எப்படித் தடுக்கலாம்; எந்த வகையிலே தடுக்கலாம் என்று சில நேரங்களில் — சில சம்பவங்களில் யோசித்துக் கொண்டிருக்க முடியாது!

என்னுடைய உடல்நிலை, என்னுடைய வாழ்க்கைமுறை, நான் பிறந்தது முதல் ஒரு மைல் அல்லது இரண்டு மைல் தூரத்திற்கு மேல் நடந்ததே கிடையாது. என்னுடைய பள்ளிப் பருவத்திலேகூட என்னைப் பக்கத்திலே உள்ள ரயிலடிக்கு ஒருமுறை என்னுடைய குடும்பத்தார் அழைத்துச் சென்றிருக்கிருர்கள். வண்டி பழுதாகிவிட்ட காரணத்தினுல் நடந்தே சென்றிருக்கிறேன். சிறு வயதிலே அவ்வளவுதான்.

அதற்குப் பிறகு பொதுவாழ்விற்கு வந்ததற்கு பிறகு நான் நடந்தேன் என்ருல் 1969-ம்ஆண்டிற்குப் பிறகு பேரறிஞர் அண்ணு அவர்களுடைய நினைவிடத்திற்கு அண்ணு சாலையிலே இருந்து கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்று மலர் வளையம் வைக்க விடியற்காலை 6அல்லது 7 மணிக்கு நாங்கள் நடந்திருக்கிரும். அதைத் தவிர நான் நடந்து அறியாதவன் நான்நடந்து அறியாதவன் என்ருல் என்னுடைய அருமை நண்பர் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்களைப் போல பெரியதோர் குடும்பத்திலே பிறந்தவன் என்ற காரணத்தினுல் நடந்து அறியாதவன் என்று யாரும் கருதிக் கொள்ளாதீர்கள்.

மிகமிகச் சாதாரணமான—மிகமிகச் சாமான்யமான ஒரு குக்கிராமத்தில், மிகச் சாதாரண்மான ஒரு குடும்பத்தில் மிக மிக பின்தங்கிய சமுதாயத்தில், இவனும் இப்படி வருவாஞ?

என்று எண்ணிப் பார்க்காத குடும்பச் சூழலில் பிறந்தவன் தான் இன்று உங்களால் தலைவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற கருணாநிதி என்பதை நீங்கள் யாரும் மறந்துவிடாதீர்கள்!

நான் நடந்து பழக்கப்பட்டவன் அல்ல, இன்னும்கூடச் சொல்லப் போனால் நான் ஆறு வயது வரையிலேகூட என் தாயினுடைய இடுப்பைவிட்டுக் கீழே இறங்க மாட்டேனாம். அவ்வளவு சோம்பேறியாக இருந்தேனாம். என்னுடைய தாயாரும் தகப்பனாரும்கூடச் சொல்வார்கள். என்னுடைய சிறிய தமக்கையார் (முரசொலி மாறனுடைய தாயார்) கொஞ்சம் இடுப்பு வளைந்திருக்கும் அவர்களுக்கு. அதற்குக் காரணம் சொல்வார்கள், உன்னை ஆறு வயது வரையிலே தூக்கித் தூக்கி சுமந்து அவளுக்கு இடுப்பு வளைந்துவிட்டது என்று கூடச் சொல்லுவார்கள்.

எனவே 120 மைல் — 200 கிலோ மீட்டர் நடக்க முடியுமா? நான் எண்ணிடவில்லை. ஏன் எண்ணிடவில்லை?

## குழந்தையைக் காப்பாற்ற தாவி விழும் தாயைப்போல...

தாழ்வாரத்திலே குழந்தை தூங்கிக் கொண்டிருக்கிறது தொட்டிலில். தாய் அடுக்களையிலே வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது ஓநாய் ஒன்று தாழ்வாரத்திற்குள்ளே நுழைந்து குழந்தையினுடைய குரல்வளையைப் பிடித்திடப் பார்க்கிறது. அங்கு வந்த தாய், எண்ணிப் பார்ப்பாளா? நாம் இந்த ஓநாயைத் தடுக்க முடியுமா? அதைத் தடுக்கக் கூடிய பலம் நமக்கு இருக்கிறதா? இந்த ஓநாயை அடித்து வீழ்த்தக்கூடிய ஆற்றல் நமக்கு இருக்கிறதா? என்றெல்லாம் தாய் எண்ணிப் பார்க்க மாட்டாள். உடனடியாகக் குழந்தையைக் காப்பாற்ற குழந்தைக்கும் ஓநாய்க்கும் இடையிலே போய் எப்படி ஒரு தாய் தாவி விழுவாளோ, அதே உணர்ச்சிதான் எனக்கு ஏற்பட்டது.

எனவேதான் நான் என்னைப்பற்றிக் கவலைப்படவில்லை, என்னுடைய உடல்நிலையைப் பற்றிக் கவலைப்படவில்லை.

என்னுடைய கால்கள் தாங்குமா என்பதைப் பற்றிக் கூடக் கவலைப்படவில்லை!

லட்சோப லட்சம் கால்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் என்னோடு நடக்கின்ற நேரத்தில் இந்தக் கால்கள் மட்டும் என்ன அந்தரத்திலேயிருந்து குதித்த கால்களா?

தொண்டர்களுடைய கால்கள் துவளுகிற நேரத்தில் பார்த்தேன்! என்னுடைய அருமை உடன்பிறப்புக்களெல்லாம் துவளுகிற நேரத்தில் பார்த்தேன்!

என்னுடைய அருமை உடன்பிறப்புக்கள் லட்சோப லட்சம் பேர் மதுரையிலே இருந்து திருச்செந்தூர் வரையிலே 200 கிலோ மீட்டர் தொலைவு சரியான உணவின்றி—உறங்க வசதியின்றி— ஓய்வு கொள்ள இடமின்றி வருகின்ற காட்சியை நான் பார்த்தேன். என்னுடைய மனம் பதைத்தது.

தவறு செய்து விட்டோமோ என்றுகூட எண்ணினேன். என்றாலும் மனதைத் தேற்றிக் கொண்டேன்!

என்னுடைய காலிலே இருந்த ரணத்திற்கு—கொப்பளங்களுக்கு மருந்திட்ட டாக்டர் கலாநிதியும், டாக்டர் ராஜாம்பாள் அம்மையாரும், டாக்டர் காஞ்சனு கமலநாதனும் மற்றுமுள்ள டாக்டர்களும் கட்டுக்களை அவிழ்த்து—ஆங்காங்கு பாதையிலேயே எனக்கு சிகிச்சை அளித்த நேரத்தில்—அதைப் பார்த்த நம்முடைய கழக உடன்பிறப்புக்களின் கண்கள் கண்ணீர் சொரிந்தன.

## கண்ணீர் சொல்லும் கதை

நான் எண்ணிக்கொண்டேன், இந்தக் கண்ணீரைவிட வேறு மருந்து என்ன இருக்கிறது என்று! அதே நேரத்தில் இவர்கள் நம்முடைய காயத்தைக் காணுகிறார்கள்; நம்முடைய கஷ்டத்தைப் பார்க்கிறார்கள்; கண்ணீர் விடுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய காயத்தை—தங்களுடைய கஷ்டத்தை நம்மிடத்திலே காட்டிக் கொள்ளாமல் மறைக்கிறார்கள் என்பதையும் புரிந்து கொண்டேன்!

ஆனால் ஒன்று. இந்த வழிநடைப் பயணத்தில் லட்சக்கணக்கான தொண்டர்களை நேரடியாகச் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. பொதுக்கூட்டங்களுக்கு அழைப்பார்கள். நிதி கொடுத்தால்தான் வருவேன் என்று நிபந்தனை போடுவேன். எடைக்கு எடை தருகிறாயா என்று கேட்பேன். திருமணத்திற்கு வா! தேதி கொடு! என்று கேட்பீர்கள். கழக நிதி இரண்டாயிரம் ரூபாய் கேட்டு கட்டியவுடன் என்னிடத்திலே வா என்று சொல்லுவேன்.

ஆனால் இப்படி என்னை அழைத்தீர்கள். அடிக்கடி என்னை அழைத்துக் கொண்டிருக்கிறீர்களே. உங்களை ஒரு முறை அழைக்கிறேன் — கஷ்டப்பட அழைக்கிறேன் — அல்லல்பட அழைக்கிறேன்— அவதிப்பட அழைக்கிறேன்— வசதிகளற்ற

பாதையிலே நடப்பதற்கு அழைக்கிறேன் என்று அழைத்துப் பார்த்தேன். உன்னைப்போல கிராக்கி செய்கின்றவர்கள் அல்ல நாங்கள்; நீ அழைத்தால் தமிழ்ச் சமுதாயத்திற்காக—பெரியாருக்காக — பேரறிஞர் அண்ணாவுக்காக— அழைக்கிறாய் (கைதட்டல்) என்பதைப் புரிந்து கொண்டவர்கள் நாங்கள் என்று எனக்குப் புத்தி புகட்டுகின்ற அளவிற்கு நீங்கள் நடந்து காட்டி இருக்கின்றீர்கள்.

## என்னுடைய கைகளாக எண்ணிக் கொள்ளுங்கள்!

உங்களுடைய கால்கள் வலி எடுத்திருக்கும்; உங்களுடைய கால்களிலே, என்னுடைய கால்களிலே ஏற்பட்ட கொப்பளங்களைப் போல கொப்பளங்கள் ஏற்பட்டிருக்கும். என்றால் தொலைதூரத்திலே இருக்கின்ற உடன்பிறப்புகளே. உங்களுடைய கால்களையெல்லாம் தடவிக் கொடுக்க என்னுடைய கைக்கு அவ்வளவு நீளம் போதாது; ஆனாலும் நீங்கள் தடவிக் கொள்கிற நேரத்திலே அந்தக் கைகளையெல்லாம் என்னுடைய கைகள் என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

நீங்கள் அதிலே மருந்து இடுகிற நேரத்திலே எல்லாம் அந்த மருந்துச் சொட்டு ஒவ்வொன்றும் என்னுடைய கண்ணீர்த் துளிகள் என்று தயவுசெய்து எண்ணிக் கொள்ளுங்கள். (கைதட்டல்)

உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்?

நான், நான் என்று சொல்லுகின்ற காரணத்தால் ஏதோ அகந்தையிலே—ஆணவத்திலே—கர்வத்திலே பேசுகிறேன் என்று கருதாதீர்கள்.

நான் என்பது 'நாம்' நீங்களும் நானும் சேர்ந்த 'நாம்' அந்த 'நாமிலே' தான் கருணாநிதியும் இருக்கிறான். பேராசிரியரும் இருக்கிறார். நாஞ்சிலாரும் இருக்கிறார். சாதிக் பாட்சாவும் இருக்கிறார். இந்த மேடையிலே வீற்றிருக்கின்ற கழகத்தினுடைய முதுபெரும் தலைவர்களும் இருக்கிறார்கள்.

இந்த 'நாமி' லேதான் நமக்கு பகுத்தறிவைப் போதித்த பெரியாரும் இருக்கிறார். நம்முடைய அறிவுக்கண்ணைத் திறந்துவிட்ட அரசியல் ஆசான் அண்ணாவும் இருக்கிறார். அந்த 'நாமி'லேதான் திராவிடர் இயக்கமே இருக்கிறது.

இன்றைக்கு உலகத்திலேயே பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் ஜனநாயகத்தை நாம் போற்றிப் பாதுகாக்கின்றோம். ஜனநாயகத்தில் நீதி, நிர்வாகம், ஆட்சிமன்றம் மூன்றும் முக்கியமானவை.

இவைகளில் நிர்வாகம் சீர்குலைந்தால் கூந்தலில் ஏற்பட்ட சிக்கலைப் போல்—இந்தச் சிக்கை எடுத்து சரி செய்து விடலாம்.

ஆட்சி மன்றத்தில் தவறு ஏற்பட்டால் ஆடை கசங்கியதைப் போல் வேறு ஆடை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் நீதியின் கழுத்து முறிக்கப்பட்டு விட்டால் என்ன ஆவது?

அதனால்தான் தமிழ்நாடு அரசாங்கத்தால் நிலைகுலைக்கப் பட்டுள்ள நீதியைக் காப்பாற்ற நாம் இந்த நெடிய பயணத்தை மேற்கொண்டோம்.

எனவே ஒரு சுப்பிரமணியபிள்ளையினுடைய கொலைக்காக அல்ல; திருச்செந்தூரிலே இருக்கிற அறங்காவலர் குழு தண்டிக்கப்படவேண்டும்; அந்தக் கொலைக்காரர்கள் குற்றவாளிக் கூண்டிலே ஏற்றப்பட வேண்டும் என்ற ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சிக்காக அல்ல; தமிழ்நாடு முழுவதுமே இன்றைக்கு நீதித்துறையிலே—நீதியிலே தலையிடும்—நீதியை வளைக்கின்ற செயலும், நீதிபதிகளுடைய உத்தரவுகளைக் காலில் போட்டு மிதிக்கின்ற தன்மைகளும் இன்றைக்கு தமிழ்நாட்டிலே எம். ஜி. ஆர். அரசாங்கத்திலே மலிவான ஒன்றாக ஆகிவிட்டது.

கே. டி. கோசல்ராம் அவர்கள் இங்கே பேசும்போது "யார் யாரோ பேசுகிறார்கள்! அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாதீர்கள்!" என்று சொன்னார். அது எங்களுக்கு ஆறுதல் ஊட்டுவதாக இருக்கிறது.

ஆனாலும் கே. டி. கோசல்ராம் அவர்களைக் கேட்டுக் கொள்வேன்!

## மக்கள் கதி என்ன ஆவது?

நாங்கள் மாநில சுயாட்சி விரும்புகிறவர்கள். மத்தியிலே கூட்டாட்சி; மாநிலத்திலே சுயாட்சி என்பது எங்களுடைய கொள்கை.

**ஆனால், மாநில சுயாட்சி கிடைக்கிற வரையில் ஒரு மாநிலத்திலே நடைபெறுகின்ற அக்கிரமங்களைத் தட்டிக் கேட்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு!**

அப்படித் தட்டிக் கேட்காமல் எல்லோரையும் தட்டிக் கொடுத்து விட்டே போய்விடலாம் என்று மத்திய அரசு நினைக்குமேயானுல், மக்கள் கதி என்ன ஆவது?

அப்படிப்பட்ட ஒரு நினைவு இருக்குமேயானுல் மத்திய அரசு ஒன்று தேவைதானு என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். (கைதட்டல்)

எனவே மத்திய அரசு ஒன்று தேவை என்று ஒத்துக் கொண்ட பிறகு, மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந் தளிக்க வேண்டுமென்பது எங்களுடைய குறிக்கோளாக இருந்தாலும்—பகிர்ந்தளிக்கப்படுகிற வரையிலே ஒரு மா நிலத்தினுடைய முதலமைச்சருக்கு மாநில சுயாட்சியின் மேல் நம்பிக்கை இருக்குமானுல், இப்படிப்பட்ட நேரங் களில் நடுநிலையிலே நீதி கிடைக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறுர்கள்.

அவர்கள் இந்த அரசை நம்பத் தயாராக இல்லை. அப்ப டிப்பட்ட ஒரு சந்தேகம் மக்களுடைய உள்ளத்திலே ஏற்பட்டு விட்டது.

எனவே அந்தச் சந்தேகத்தைப் போக்கிட வேண்டும். அதற்கு மத்திய அரசினுடைய உதவியை—மத்திய புலனுய் வுத்துறை வந்து விசாரிக்கட்டும் என்ற அளவிற்கு எம். ஜி. இராமச்சந்திரன் தாமே வலியச் சென்று கேட்க வேண்டும்.

ஆனுல் எம். ஜி. ஆரிடத்திலே அதை எதிர்பார்க்க முடி யாது.

கறுப்புக்கொடி காட்டிய நாங்கள் இந்திரா அம்மை யாரைக் கொலை செய்ய முயன்றதாக என் மீதும் பேராசிரியர் மீதும் வழக்குத் தொடர்ந்து, என்னைக் கொலையாளி என்று, பேராசிரியரைக், கொலையாளி என்று சொல்ல அந்தப் பழிவாங்கும் தன்மை— அந்த நெஞ்சழுத்தம்— அந்த வஞ்சக உள்ளம்தான் எம். ஜி. ஆருக்கு இருக்கிறது.

அறங்காவலர் குழுவைக் கலைக்கவோ அல்லது ராஜினுமா செய்துவிட்ட அறங்காவலர் குழுவிலே இருக்கின்ற அந்தக் கொடியவர்களை குற்றவாளி கூண்டிலே ஏற்றவோ எம். ஜி. ஆருக்கு முடியவில்லையென்ருல் என்ன பொருள்?

குமுதம் பத்திரிகையிலே எழுதி இருந்ததைப் போல் தமிழ்நாடு எம். ஜி ஆர். கையிலே அடக்கம், எம். ஜி. ஆர்.

ஒரு அமைச்சர் கையிலே அடக்கம், அமைச்சர் ஒரு அறங்காவல் குழுத் தலைவர் கைகளிலே அடக்கம். அதுதானே உண்மை!

இந்த அடக்கத்தினுடைய பொருள் என்ன?

கோடி கோடியாகக் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள்தான் அவர்களுடைய வீடுகளிலே அடக்கம்; நாளைக்கு பாலகிருஷ்ணனுடைய உடம்பிலே கை வைக்கப்படுமேயானால்— நீ கைது செய்யப்பட்டிருக்கிறாய் என்று போலீசார் சொல்வார்களேயானால்— மறுநாளே பாலகிருஷ்ணன் யார் யாரைக் காட்டிக் கொடுப்பார்? எந்தந்த அமைப்புகள் காட்டிக் கொடுக்கப்படுவார்கள் என்ற பயத்தின் காரணமாகத்தான் எம். ஜி. ஆர். அரசு இந்த நடவடிக்கையிலே ஈடுபடவில்லை.

## இன்னும் மூன்று நாளில்...

அது ஈடுபடாமலிருக்கலாம். தம்பி துரை முருகன் இங்கே சொன்னார். ஈடுபடாவிட்டால்— இன்னும் மூன்று நாளில்— இன்னும் மூன்று நாளில் என்ற வார்த்தையை மாத்திரம் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

இன்னும் மூன்று நாளில்; நாளைக்குச் சொல்லிப் பாருங்கள்— இன்னும் மூன்று நாளில்— நாளை மறுநாள் சொல்லிப் பாருங்கள், 'இன்னும் மூன்று நாளில்'— அப்படித்தான் உங்களுக்குத் தெரியும். ஆனால், அந்த 'இன்னும் மூன்று நாளில்' என்பது எந்த ஒரு நாள் என்று தேதி குறிப்பிடப்படும் அடுத்த கட்டத்திற்கு என்பதை மாத்திரம் நான் தெரிவித்து இந்த நடைப்பயணத்திலே பங்கு பெற்ற உடன்பிறப்புக்கள் அத்தனை பேருக்கும்— ஒத்துழைத்த அத்தனை பேருக்கும் எனது நன்றி.

நிலைமைகள் போகிற போக்கைப் பார்த்தால் எம். ஜி. ஆர். வீரப்பனையும் காப்பாற்றி, வீரப்பனுக்கு உடந்தையாக இருந்து கோவில்கள் பலவற்றிலே கொள்ளை அடித்துக் கொண்டிருக்கின்ற அறங்காவலர் குழுவையும் காப்பாற்றி அதிலே கொலையாளிகளாக மாறியவர்களையும் காப்பாற்றி இப்படி நீதிக்குப் புறம்பான காரியத்தை நடத்தி வருகின்ற காரணத்தினால் முதலமைச்சர் எம். ஜி. ஆரேகூட ஏன் ராஜினாமா செய்யக்கூடாது என்று நம்முடைய கழக முன்னோடிகளெல்லாம் கடந்த ஆறேழு நாட்களாக கூட்டங்களிலே பேசி வருகிறார்கள்.

நான் இப்போது சொல்ல விரும்புகிறேன். முதலில் தற்கொலை என்று வாதித்தது இந்த அரசு. கொலை என்று கூறிய

வர்கள் மக்கள். பிறகு இந்த அரசே தன்னைத் திருத்திக் கொண்டு தற்கொலையா? கொலையா? என்று ஆராய நீதி பதியை நியமித்தது. அது வரவேற்கத் தக்கது.

ஆனால் நீதிபதி, இது கொலைதான் என்று திட்டவட்ட மாக ஒரு அறிக்கையைத் தந்துவிட்டார்.

அதன் பிறகு அந்த நீதிபதியின் அறிக்கைக்குப் புறம் பாக— கருத்துக்கு மாறாக— இது தற்கொலைதான் என்று இந்த அரசு வாதிக்குமென்றால் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த ஒரே ஒரு குற்றத்திற்காக இந்த அரசே பதவி விலக வேண்டும். அரசே மாற்றப்பட வேண்டும்.

**திருச்செந்தூரில் கலைஞர் உரை** 22—2—82

# மக்களின் குரலே மகேசன் குரல்!

நீதி கேட்டு நெடிய பயணம் முடித்து வெற்றியோடு திரும்பிய கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் 24-2-82 அன்று கழகப் பொருளாளர் சாதிக் தலைமையில் சென்னை திருவல்லிக்கேணி தேரடித் தெருவில் லட்சக்கணக்கானோர் பங்கேற்ற மாபெரும் பாராட்டுக் கூட்டம் நடந்தது. அதில் கலந்துகொண்டு நன்றி தெரிவித்துத் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஏற்புரை வருமாறு;—

24-ம் தேதி பாராட்டு விழா என்று கூறி 25-ம் தேதி (இரவு 12. 10 மணி) என்னைப் பேசுமாறு ஆணை பிறப்பித் திருக்கின்றார்கள்.

நான் தலைமையேற்று நடைபெற்ற நெடிய பயணம் குறித்து அதிலே ஏற்பட்ட இன்னல்கள், இடையூறுகள், தாங்கிக்கொண்ட துன்பங்கள், வேதனைகள், இவைகளைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய அனைவரும் வெகு விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

நான் தாங்கிக் கொண்ட துன்ப—துயரங்கள்—வேதனை கள் இவைகள் மாத்திரம் இங்கே விளக்கப்பட்டன. ஆனால், இந்த நெடிய பயணத்தை, நீதி கேட்பதற்காக தி. மு. கழகத்தின் சார்பில் நடைபெற்ற இந்த இலட்சியப் பய ணத்தை சிறந்த முறையில் அமைதியாக, ஆர்வம் குன்றாமல் வெற்றிகரமாக நடத்துவதற்காக உழைத்தவர்களின் கஷ்ட நஷ்டங்கள் எவ்வளவு என்பதையும் அழைப்பினை ஏற்று பல்வேறு பகுதியிலே இருந்து லட்சோப லட்சம் பேர் இந்தப் பயணத்திலே கலந்து கொண்டபோது அவர்களுக்கு

ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் எவ்வளவு என்பதையும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது.

ஆனால் ஒன்று இரண்டினை மாத்திரம் இந்த நேரத்தில் நான் மிகுந்த வேதனையோடு உங்களிடத்திலே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

தூத்துக்குடியில் எவ்வளவு எழிற்கோலம்—எழுச்சிக் கோலம் என்பதனை தம்பி கோபால்சாமி இங்கே வர்ணித்துக் காட்டினார். இந்தச் சிறப்பு மிகுந்த நடைப்பயணத்தினுடைய வெற்றிக்கு மாவட்டச் செயலாளர்கள்—அந்தப் பகுதியினுடைய அமைப்புச் செயலாளர் இவர்களை யன்னியில் தம்பி கோபால்சாமியைப் போன்றவர்களுடைய உழைப்பும் பெரும் பகுதி உண்டு என்பதை நான் அறிவேன்.

## மகன் இறந்த கவலையையும் மறந்து!

எனினும் அவர் இங்கே வர்ணித்துக் காட்டிய தூத்துக்குடியினுடைய அந்த எழிற் கோலத்திற்கு—எழுச்சிக் கோலத்திற்கு காரணமாக இருந்தவர்களில் ஒருவர் தூத்துக்குடி அய்யாசாமி என்கின்ற நண்பர்; மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் கிருஷ்ணன் அவர்களோடும், மற்றுமுள்ள நண்பர்களோடும் ஒத்துழைத்து உறுதுணையாக இருந்து தூத்துக்குடியிலே நம்முடைய நெடிய பயணம் மிகுந்த சிறப்படைவதற்கு பெரும் பாடுபட்டவர்.

அத்தகைய நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக அமைய வேண்டுமென்று அவர் உழைத்துக் கொண்டிருந்த பொழுது அவருடைய மூத்த மகன் இருபது வயது நிரம்பியவன் விபத்து ஒன்றிலே சிக்கி மாண்டுவிட்டான்.

மாண்டுவிட்ட மகனுக்கு இறுதிக்கடன் செலுத்த வேண்டிய நாட்கள்— இன்னும் பத்து நாட்கள் இருக்கின்றன என்ற போதிலும் அவ்வளவு நாள் பொறுத்திருந்தால் நெடிய பயணத்திற்கான பணிகளிலே ஈடுபட முடியாது என்பதற்காக அந்த நினைவுநாளையும் இரண்டு அல்லது மூன்று நாளிலே நிறைவேற்றிவிட்டு மகன் இறந்த சோகத்தை ஒரு மூலையிலே தூக்கி வைத்துவிட்டு நெடிய பயணம் வெற்றி பெற நாளெல்லாம் அந்த அய்யாசாமி உழைத்தார் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்த நெடிய பயணத்தில் எனக்கு ஏற்பட்ட துன்பங்கள் அதற்கு முன்னால் கடுகாகத்தான் எனக்குத் தெரிகிறது.

## சுராஜுதீன்:
## மறக்க முடியா திருநாமம்!

சுராஜுதீன் என்கின்ற ஒரு வாலிபன் நெல்லையில் தேநீர்க்கடை வைத்து வியாபாரம் செய்கிறவன். சாதாரணக் குடும்பத்திலே பிறந்த சுராஜுதீன் என்ற வாலிபன் நெடிய பயணத்திலே கலந்து கொண்டு திருச்செந்தூருக்கு அருகிலே ஆத்தூர் என்கின்ற ஊர்வரையிலே என்னோடு நடந்து வந்து இரவு ஆத்தூரிலே கூட்டத்தை முடித்துவிட்டு நெல்லை சென்று தன்னுடைய கடையிலே உள்ள பணிகளைமுடித்து விட்டு இரண்டுநாள் கடையைப் பூட்டிவிட்டு, திருச்செந்தூர் வரையிலே வரலாம் என்கின்ற கருத்தோடு நண்பர்களிடத்திலே கூறிவிட்டு வேகவேகமாக நெல்லைக்குச் சென்று இன்னும் நாலைந்து தோழர்களை அழைத்துக் கொண்டு வருகிற வழியில் வாகனங்கள், எதுவும் கிடைக்காமல் நான் இருக்கின்ற இடத்திற்கு வரவேண்டுமென்று துடியாய்த்துடித்து ஒரு பேருந்திலே ஏறிக்கொண்டு வரும்பொழுது, பகலெல்லாம் நடந்த களைப்மால்—அயர்வால் தூங்கி தலை வெளியே நீட்டப் பட்டிருந்த போது எதிரே வந்த ஒரு லாரி தலையை நசுக்கி அவனைக் கொன்று விட்டது.

அதை எண்ணிப் பார்க்கிறேன். எனக்கு ஏற்பட்ட கஷ்டங்களை நண்பர்களெல்லாம் இங்கே, அடுக்கி அடுக்கி காட்டினர்களே அதோடு ஒப்பிடும்பொழுது என்னுடைய கஷ்டங்கள் ஒரு ‘எள்’ முனை கூட அல்ல என்பதைத்தான் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எட்டு இடங்களில் இந்தப் பயணங்கள் முடிவுற்று ஒவ்வொருஊரிலும், திருமங்கலத்திலே இருந்து திருச்செந்தூர் வரையிலே ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்ற பொதுக் கூட்டங்களில்தலைமையேற்கின்ற நண்பர்கள், அல்லது கூட்டத்தை நடத்துகின்ற தோழர்கள் தவருமல் சில அறிவிப்புகளைச் செய்துகொண்டே இருந்தார்கள். இன்னருடைய மகன் கவலைக்கிடமான நிலைமையிலே இன்னஊரில் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருக்கிருன்; அவனுடைய தந்தை இந்தப் பயணத்திலே ஈடுபட்டிருக்கிருர், அவருடைய பெயர் இது; அவர் உடனடியாக ஊருக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்.

இந்தப் பயணத்தில் ஈடுபட்டிருந்கின்ற இன்ன ஊர் செயலாளருடைய தாயார் அல்லது தந்தை இன்று மாலையிலே மறைந்து விட்டதாகத் தந்தி வந்திருக்கிறது. உடனடியாக அவர் ஊருக்கு வருமாறு கேட்டு கொள்ளப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட அறிவிப்புக்கள் இந்த எட்டு நாளும் ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

காலையிலே நண்பர் வீராசாமி கூட என்னிடத்திலே மிகுந்த வேதனையோடு சொன்னார், ஆற்காட்டிலே இருந்து பால கிருஷ்ணன் என்கின்ற அந்த ஊர் செயற்குழு உறுப்பினர் இந்தப் பயணத்திலே வந்து கலந்து கொண்டு திருச்செந்தூரிலே பயணம் முடிந்த பிறகு கன்னியாகுமரி போன்ற இடங்களுக்குச் சென்று பார்த்து வரலாம் என்று அவர் சென்றுவிட, அவருடைய இருபத்தொரு வயது மகன் ஆற்காட்டிலே திடீர் என்று இறந்து விட்டான் என்ற செய்தி திருநெல்வேலிக்கும் மற்ற இடங்களுக்கும் கொடுக்கப்பட்டும் கூட, அந்தத் தகப்பனுக்கு அந்தச் செய்தியையே தெரிவிக்க முடியாத அளவிற்கு நிலைமை ஆகி விட்டது என்று கூறி என் னிடத்திலே கண் கலங்கினார்.

## கடமை வீரர்கள் பொன்னடிகளுக்கு காணிக்கை!

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே தங்களுடைய குடும்பங்களில் நோயுற்றுக் கிடப்பவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், தங்களுடைய குடும்பங்களிலே ஏற்பட்ட பெரும் இழப்புகளைப் பற்றிக் கவலைப்படாமல்— தாங்கள் பெட்டிக்கடை—வெற்றிலைக்கடை— டீக்கடை என்கின்ற அளவிற்கு வைத்து நடத்தி அதன் மூலம் கிடைக்கும் வருமானத் தால் தான் வயிறு கழுவ முடியும் என்ற சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல்? கழகம் அழைக்கிறது— கழகத்தினுடைய ஆணை கேட்டு, கழகம் அழைக்கின்ற களத்திற்குச் செல்ல வேண்டும் என்று ஏறத்தாழ இரண்டு லட்சம் அல்லது மூன்று லட்சம் கழகத்தினுடைய உடன்பிறப்புக்கள்—கழகத்தினுடைய கண்மணிகள் மதுரை நோக்கி வந்து திருச்செந்தூர் வரையிலே சென்றார்களே அவர்களுடைய பொன்னடிகளுக்கு நான் இந்தப் பாராட்டு விழாவிலே எனக்கு அளிக்கப்பட்ட அத்தனை வாழ்த்துக்களையும் புகழுரைகளையும் சமர்ப்பிக்கிறேன்.

பேராசிரியரும் மற்றும் இங்கே வீற்றிருக்கின்ற பெருமக்களும், கழகத்தினுடைய முன்னேடி தலைவர்களும், தோழமை கட்சியினுடைய தலைவர்களும் இங்கே எனக்குச் சூட்டிய புகழாரங்கள் அத்தனையும் என்னுடைய கழுத்திலே அணிவித்த பூ மாலைகளும் எனக்கு அணிவிக்கப்பட்ட பொன்னுடை கைத்தறி ஆடைகளும் இவைகள் அத்தனையும் அந்தச் செயல் வீரர்களுக்கு — அந்தக் கழகக் காளைகளுக்கு—அந்தக் கழக உடன்பிறப்புகளுக்கு— ஏன்! அவர்களுடைய காலடிகளுக்குச் சொந்தமானது என்பதை நான் இங்கே கண்ணீர் மல்கக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நெடிய பயணம் ஏன் தொடங்கப் பட்டது என்பதை நான் மீண்டும் உங்களிடத்திலே விளக்கமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையென்றே கருதுகிறேன்.

ஏனென்ருல் பேராசிரியர் இங்கே குறிப்பிட்டதைப் போல் நீதிபதி பால் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை பொதுமக்களுக்கு முதலிலேயே எடுத்துச் சொல்லப்பட்டது.

அரசின் சார்பிலே அறிக்கை வைக்கப்பட்ட பிறகு, சட்ட மன்றத்திலே வாதாடிப் பார்த்தாகி விட்டது.

மக்கள் மன்றத்திலே கண்டனக் கூட்டங்கள் நடத்தி ஊர் ஊராக தி. மு. கழகத்தின் சார்பிலும் பல்வேறு அரசியல் கட்சிகள் சார்பிலும் எடுத்து இயம்பப்பட்டு விட்டது.

## மக்கள் மன்றத்தை நாடியது ஏன்?

இவ்வளவுக்கும் பிறகு, என்னுடைய நண்பர் வீரமணி அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல் எந்த அரசு ஒரு நீதிபதியை நியமித்து அறிக்கை தரச் சொன்னதோ, அதே அரசு, அந்த நீதிபதியினுடைய அறிக்கை தவருனது என்று வாதிடத் தொடங்கிய பிறகு இனி இங்கே நீதி கேட்டுப் பயனில்லை. மக்கள் மன்றம் செல்லுவோம் என்று மக்களைத் நாடவேண்டிய அவசியம் தி. மு. கழகத்திற்கு ஏற்பட்டது.

அமைச்சரவையிலே இருக்கின்ற ஒரு தம்பி கூடச் சொன்ஞர், நல்ல யோசனைதான். "நீங்கள் நீதி கேட்டு திருச்செந்தூருக்குச் செல்வானேன், எங்களுடைய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். இருக்கிற இடத்திற்கு அல்லவா செல்ல வேண்டும்" என்று என்னைப் பார்த்துக் கேட்டார்! பத்திரிகைகளிலே படித்துப் பார்த்தேன்.

அந்தத் தம்பிக்கு அவ்வளவு ஆசை இவ்வளவு பெரிய படையைத் திரட்டிக் கொண்டு திருச்செந்தூருக்கு ஏன் செல்ல வேண்டும்? எம். ஜி. ஆருடைய வீட்டிற்கோ எம். ஜி. ஆருடைய தோட்டத்திற்கோ சென்ருல் என்ன ஆகும்? எனவே கருணுநிதி அந்தக் காரியத்தை செய்ய வேண்டும் தான் செய்ய முடியாததை தி. மு. கழகமாவது செய்யாதா என்கின்ற ஆசை அந்தத் தம்பிக்கு இருக்கலாம்.

ஆனுல், தி. மு. கழகத்தை பொறுத்தவரையிலே கோபாலபுரம் போவேன்; கொலே செய்தால் கூட சாட்சி சொல்ல ஆள் இருக்க மாட்டார்கள் என்று கொக்கரித்தாரே எம். ஜி. ஆர். அதைப் போலக் கொக்கரிக்கின்ற தலைமை யைக் கொண்டது அல்ல தி. மு. கழகம்.

எனவேதான் நாங்கள் மக்களேச் சந்திக்க — மக்களிடத் திலே நியாயத்தை எடுத்துக்கூற, நடந்துவிட்ட அநீதி, நடை பெற்றுவிட்ட கொலே, அதை மறைப்பதற்குச் செய்யப்படு கின்ற சதி இவைகளேயெல்லாம் எடுத்துக் கூறுவதற்காகத் தான் இந்தப் பயணத்தை மேற்கொண்டோம்.

## நீதிபதி பாலின் முடிவுரையையே ராமச்சந்திரன் திரிக்கிருர்!

எம். ஜி. ஆர். அவர்கள் நாங்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டபோது ஒரு கருத்தினே சட்டமன்ற மேலவை யிலே வெளியிட்டார். அதை மாத்திரம் உங்களுக்குச் சுருக்க மாக விளக்கிட விரும்புகிறேன்.

என்ன கருத்து?

நீதிபதி பால் திருச்செந்தூரிலே நடைபெற்றது— அவருடைய கமிஷன் அறிக்கையின்படி கொலேயா? அல்லது தற்கொலேயா? என்று குறிப்பிடவேயில்லே!

இது எம். ஜி. ஆர். சட்ட மேலவையிலே பேசியது. ஏடு களிலே நான் படித்தது.

கொலே என்றும் சொல்லவில்லேயாம். தற்கொலே என்றும் சொல்லவில்லேயாம். அப்படி என்ருல் அந்த அறிக்கை கூறுகின்ற முடிவுதான் என்ன?

இது கொலேயும் அல்ல். தற்கொலேயும் அல்ல. என்று நீதிபதி பால் ஒரு முடிவிற்கு வந்திருப்பாரேயானுல் தன்னு டைய இறுதி உரையாக என்ன எழுதியிருப்பார்.

என்னுல் இது கொலேயா? —தற்கொலேயா என்று கண்டு பிடிக்கவே முடியவில்லே என்று அந்த அறிக்கையிலே எழுதி யிருக்க வேண்டும்.

எம். ஜி. ஆர். பொறுப்பு வாய்ந்த இடத்திலே அமர்ந்திருப்பவர். தமிழகத்தினுடைய முதலமைச்சர். அறிக்கை ஆங்கிலத்திலும் தரப்பட்டிருக்கிறது. தமிழிலும் தரப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே நீதிபதி பால் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இந்த வட்டாரத்திலே இருக்கின்ற படித்த மக்கள் —வழக்கறிஞர்கள்— நீதியின் பால் அக்கறை கொண்டவர்கள், பால் அவர்கள் எந்தக் கருத்தை தன்னுடைய முடிவுரையாக ஆக்கியிருக்கிறார் என்பதை சிந்திக்க வேண்டும்.

எம். ஜி. ஆர். சொல்லுகிறார். இது தற்கொலையும் அல்ல. கொலையும் அல்ல. இப்படி பால் கமிஷன் அறிக்கை கூறுகிறது. தற்கொலையுமல்ல கொலையுமல்ல என்றால் இயற்கையாகச் செத்தாரா சுப்பிரமணியபிள்ளை? அல்லது விபத்துக்கு ஆளாகிச் செத்தாரா?

தற்கொலையுமல்ல, கொலையுமல்ல இப்படித்தான் பால் கமிஷன் அறிக்கை கூறுகிறது. இது எம். ஜி. ஆருடைய வாதம். சாதாரண இடத்திலே அல்ல. சட்டமன்ற மேலவையில்.

## நீதிபதி பால் சொன்ன முடிவு!

ஆனால் நீதிபதி பால் என்ன முடிவுரையாக எழுதுகிறார்.

''சாட்சியத்தை பகுத்து ஆய்ந்ததின் நிகர விளைவு யாதெனில் 26—11—1980 அன்று உண்டியல் காணிக்கைகள் கல்யாண 'மண்டபத்தில் வகை பிரிக்கப்பட்டு எண்ணப்பட்ட போது சரிபார்ப்பு அலுவலர் எண்ணுவதில் பங்கெடுத்துக் கொண்டிருந்த நபர்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொண்டிருந்த போது, 2850 ரூபாய் அளவுக்கு நாணயத் தாள்களை தனது இடுப்பில் திணித்துக் கொண்டதன் மூலம் அவற்றை திருடிய குற்றத்தை செய்தார் என்றும், அது ''அ'' சாட்சி "4'' ஆன கந்தன் என்பவராலும் தற்போது அடையாளம் தெரியாமல் உள்ள பொது மக்களைச் சேர்ந்த ஒருவராலும் கவனிக்கப்பட்டதென்றும், அதை அறங்காவலர் குழுத் தலைவருக்கு தொலைபேசியில் தெரிவித்தார் என்றும் அதன் பின் அறங்காவலர் குழு தலைவர் ஆய்வகத்தை நோக்கி வந்தார் என்றும், அவர் சிதம்பரநாதனைச் சந்தித்தார் என்றும், அவர்களிடமிருந்து திருட்டைப்பற்றி அறிந்தார் என்றும், அதன் பிறகு உடன் சென்று திருட்டைப் பற்றி தனக்கு வரப்பெற்ற தகவல் குறித்து சரிபார்ப்பு அலுவலரை நேருக்கு நேராகக் கேட்டார் என்றும், அதன்

பேரில் சரிபாரிப்பு அதிகாரி திருடியதை ஒப்புக் கொண்டு நாணயத் தாள்களை (ரூபாய் நோட்டுக்கள்) அளிக்க முனைந்தார் என்றும், அதற்குப் பிறகு நிர்வாக அதிகாரியும் வந்த போது அவரிடமும் சுப்பிரமணியபிள்ளை தான் திருடியதை ஒப்புக் கொண்டு 2850 ரூபாய் என்று சொன்னார் என்றும், அதன் பிறகு ஆணையருக்கும் துணை ஆணையருக்கும் தொலை பேசியில் தெரிவிப்பதற்காக அறங்காவலர் குழுத் தலைவர் தேவஸ்தான அலுவலகத்திற்குச் சென்றார் என்றும் அதற்கு பிறகு நிர்வாக அதிகாரியை அழைத்துவர ஆள் அனுப்பினார் என்றும், நிர்வாக அதிகாரியும் சரிபார்ப்பு அதிகாரியைக் கண்காணிக்குமாறு "அ" சாட்சி 3—ஐ விட்டுவிட்டு அதன் பிறகு அங்கே சென்றார் என்றும், ஆனால் சரிபார்ப்பு அதிகாரி குளியலறைக்குள் சென்று உள்ளுக்குள் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டார் என்றும், அதை முத்தையா தட்டிப் பார்த்தும் கூட பதிலேதும் வரவில்லை என்றும், ஆகையால் "அ" சாட்சி 3 சென்று நிர்வாக அதிகாரிக்கும். அறங்காவலர் குழுத் தலைவருக்கும் தகவல் தெரிவித்தார் என்றும் அவர்கள் இருவரும் "அ" சாட்சி 2 னுடனும் சட்டப் பேரவை உறுப்பினர் கேசவ ஆதித்தன் அவர்களுடனும் ஆய்வகத்தை நோக்கி விரைந்து வந்தார்கள் என்றும், காவலர் "அ" சாட்சி 8 ம் உதவி சப் இன்ஸ்பெக்டரும், அ. சா. 9 கூட அங்கே வந்திருந்தார்கள் என்றும் "அ.சா" ஒன்பதும் தோட்டி ஆறுமுகமும் பின்புறம் சென்றார்கள் என்றும் தோட்டி ஆறுமுகம் முதலில் பலகணி வழியாகப் பார்த்து சரிபார்ப்பு அதிகாரி தனது வேட்டியினால் கட்டப்பெற்று "சவர்பாத் பைப்பில் தொங்கிக் கொண்டிருக்கிறார்" என்று சொன்னார் என்றும் "அ" சாட்சி 9ம் பலகணி வழியாக பார்த்தார் என்றும் அதன் பின் அவர்கள் ஆய்வகத்திற்குள் சென்றார்கள் என்றும், "அ" சாட்சி 8 கதவை எட்டி உதைத்து திறந்தார் என்றும், உடல் கீழே இறக்கிக் கொண்டு வரப்பட்டு சாப்பாட்டுக் கூடத்தில் வைக்கப் பட்டது என்றும், "அ" தரப்புக் கூறும் கூற்றானது உண்மை யானதாகவே இருக்க முடியாது!"

இது நீதிபதி பால் எழுதியிருப்பது.

திட்டவட்டமாகச் சொல்லுகிறார், அது தற்கொலை அல்ல. ஏனென்றால் அது திருட்டே இல்லை.

எனவே திருட்டு நிருபிக்கப்படாத காரணத்தால் தற்கொலை என்ற நிகழ்ச்சிக்கு இடமே இல்லை. எனவே இப்படிச் சொல்லப்படுகின்ற இந்தக் கதையை நான் நம்ப

முடியாது. இது உண்மையாக இருக்க முடியாது என்று நீதிபதி பால் தெரிவிக்கிறார்.

ஆனால் நண்பர் எம். ஜி. ஆர்: சொல்லுகிறார்; அது தற்கொலையா? கொலையா? என்று பால் கமிஷன் எந்த முடிவும் கூறவில்லை என்று எம். ஜி. ஆர் சொல்லுகிறார்.

இறுதியாகச் சொல்லுகிறார் நீதிபதி பால்: 'சரிபார்ப்பு அதிகாரி கோவிலுக்கு வந்து சேர்வதற்கு முன்பே உண்டியல்கள் திறக்கப்பட்டன. அதனால், சரிபார்ப்பு அதிகாரி எதிர்ப்புத்தெரிவித்து எண்ணுவதில் தான் பங்கொடுத்துக் கொள்ளப் போவதில்லை என்றும் அதிகாரிகளிடத்தில் இது பற்றி அறிக்கை தரப் போவதாகவும் கூறி ஆய்வகத்திற்குச் சென்று விட்டார். அதன் பேரில் அவர் தாக்கப்பட்டு யாரோ ஒரு நபரால் அல்லது சில நபர்களால் அவருக்குத் தலையிலே காயங்கள் விளைவிக்கபபட்டன. அதன் விளைவாக அவர் உணர்வு இழந்தவரானார். அவர் குரல் வளையை நெறிப்பதற்கான முயற்சி கூடச் செய்யப்பட்டிருக்கலாம். மற்றும் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று தோன்றுமாறு செய்ய அவர் குழாயிலே தொங்கவிடப்பட்டார் என்று சந்தேகிப்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

சுருங்கச் சொன்னால் மரணம் விளைவிக்கக் கூடிய வன்முறையின் காரணமாக சரிபார்ப்பு அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை மரணத்தைச் சந்தித்தார் என்று நம்புவதற்கு போதுமான ஆதாரங்கள் உள்ளன!''

இதற்குப் பிறகும் எம். ஜி. ஆர். 'இதுகொலை என்று நீதிபதி பால் சொல்லவில்லை, என்று வாதிடுகிறார் என்றால் இவர்களிடத்திலே நீதி கிடைக்கும், நியாயம் கிடைக்கும்— இங்கு பேசிய நம்முடைய சீனிவாசன் குறிப்பிட்டதைப் போல் இவர்கள் ஒரு விசாரணை நடத்தினால் கூட—புலன் விசாரணை நடத்தினால் கூட—நீதி மன்றத்திலே வழக்கு மன்றத்திலே நாம் குறிப்பிடும் குற்றவாளிகளைக் கொண்டு போய் நிறுத்தினால் கூட, இந்தக் குற்றவாளிகள் தண்டிக்கப் படக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று கருதுகிறீர்களா?

சட்டமன்றத்திலே வாதிடுகிறார்கள்.

நீதிபதி பால் அளித்த அறிக்கைக்கு எதிர் அறிக்கை வைக்கிறார்கள்.

## அமைச்சர்கள் மிரட்டல் எங்களுக்குத் தெரியாதா?

இவ்வளவும் செய்துவிட்டு நாங்கள் புலன் விசாரணை செய்து கொண்டிருக்கிறோம், அதுவரையிலே பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாதா? என்று கேட்கிறார்கள். பொறுத்து கொண்டிருக்கக் கூடாதா? என்று நம்மைக் கேட்டுவிட்டு சுப்பிரமணியபிள்ளைமீது புகார் இருந்தது என்று சொல்லுகிறார்கள்.

சுப்பிரமணியபிள்ளை மீது புகார் இருந்தது என்று நிரூபிக்க அமைச்சர்களே ஆங்காங்கே செல்லுகிறார்கள்.

வீரமணி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல் வேதாரண்யத்திலே அவர் தவறு செய்தார், எந்தக் காலத்திலோ தவறு செய்தார் என்ற ஒரு பொய் சாட்சியத்தை உருவாக்குவதற்கு அமைச்சர் செய்த சுற்றுப் பயணமும் அதற்கு அதிகாரிகளை எல்லாம் வளைத்துப்போட்டு அவர்களை மிரட்டிய நிகழ்ச்சியும் எங்களுக்குத் தெரியாதவைகள் அல்ல

ஒரு ஆலயத்திலே உள்ள ஒரு அர்ச்சகரையே கூட அழைத்து சுப்பிரமணியபிள்ளை அவர்கள் உங்களுடைய மகளிடத்திலே தவறாக நடந்து கொண்டார் என்று ஒரு புகார் கொடுங்கள் என்று இப்பொழுது கேட்டு அந்த அர்ச்சகர் "ஒரு பெரிய மனிதருடைய வாழ்வைத்தான் முடித்தீர்கள். என்னுடைய மகள் வாழ்வையுமா கெடுக்க வேண்டும்? எழுதிக் கொடுக்க முடியாது" என்று கூறி மறுத்து விட்டார்.

இப்படி இறந்த ஒருவரைப் பற்றி புகார் கூறியது மாத்திரம் அல்ல. அவரை கள்வர் என்று சொன்னது மாத்திரமல்ல, அவர் கொல்லப்பட்டார். கொலைகாரர்கள் இன்னின்னார். அறங்காவலர் குழுவினுடைய தலைவர் பாலகிருஷ்ணன், சீனிவாச பாண்டியன், கேசவ ஆதித்தன், ராஜாராம் என்கின்ற ஒரு அதிகாரி, மகாதேவன் என்கின்ற ஒரு அதிகாரி அவர்கள் எல்லாம் இருந்தார்கள் எனவே இவர்கள் அவருக்கு முதல் உதவிகூட—அவர்களுடைய கருத்துப்படி—செய்யாததற்குக் காரணம், முதல் உதவி செய்து ஒருவேளை சுப்பிரமணிய பிள்ளை உயிர் பிழைத்து விட்டால் அவர் தருகின்ற மரணவாக்கு மூலம் தங்களுக்கு

எதிரிடையாக ஆகிவிடக் கூடும் என்று அஞ்சினர்கள் இவ்வாறு நீதிபதி பால் திட்டவட்டமாக தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிடுகின்றூர்.

## டாக்டர் கோபாலகிருஷ்ணு யார்?

சட்டமன்றத்திலே வீரப்பன் வாதிட்டார். மிக முக்கிய மான சாட்சி டாக்டர் கோபால கிருஷ்ணனுடைய சாட்சி.

டாக்டர் கோபால கிருஷ்ணனுடைய சாட்சியத்தை நம்பித்தான் இது கொலே என்று நீதிபதி பால் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறூர். அந்த டாக்டர் கோபால கிருஷ்ணன் யார் தெரியுமா??

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு முறையோ இரண்டு முறையோ பதவி நீடிப்புக் கொடுக்கப்பட்டவர். கோபால கிருஷ்ணனுடைய சாட்சியம் ஏற்றுக் கொள்ளத் தக்கது அல்ல என்று ஏதோ பத்தாண்டுகளுக்கு முன்பே பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பே சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அப்படிப் பட்டவர் சாட்சி யத்தை இப்பொழுது எப்படி ஏற்றுக் கொள்ளலாம் என்று கேட்கிறூர்!

யார் அந்த டாக்டர் கோபால கிருஷ்ணன் தெரியுமா?

1967-ம் ஆண்டில் எம். ஜி. ஆர் அவர்கள் சுடப்பட்ட போது நடைபெற்ற வழககில், நடிகவேள் எம். ஆர். ராதா, மீது குற்றம் சாட்டப்பட்டு குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப் பட்ட போது, எம். ஆர். ராதாவிற்காக வாதாடினர் மோகன் குமாரமங்கலம்.

எம்.ஆர். ராதாவும்—எம்.ஜி. ஆரும் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்து (ஸ்ட்ரக்கில்) சண்டை போட்டு அதிலே தவறி துப்பாக்கிக் குண்டு எம். ஜி. ஆருடைய கழுத்திலே பட்டது என்பது அவருடைய (மோகன் குமார மங்கலத் தினுடைய) வாதம்.

அப்பொழுது அந்தத் துப்பாக்கிக் குண்டு எவ்வளவு தொலேவிலே இருந்து பட்டிருக்கக் கூடும் என்பதை ஒரு நிபுணர்தான் சொல்ல வேண்டும் என்று ஒரு நிபுணரை அழைத்து அவருடைய சாட்சியத்தைக் கேட்டார்கள்.

அந்த நிபுணர் ஒரு எலும்புக் கூட்டை நிறுத்தி வைத்து துப்பாக்கியால் அதைச் சுட்டு, எவ்வளவு தொலேவிலே இருந்து சுட்டால் எந்த அளவிற்கு அது அந்த எலும்பிலே பாயும் என்பதைக் கண்டுபிடித்து எடுத்துக் காட்டி, ஆகவே இரண்டு பேரும் சண்டை போட்டுக் கொண்டு ஒருவரோடு

ஒருவர் கட்டி மோதி இந்த துப்பாக்கிச் சூடு நடைபெற வில்லை. எம். ஆர். ராதா தொலைவிலே இருந்துதான் சுட்டார். இவ்வளவு தொலைவில் இருந்துதான் சுட்டார் என்று அந்த நிபுணர் சாட்சியம் சொன்னார். அதன் காரணமாக எம். ஆர். ராதா ஏழாண்டு காலம் சிறைச் சாலைக்குச் செல்ல வேண்டியது இருந்தது.

அந்த நிபுணர் யார் தெரியுமா?

இதே டாக்டர் கோபால கிருஷ்ணன் தான்!

ஏதோ தி. மு. கழக ஆட்சி காலத்திலே டாக்டராக இருந்தாராம்; காங்கிரஸ் ஆட்சி காலத்திலே இருந்தவர் தான் அதற்காக, தி. மு. கழக ஆட்சிக் காலத்திலே, நீ காங்கிரஸ் ஆட்சி காலத்திலே டாக்டராக இருந்தாய். நிபுணராக இருந் தாய். அதனால் இனிமேல் நீ பதவியில் இருக்கக் கூடாது என்று விரட்டிவிட முடியுமா?

## நன்றி தெரிவிக்கவா சொன்னார்!

எம். ஜி. ஆருடைய வழக்கில், எம். ஜி. ஆருக்குச் சாதக வாக எந்த நிபுணர் அன்றைக்குச் சாட்சியம் அளித்தாரோ அதே டாக்டர் கோபால கிருஷ்ணன் தான் இன்றைக்கும் நீதி பதி பால் கமிஷனில் நீதிபதியால் அழைக்கப்பட்டு தன்னு டைய ஆற்றலை அவருக்குரிய நிபுணத் தன்மையை அங்கே எடுத்துக் காட்டி இது தற்கொலை அல்ல; இது கொலைதான். சுப்பிரமணியபிள்ளை கொலைதான் செய்யப் பட்டிருக்கிறார் என்ற கருத்தினை எடுத்துச் சொன்னார்.

நீதிபதி பால் அவர்களுக்குக் கிடைத்த பல்வேறு ஆதாரங்களில் பல்வேறு சாட்சியங்களில் டாக்டர் கோபால கிருஷ்ணன் அவர்களுடைய சாட்சியமும் ஒன்றாக அமைந்த காரணத்தினால் திட்டவட்டமாக, நீதிபதி பால் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது தற்கொலை அல்ல. தற்கொலை என்பது கட்டுக்கதை. சுப்பிரமணிய பிள்ளை திருடவில்லை. திருடினார் என்பது ஒரு கற்பனை. அவர் கொலைதான் செய் யப்பட்டிருக்கிறார்.

எனவே அந்தக் கொலைக்காரர்களைப் பிடிக்க வேண்டுமேயானால் யார் கொலைகாரர்கள் என்கிற உண்மையை தெரிந்து கொள்ள வேண்டுமேயானால் அறங்காவலர் குழு கலைக்கப்பட வேண்டும். விலக்க கப்பட வேண்டும் என்று திட்ட வட்டமாகச் சொன்னாரே அல்லாமல், ராஜினாமாச் செய்ய வேண்டு மென்றோ, அந்த ராஜினாமாவை ஏற்றுக்கொண்டு எம். ஜி.

ஆர். சட்டமன்றத்தில் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்றோ நீதிபதி பால் தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிடவில்லை.

இன்னொன்றையும் தெளிவாக நீதிபதி பால் தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டார்கள்.

நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு நான் (நீதிபதி பால் அவர்கள்) கடைசியாகச் சென்றபோது திரு. வேலுப்பிள்ளை. திரு. சங்கரலிங்கம், திரு. ஈஸ்வர அய்யர் ஆகிய மூவரும் என் முன்னால் வந்து வாய்மொழியாக முறையிட்டனர். மேலும் புகார் மனுக்களை அளித்தனர், அதில், அவர்கள் சில உண்மைகளைத் தெரிவித்தார்கள். டாக்டர் பால கிருஷ்ணன் தமது உயிருக்கு ஊறு விளைவிப்பதாய் அச்சுறுத்தியதின் காரணமாக தங்களது வீடுகளைவிட்டுப் புறப்பட்டு திருநெல் வேலிக்கு வந்து கமிஷன் முன் சாட்சியம் அளிக்க அஞ்சுவ தாகக் கூறினார்கள்.

மூன்று பேர் நீதிபதியை நேரிலே சந்தித்தே சொல்கிறார் கள் அந்தக் கோவிலினுடைய ஊழியர்கள் வேலுப்பிள்ளை, சங்கரலிங்கம், ஈஸ்வர அய்யர் இந்த மூன்றுபேரும் சொல் கிறார்கள். அவர்கள் புகார் மனுவும் தருகிறார்கள். ஆனால் "சாட்சியம் அளிக்க வா" என்று நீதிபதி பால் அவர்களைக் கேட்ட போது டாக்டர் பால கிருஷ்ணனுக்காக அஞ்சுகிறார் கள். அஞ்சவேண்டிய அவசியம் என்ன? ஒரு முக்கியமான சாட்சி— ஒரு துப்புரவுத் தொழிலாளி—தோட்டி ஆறுமுகம் என்று சொல்லப்படுகிற தோழர் இந்த வழக்கிலே முக்கிய மான சாட்சி. மர்மமான முறையிலே மரணமடைகிறார்.

சுருக்கமாகச் சொன்னால் கொலை செய்யப்படுகிறார் ஆறுமுகம்—அந்த ஆறுமுகத்தினுடைய கதி தங்களுக்கும் ஏற்படும் என்றுதான் இவர்கள் அஞ்சுகிறார்கள். அந்த அச்சம் நீங்க என்ன வழி?

அறங்காவலர் குழுவை கலைத்து விட்டு கலைச்த மறு நாளே அவர்களைக் கைது செய்து அதற்குப் பிறகல்லவா அவர் விசாரிக்கப் பட்டிருக்க வேண்டும்?

திருடினார்கள் பால் கமிஷன் அறிக்கையை என்பதற்கு புலன் விசாரணையெல்லாம் நடத்தி முடித்து விட்டா சதாசிவத்தை— சண்முகநாதனை— முரசொலி செல்வத்தை கைது செய்து வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

## தொலைபேசியில் கேட்ட கேள்விக்கு என்ன பதில்?

நான் இந்த நெடிய பயணத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு ஏழுமணிக்கு நான் ரயிலுக்கு செல்ல வேண்டுமென்றால் மாலை 6 மணிக்கு முதலமைச்சர் எம். ஜி ஆர் என்னோடு தொலை பேசியிலே பேசினார். "இந்த நெடிய பயணத்தை நிறுத்தக் கூடாதா!" என்று கேட்டார். 'ஏன்? என்று கேட்டேன்.

'அறங்காவவர் குழுவினர் அத்தனை பேரும் ராஜினாமாச் செய்து விட்டார்களே என்றார்.

"அறங்காவலர் குழு ராஜினாமா செய்தால் போதாது நீங்கள் அவர்களைக் கைது செய்ய வேண்டும்" என்று சொன்னேன்.

'சாட்சியங்கள் இல்லையே' என்று சொன்னார்.

"பால் கமிஷன் அறிக்கை போதாதா" என்று கேட்டேன்.

"அது போதுமானதாக இல்லை. இருந்தாலும் புலன் விசாரணை நடக்கிறது" என்கிறார்.

"ஐந்து மாதமாகவா புலன் விசாரணை" என்று கேட்டேன்.

கேட்டுவிட்டுச் சொன்னேன். "இவ்வளவு சடங்குகள், சம்பிரதாயங்கள் இதற்கு மாத்திரம் சொல்லுகிறீர்களே—ஆனால் சண்முகநாதனையும்—சதாசிவத்தையும்— செல்வத்தையும் அவ்வளவு அவசர, அவசரமாகக் கைது செய்தீர்களே! அதற்கு மாத்திரம் என்ன சாட்சியங்கள்" என்று கேட்டேன்.

கேட்டது மாத்திரமல்ல; 1977-ம் ஆண்டு இந்திரா காந்தி அம்மையார் தமிழகத்துக்கு வந்த போது கறுப்புக்கொடி காட்டிய நிகழ்ச்சியையொட்டி இந்திரா காந்தி அம்மையாரையே கொலை செய்ய கருணாநிதியும், பேராசிரியர் அன்பழகன் அவர்களும், கழகப் பொருளாளர் சாதிக்பாட்சாவும். இங்கே இந்த மேடையிலே வீற்றிருக்கின்ற நம்முடைய கழகத்தினுடைய முன்னோடிகள் பலரும் தென்மாவட்டங்களிலே உள்ள செயலாளர்களும், கோவை மாவட்டச் செயலாளர்களும், சேலம் மாவட்டத்திலே உள்ளவர்களும் அத்தனை பேர்களும் இந்திரா காந்தியைக் கொல்லுகிற முயற்சியிலே ஈடுபட்டார்கள் என்று எங்கள் மீது 302-ம் 307-ம் 120 பி செக்ஷனும் போட்டு ஐந்தாண்டு

காலமாக நீதி மன்றத்திற்கு எங்களை நடக்க விட்டுக் கொண்டிருக்கிறீர்களே அந்தப் பொய் வழக்கிற்கே—இல்லாத ஒரு காரியத்திற்கே நீங்கள் வழக்குப் போடுகிறீர்கள் ஏன் இந்த உண்மையான நிகழ்ச்சிக்கு நீங்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை" என்று நான் டெலிபோனிலே கேட்டேன்.

கருணாநிதி அப்படிப் பேசவில்லை என்று அவரால் சொல்ல முடியாது. ஏனென்றால் என்னுடைய டெலிபோன் டேப் செய்யப்படுவது எனக்குத் தெரியும்.

அவரும் நானும் பேசியதும் டெலிபோன் இலாகாவிலே டேப்பிலே எடுக்கப்பட்டு, அது எம். ஜி ஆரிடத்திலே தரப்பட்டிருக்கும். அவரே போட்டுப் பார்த்துக் கொள்ளட்டும்—கேட்டேனா—இல்லையா என்பதை!

ஆக கருணாநிதி இந்திரா காந்தியைக் கொலை செய்ய முயற்சித்தான். 77 முதல் வழக்கு பேராசிரியர் அன்பழகன், சாதிக் பாட்சா—இவர்கள் எல்லாம் கொலை முயற்சிலே ஈடுபட்டு சதி நடத்தினார்கள். 5 ஆண்டு காலமாக வழக்கு இன்னும் வழக்கு முடியவில்லை. 135 பேர்கள் மீது குற்றச் சாட்டு. 440க்கு மேற்பட்ட சாடசிகளுடைய விசாரணை.

நாலு சாட்சியோ, ஐந்து சாட்சியோ முடிந்திருக்கிறது இதற்கிடையிலே இந்திரா காந்திக்கும் எங்களுக்கும் தேர்தல் உறவு ஏற்பட்டு பாராளு மன்றத் தேர்தல் முடிந்து—சட்ட மன்றத்தேர்தல் முடிந்து நானும் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவாகளும் ஒரே மேடையிலே பல ஊர்களிலே பேசியும் ஆகிவிட்டது.

இதற்கிடையிலே கொலை வழக்கு—கொலை முயற்சி வழக்கு நீடித்துக் கொண்டே இருக்கிறது.

இப்படி எதிர்க் கட்சிகளைப் பழிவாங்குவதிலே காட்டுகின்ற ஆர்வமும் அக்கறையும் ஏன் உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதிலே காட்டப்படுவதில்லை.

நான் திருச்செந்தூர் பொதுக்கூட்டத்திலே சொன்னது போல் இது சுப்பிரமணியபிள்ளை என்கின்ற ஒரு தனி மனிதனுடைய கொலைக்காக மாத்திரம் நாங்கள் நீதி கேட்டுப் புறப்படவில்லை.

எத்தனையோ கொலைகள் கண்டுபிடிக்கப் பட முடியாமல் —தடயங்கள் இல்லாமல் அப்படியே விடப்பட்டு விடுகின்றன.

எம். ஜி. ஆர். ஆட்சிக்காலத்திலே எத்தனை கொலைகள், இந்திரா நகர் பிரேமாவிலே இருந்து மதுராந்தகம் ஞான

சௌந்தரிவரையில் எத்தனை கொலைகள் போலீசாரால் கண்டு பிடிக்கப்படாமல் போய்விட்டன என்ற பட்டியலை பேராசிரியர் இங்கே படித்துக் காட்டினார். உங்களிடத்திலே விளக்கினார்.

அதைப்போல பக்தவத்சலம் அவர்கள் காலத்திலேகூட சில கொலைகள் கண்டு பிடிக்கப்படாமல் போய் இருக்கலாம்.

நான் முதலமைச்சராக இருந்தபோதுகூட தடயங்கள் இல்லாமல் சில கொலைகள் கண்டுபிடிக்கப்படாமல் போய் இருக்கலாம்.

அண்ணா ஆட்சிக் காலத்திலே கூட அப்படி ஏற்பட்டிருக் கலாம்.

காமராஜர் ஆட்சிக் காலத்தில்—மூதறிஞர் ராஜாஜி ஆட்சிக் காலத்திலே கூட சில கொலைகள் கண்டுபிடிக்க முடி யாமல் போய் இருக்கலாம்.

ஆனால், இது முற்றிலும் வேறான நிகழ்ச்சி;

இது கொலைதான் என்று அந்த வட்டாரத்து மக்கள் அத்தனை பேராலும் தீர்மானிக்கப்பட்டு ஒரு கட்சி அல்ல, இரண்டு கட்சி அல்ல, அனைத்துக் கட்சிகளும்—தி. மு. கழகம் இந்திரா காங்கிரஸ், திராவிடர் கழகம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், கம்யூனிஸ்ட் கட்சிகள், ஜனதா கட்சி, மக்கள் கட்சி, பார்வர்டு பிளாக் கட்சி, காமராஜர் பெயரால் இருக் கின்ற இரண்டு காங்கிரஸ் கட்சிகள் ஆக அத்தனை கட்சிகளும் இது கொலைதான் என்று எடுத்துக்கூறி, கொலையா— தற் கொலையா என்ற கேள்விக்கு விடை அளிக்க முடியாத நிலை யில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு, நியமிக்கப்பட்ட கமிஷன் கொலைதான் என்று கூறிய பிறகும் அந்தக் கமிஷனுக்கு ஒரு மறுப்பறிக்கை தருகின்ற காரணத்தினாலே தான் இங்கே நீதி திட்டமிட்டு வளைக்கப்படுகிறது; நீதியின் குரல்வளை நெரிக்கப்படுகிறது.

சனநாயகத்தில் நீதி — நிர்வாகம் — ஆட்சி மன்றம் இந்த மூன்றும் முக்கியமானவை.

நிர்வாகம் சீர் குலைந்தால் சிக்காகி விட்ட கூந்தலை மீண்டும் சிக்கெடுப்பதைப் போல சரி செய்துவிடலாம்.

ஆட்சியிலே தவறு ஏற்பட்டு விட்டால், ஆடை கசங்கி விட்டால், வேறு ஆடை மாற்றிக் கொள்வது போல வேறு ஆட்சியை உருவாக்கலாம்.

ஆனால் நீதியினுடைய கழுத்து நெரிக்கப்பட்டுவிட்டால் என்ன ஆவது? என்ற வினாக் குறியினுடைய விளைவுதான் நாங்கள் நடத்திய நெடிய பயணம்.

நாங்கள் நீதி— எம். ஜி. ஆரிடத்திலே கேட்டுக் கேட்டுப் பார்த்தோம். இங்கே இல்லை. இனிக் கேட்டுப் பயனில்லை என்பதற்காகத்தான் மக்கள் மத்தியிலே நீதி கேட்கப் புறப் பட்டு இருக்கிறோம்.

இன்று நீதி கேட்கப் புறப்பட்டு இருக்கிறோம். மக்களாகப் பார்த்து நீதியை வழங்கக் கூடிய காலம் வெகு விரைவிலே வரும் என்ற நம்பிக்கையோடுதான் இந்தப் பயணத்தை மேற்கொண்டோம்; இந்தப் பயணம் வென்றிட உங்களுடைய ஆதரவு தேவை என்று கூறி நீங்கள் அளித்த இனிய வாழ்த்துக்களுக்கும் பாராட்டுகளுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# "நடந்தாய் வாழி கண்மணியே"
# கலைஞர் கடிதம்

**உடன் பிறப்பே**

> **"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப**
> **மணிப்பூ ஆடை அது போர்த்துக்**
> **கருங் கயற்கண் விழித்தொல்கி**
> **நடந்தாய் வாழி காவேரி!"**

காவேரி நடந்து செல்கிற அழகைக் காவியப் புலவர் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இப்படி சிறப்பிக்கிறார்! இருபுறமும் வண்டுகள் இசைபாடி மொய்த்திடுகின்ற வண்ணவண்ண மலர்களால் ஆன ஆடையைப் போர்த்துக் கொண்டு கயல் மீன்கள் போன்ற கரிய கண்களை விழித்த வாறு ஒதுங்கி நடக்கிறாளாம் காவேரி! நடந்திடும் அந்த நங்கையை வாழ்த்துகிறார் அடிகள்!

அந்த நடையின் எழிலுக்குக் காரணத்தையும் கூறுகிறார் இளங்கோ!

> **"கருங்கயற் கண் விழித் தொல்கி**
> **நடந்தவெல்லாம் நின் கணவன்**
> **திருந்து செங்கோல் வளையாமை**
> **அறிந்தேன் வாழி காவேரி"**

உன் அன்புக் கணவன் சோழ மன்னனின் கரத்தில் உள்ள செங்கோல் வளையாத காரணத்தினால்தான் நீ இப்படி அழகிய கயற்கண்களை விழித்து ஒதுங்கி நடக்கிறாய் என் பதை நானறிந்துள்ளேன் என்று வளையாத செங்கோல்

கொண்ட சோழ வளவனையும் மறைமுகமாக வாழ்த்தி மகிழ்கிறார்!

"நடந்தாய் வாழி காவேரி!" இந்தச் சொல்லோசை தரும் சுவையால் சிலப்பதிகாரக் கானல்வரிப் பாடல்களை நான் பலமுறை படித்துக் களித்த துண்டு!

நெடிய பயணத்தில் நீ நடக்கும் போதும் "நடந்தாய் வாழி கண்மணியே!" என்று என் நா, மெல்ல அசைந்து கொண்டுதானிருந்தது!

வளம் மலிந்த பகுதியில் காவேரி நடந்தாள்—நடக்கிறாள்—நீயோ; என் உயிர் உடன்பிறப்பே! வறண்ட நிலப் பகுதியில் அல்லவோ; கொளுத்தும் வெயிலில்—தகிக்கும் சாலையில் கால் ஊன்றி—(அய்யோ அந்தக் கால்கூட சில நூறு பேர்களுக்கு இல்லையே—) நடந்திட்டாய்!

**"பூவார் சோலை மயிலாலப்**
**புரிந்து குயில்கள் இசைபாடக்**
**காமர் மாலை அருகசைய**
**நடந்தாய் வாழி காவேரி!"**

இயற்கையின் எழிற்கொடையும் வளப்பெருக்கும் இடைவெளியின்றி நிறைந்து காணும் சோலைகள்—சுந்தர மயில்கள், சோபிதக் குயில்கள், இன்னோரன்ன இனிய சூழலுக்கிடையே காவேரி நடந்திடும் காட்சியையா என் கழகத்துக் கண்மணியே; நீ நடந்திடும் போது சாலையின் இருமருங்கிலும் காண முடிந்தது? இல்லையே! இல்லையே! இளைப்பாறி நிற்கக்கூட ஒரு மரம் இல்லையே!

அந்தக் கடும் பாதையில் அல்லவா ஈரோட்டுத்துணிவையும் காஞ்சியின் கனிவையும் இதயத்தில் ஏந்திக் கால்கள் நடை போட்டன.

காவேரியின் நடைக்குக் கவிஞர் பெருமான் இளங்கோவடிகள் காரணத்தைக் கண்டறிகிறார்! செங்கோல் வளையாத அரசின் பெருமையால் காவேரியின் நடையில் ஏற்றம் காண்கிறார்!

கழகத்தின் உயிரே! நீ நடந்ததற்குக் காரணம் முற்றிலும் மாறுபட்டதன்றோ!

**வளையாத செங்கோலை வாழ்த்திப் பொன்னி நதியாள் நடந்தாள் என்று வாயாரப் போற்றுகிறார் இளங்கோ!**

**இங்கோ நாம்; வளைந்த செங்கோலை வையத்திற்குணர்த்திடவன்றோ வைகை முதல் தாமிர பரணி தீரம் வரையில் நமை வதைத்துக் கொண்டு நடந்தோம்!**

திருச்செந்தூர் ஆலயத்து விவகாரத்தில் மட்டுமல்ல; தினம் தினம் இந்த ஆட்சியில் நீதியின் நீள்விழிகள் திட்ட

மிட்டுக் குத்தப்படுகின்ற கொடுமைக்கோர் முடிவு காணவே, நமது நெடிய பயணம் தொடங்கியது!

அது, முடிந்துவிட்ட பயணமல்ல! சமூக நீதி கேட்டு சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய பயணம்; எல்லாத் துறையிலும் நீதியை நிலைத்திடச் செய்யும் வரையில் நின்றிடப் போவதில்லை!

செந்தூர்க் கடற்கரையுடன் நமது பயணம் முழுமையடைந்து விட்டதாகக் கருதிக் கொள்ளாதே!

இது தொடர்பயணம்! தொல்லைகள் தொகை தொகையாக வரினும் "தூ!" வென்றிகழ்ந்து விட்டுக் குறிக்கோளை நோக்கித் தொடர்ந்து கொண்டேயிருக்கும் பயணம்!

இலட்சியப் பயணத்தில் ஒரு கட்டமே இப்போது மேற்கொண்ட இனடயூறு மலிந்த நெடிய பயணம்!

எட்டு நாட்கள்!

இருநூறு கிலோ மீட்டர்கள்;

இரண்டு லட்சம் பேர்!

புதிய சரித்திரம்தான்! புரட்சி அத்தியாயம் தான்! நீயும் உன் நெஞ்சில் உறுதியும் இருக்கும் வரையில் இதை விடக் கடுஞ்சோதனைகளை ஏற்றிடவும் நமது கழகம் தயார்! தயார்!

இதைப்பலமுறை—பல சோதனைகளில் எனக்குச் செயல் மூலம் உணர்த்திய உடன் பிறப்பே!

இப்போதும் என் வேண்டுகோளை ஏற்று—என்னைப் பின் தொடர்ந்த உனக்கு எப்படி நான் நன்றி சொல்வேன்!

"நடந்தாய் வாழி கண்மணியே!" என வாழ்த்துகிறேன்; "இனியும் நடப்போம் வா!" என்பதற்கு அச்சாரமாக!

அன்புள்ள

மு. க.

# மழையில் நனையும் மண்ணாங்கட்டி!
# (கலைஞர் கடிதம்)

உடன் பிறப்பே,

மயிலை மாங்கொல்லையில் அறநிலையத்துறை அமைச்சர் ஆர்ப்பரித்திருக்கிறார். இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா? என்பது போல அறைகூவல்களை அள்ளி வீசியிருக்கிறார்! அவரது பேச்சின் முக்கிய பகுதிகள் ஏடுகளில் வெளி வந்துள்ளன.

> "குற்றவாளியென்று யாரையுமே குறிப்பிட்டுப்பால் கமிஷன் அறிக்கையில் கூறவே இல்லை. குற்றவாளியை மறைக்கப் பார்க்கிறார்கள் என்று கருணாநிதி கூறுகிறார். குற்றவாளியென்று யாரைப் பிடிக்கச் சொல்கிறார்? தைரியமாக அதையாவது வெளியே சொல்லட்டும்; அதற்கும் தைரியம் இல்லை."

இது அமைச்சரின் வீராவேசப் பேச்சில் ஒரு பகுதி!

பால் கமிஷன் அறிக்கை குறித்தும் அதற்கு எதிராக அரசின் சார்பில் வைக்கப்பட்ட அறிக்கை குறித்தும் சட்டப் பேரவையில் நடந்த விவாதத்திலேயே வீரப்பனின் மயிலாப்பூர் மாங்கொல்லைக் கேள்விக்கு விளக்கமாகப் பதில் அளித்திருக்கிறேன்.

> "நீதிபதி பால் தெரிவித்துள்ள முடிவான கருத்து யாது?"

> "சுப்பிரமணியபிள்ளை கோவிலுக்கு வந்து சேருவதற்கு முன்பே உண்டியல்கள் திறக்கப்பட்டு விட்டன. அதுகண்ட சுப்பிரமணியபிள்ளை எதிர்ப்பு தெரிவித்து, எண்ணுவதில் கலந்து கொள்ளாமல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் போவதாகச் சொல்லி விட்டு ஆய்வகம் சென்றுவிட்டார். அதன்பேரில் அவர் தாக்கப்பட்டு அவருக்குக்காயங்

கள் விளைவிக்கப்பட்டன. அதன் விளைவாக அவர் உணர் விழந்தார். அவரது குரல் வளையை நெறிப்பதற்கான ஒரு முயற்சி கூட செய்யப்பட்டிருக்கலாம். அவர், தற்கொலை செய்து கொண்டார் என்று தோன்றுமாறு செய்ய அவர் துவலைக் குழாயில் தொங்கவிடப்பட்டார் என்று சந்தேகிக்க ஆதாரங்கள் உள்ளன. சுருங்கச் சொன்னால் மரணம் விளைவிக்கக் கூடிய வன்முறையின் காரணமாக அவர் தனது மரணத்தைச் சந்தித்தார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன.''

நீதிபதியின் இந்த அறிக்கையைத்தான் ''விசாரணை வரம்பை மீறியது'' என்று அரசு ஆணை குறிப்பிடுகிறது.

மரணம் அடைந்ததற்குக் காரணமான —சூழ்நிலை குறித்து விசாரணை நடத்தச் சொன்னீர்கள். நடத்தி அந்த நீதிபதி காரணத்தை அறிவித்திருக்கிறார்.

இத்தகைய நிகழ்ச்சி மீண்டும் நடக்காமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கச் சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் அவர் பரிந்துரைத்துள்ளார்.

நடந்த நிகழ்ச்சிக்கு எடுக்கும் நடவடிக்கைதான் இதைப்போன்ற நிகழ்ச்சிகள் மீண்டும் நடக்காமல் தடுப்பதற்கு ஏற்ற பரிந்துரை அல்லவா? அதை எப்படித் தவறு என்கிறீர்கள்?''

இவ்வாறு சட்டப் பேரவையில் கேள்வி எழுப்பிய நான்;

தொடர்ந்து பேசியபோது கூறியதாவது:—

''பால் கமிஷன் குற்றவாளிகளை யார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லையே என்று கேட்கிறார்கள். அதற்கிடையே குற்றவாளிகளைக் கைது செய்வது எப்படி என்று எல்லா எதிர்க் கட்சிகளையும் சேர்த்துத்தான் அந்தக் கேள்வியைச் கேட்டிருக்கிறார்கள்.

பால்கமிஷன் அறிக்கையின் 44, 45-வது பக்கங்களில் குற்றவாளிகள் யார் என்பதைக் குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறார்கள். நான் சுருக்கமாகப் படிக்கிறேன்.

"சரிபார்ப்பு அதிகாரிக்கு உடனடியாக அவர்கள் முதல்உதவி அளிக்கவோ அவருக்கு மூச்சுவரச் செய்யவோ சிகிச்சை அளிக்கவோ முன் வரவில்லை என்றும்—ஏனென்றால் அவருக்கு மூச்சு வந்து உணர்வு பெற்றால் அவர்களுக்கு எதிராக மரண வாக்குமூலம் கொடுக்கக் கூடும் என்று அவர்கள் அச்சப்பட்டனர் என்றும்; 'ஆ' தரப்பினரின் வழக்கறிஞர் கூறிய வாதத்திற்கு இவர்களின் விசித்திரமான போக்கு ஆதரவாகிறது" என்று நீதிபதி பால் குறிப்பிடுகிறார்.

"அவர்களுக்கு எதிராக மரண வாக்கு மூலம் தரக் கூடும்" என்று பால் குறிப்பிடுகிறார். அவர்களுக்கு எதிராக என்பதில் "அவர்கள் யார்?" என்பதையும் பால் தன்னுடைய அறிக்கையின் 44—வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்.

அப்போது அந்த ஆய்வகத்தில் இருந்தவர்கள் யார் யார்? அங்கே யார் யார் இருந்தார்கள் என்று சொல்கிறார்?

டாக்டர் பால கிருஷ்ணன்;
சீனிவாச பாண்டியன்;
கோவில் சூப்பரின்டெண்ட் மகாதேவன்;
நிர்வாக அதிகாரி புாசாராம்;
கேசவ ஆதித்தன் எம். எல். ஏ;

ஆகியோர் இருந்திருக்கிறார்கள் என்று நீதிபதி பால் 44-ஆம் பக்கத்தில் குறிப்பிட்ட பிறகும்,

குற்றவாளிகள் யார் என்று இன்னமும் அரசாங்கத்திற்கு தெரியவில்லை என்றால் நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன்: தெரிந்தும் தெரியாததைப் போல் இருக்கிறார்களா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்."

பிப்ரவரி 13-ஆம் நாள் முதலமைச்சருக்கு நேராக—வீரப்பன் உட்பட மற்ற அமைச்சர்களுக்கு நேராக—சட்டப் பேரவையில் இவ்வளவு தெளிவாகக் குற்றவாளிகளைச் சுட்டிக் காட்டிய பிறகும், "குற்றவாளிகள் யார்?" என்று

கருணாநிதியால் தைரியமாகச் சொல்ல முடியுமா என்று மாங்கொல்லையில் மார் தட்டுகிறாரே மந்திரியார்; மக்களை இன்னமுமா ஏமாளிகளாக எண்ணிக் கொண்டிருக்கிறார்!

"யார் யாரோ எதையெல்லாமோ எழுதுகிறார்கள். அதிகாரி சுப்ரமணிய பிள்ளையின் உடலில் ரத்தக்கறை இல்லை! அதிகாரிவராமலே உண்டியல் உடைக்கப்பட்டது என்கிறார்கள். ஆனால் அதிகாரி வந்து பார்த்த பிறகுதான் உண்டியல் உடைக்கப்பட்டது. அதிகாரியை அடித்துக் கொன்றதாகச் சொல்கிறார். ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப்பட்ட மோசடியில் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்கது."

1980 டிசம்பர் 4 ஆம் நாள் நிருபர்களுக்கு மேற்கண்ட வாசகங்களை அறிக்கையாக அல்லது பதிலாகத் தந்தது அதிகாரிகள் யாருமல்ல; அமைச்சர் வீரப்பனேதான் தலைமைச் செயலகத்தில் அமைச்சர் என்ற முறையில் தந்தார்!

இப்போது நீதிபதி அறிக்கையில் சுப்பிரமணியபிள்ளை வன்முறையின் காரணமாகத்தான் மரணத்தைச் சந்தித்தார் என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே மோசடியில் ஈடுபட்டது யார்? கொலையைத் தற்கொலையெனக் கூறி, கொலைகாரர்களுக்கு உடந்தையாக இருக்கும் அமைச்சர்தானே மோசடிக்காரர்!

உண்மைகள் இப்படி உள்ளங்கை நெல்லிக் கனிபோல் துல்லியமாக வெளி வந்த பிறகும்—அறங்காவலர் ராஜினாமா என்ற நாடகத்தை நடத்தி, அதற்குப் பேரவையிலும் முதலமைச்சர் நன்றி தெரிவித்து—ஒரு படுகொலையைத் திட்டமிட்டு மறைக்கும் பாவிகளுக்கு—அவர்களே நியமித்த நீதிபதி எடுத்துக் காட்டிய பிறகும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எத்தர்களுக்கு—மக்கள் மன்றம் நீதி வழங்கப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை! அதற்கிடையே மாங்கொல்லைகளில் மந்திரிமார்கள் மமதை கொழிக்க உதிர்த்திடும் வார்த்தைகள் மழையில் நனையும் மண்ணாங் கட்டிகளுக்குச் சமமே!

அன்புள்ள,

மு. க.

# கலைஞரின் பிற நூல்கள்

ரோமாபுரிப் பாண்டியன்

புதையல்

கலைஞரின் கவிதைகள்

கலைஞரின் சிறுகதைகள்

அரும்பு

பேசும் கலை வளர்ப்போம்

இலங்கைத் தமிழா! இதுகேளாய்!

யாரால்? யாரால்? யாரால்?

ஒரே ரத்தம்

மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று

புனிதராஜ்யம்

வண்டிக்காரன் மகன்

தேன் அலைகள்

இனியவை இருபது

பரதாயணம்